# Dr.M.Parasuraman

## A Biography - Life in Dedication



தமிழ்வேள் – வைத்தியகலாநிதி

# மா.பரசுராமன்

## சுவாமிவிபுலாநந்த அடிகளின்

திருவுருவச்சிலையின் முன்னோடி

சுவாமிவிபுலாநந்த அடிகளின்

திருவுருவச்சிலையின் முன்னோடி

தமிழ்வேள் வைத்தியகலாநிதி

# மா.பரசுராமன்

**D.I.M.S., R.M.P.**

அவர்களின் வாழ்க்கை வரலாறு

## அனுஜானி வெளியீடு-4

தொகுப்பாசிரியர்
அஜந்தா ஞானமுத்து
(சக்திசாந்தன்)

Canada
2006-11-25


# பதிப்புத்தகவல்

நூற்பெயர்
சுவாமிவிபுலாநந்த அடிகளின் சிலையின் முன்னோடி தமிழ்வேள் வைத்தியகலாநிதி மா.பரசுராமன்

தொகுப்பாசிரியர்
அஜந்தா ஞானமுத்து (சக்திசாந்தன்) — **Ajantha Gnanamuttu**, **Canada**

உதவி
ஆனந்தமகேஷ்வரன் கந்தவனம் — **K.Ananthamgeswaran**, **Denmark**

ஆலோசகர்
கலாநிதி க.தா.செல்வராசகோபால் (ஈழத்துப்பூராடனார்)

| அளவு | பக்கம் | பிரதிகள் |
|---|---|---|
| 5" X 8" | 223 | 1000 |

வெளியீடு
அனுஜானி வெளியீடு- 4 — **ANUJANI PUBLICATION - 4**

முதலாவது வெளியீட்டுத்தினம்
நொவம்பர்-25-2006 (முதலாவது சிராத்த்ததினம்)

இரண்டாவது வெளியீடு

வடிவமைப்பு — **Design**
அனுஜன் ஞானமுத்து, — **Anujan Gnanamuttu**
அனோஜ் ஆனந்தமகேஷ்வரன் — **Anoj Anandamageswaran**

பதிப்பு வெளியீட்டு உரிமை
அனுஜானி வெளியீடு

# நன்றி நவில்கின்றோம்

டிசம்பர் 5ஆந்திகதி 2005அன்று அன்பிற்கும் பாசத்திற்கும் இலக்கணமாக விளங்கிய எங்கள் தந்தையின் மரணத்தின்போது அனுதாபச் செய்தி களையும் ஆறுதல் வார்த்தைகளும் கூறி அரவணைத்தவர்களையும் எங்களோடு தங்கள் துக்கத்தினைப் பகிர்ந்துகொண்டவர்களுக்கும் நாங்கள் நன்றி கூறுகின்றோம். எங்கள் தந்தையாரது பூதவுடலை மட்டக்களப்பிலிருந்து காரைதீவிற்கு எடுத்து வருவதற்கு ஹர்த்தால் காரணமாக ஏற்பட்ட இடையூறுகளின் போது அதற்கான ஏற்பாடுகளைச் செய்த மகாலிங்கம் குஞ்சப்பாவிற்கும் எங்கள் நன்றிகள்.

எல்லாவற்றிற்கும் மேலாக எங்கள் தந்தை மார்படைப்பால் அவதியுற்றபோது நடைபெற்ற ஹர்த்தால் வீதித்தடை போன்றவற்றை துச்சமெனமதித்து அவரை தன் தந்தையைப் போல் மட்டக்களப்பிற்கு அழைத்துச் சென்ற எங்கள்சகோதரன் நிமாலுக்கும் அவரது குடும்பத்திற்கும் அவ்வேளையில் எங்கள் அம்மாவிற்கு உறுதுணையாக நின்ற எங்கள் அம்மாவின் சகோதரங்கள் அவர்கள் குடும்பத்தா ருக்கும் சிறப்பாக மதுரமாமாவிற்கும் பாசம்கலந்த நன்றியை தெரிவிப்பதோடு மேலும்மரணச்சடங்கில் தனது இயலா மையிலும் கலந்துகொண்ட இராமகிருஷ்ணமிசன் தலைவர் சுவாமிஜீவாநந்தஜீ அவர்கட்கும் இக்கட்டான வேளையிலும் மரணச்சடங்கில் கலந்துகொண்ட அம்பாரை மாவட்டபாராளு மன்ற உறுப்பினர் திரு.கனகசபை பத்மநாதன் அவர்களுக்கும் காரைதீவில்வாழும் எங்கள் உற்றார்,உறவினர்கள் நண்பர்கள் யாவருக்கும் இதயத்தின் அடித்தளத்திலிருந்து நன்றிகூறிக் கொள்கின்றோம்.

கனடா,டென்மார்க் மற்றும் பிறநாடுகளிலும் வாழும் நண்பர்களும் எங்கள் தந்தையின் மரணச்செய்தியறிந்து துக்கம் விசாரித்து தங்கள்அநுதாபங்களைத் தெரிவித்ததோடு 25-11-2006அன்று நடைபெற்ற ஆண்டுத்திதியிலும் கலந்து நிறைவு செய்தமைக்கும் அன்று வெளியிடப்பட்ட எமது தந்தையார் பற்றியநூலுக்கான ஆக்கங்களை பெருமனதுடன் எழுதிய அறிவுசால் பெரியவர்களுக்கும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**வணக்கத்துடன்**
**ஜெயரமணி ஆனந்தமகேஷ்வரன்**
**டென்மார்க்**

# நூல் உள்ளடக்கம்


பதிப்புத்தகவல்----------------------------------------------------------------4

நன்றி நவில்கின்றோம்--------------------------------------------------5

நூலுக்கான பெயர்பற்றி------------------------------------------------8

தொகுப்பாசிரியரின் பார்வையில்--------------------------------------11

வாழ்க்கைவரலாற்றுகுறிப்பு---------------------------------------------14

**வாழ்க்கைப்படத்தொகுப்பு**-குடும்பம் (8-பக்கங்கள்)---------19

தகப்பன் ஆனவர்----------------------------------------------------------28

காரைதீவின் வளமும்
டாக்டர் மா.பரசுராமன் அவர்களின்வாழ்வும்-------------------33

எம்மண்ணில் என்றும்வாழும் சாதனையாளர்----------------44

பத்தினிதெய்வத்தின் பக்திதொண்டர்…-----------------51

கண்ணகிஅம்மன்ஆலைய திருப்பணி-----------------------------58
**(படத்தொகுப்பு** 4 பக்கங்கள்)

ஆலமர நிழலானார்…-------------------------------------63

தெய்வமாக நடமாடினார்------------------------------------------------70

ஸ்ரீராமகிருஷ்ணமிசனின் அன்புத்தொண்டர்---------------------74

விபுலாநந்தர்நினைவுப்பணி நிறுவனர்-----------------------------78

சுவாமிவிபுலாநந்தரின் பணிகளும் மணிமண்டபமும்-------82
**(படத்தொகுப்பு)** (6 பக்கங்கள்)

Our loving Grandfather!!----------------------------------89

A Poem about my Grandfather------------------------------------91

சான்றோரைப்போற்றுமின்!! அவர்புகழ் ஏத்துமின்!!---------------92

தலைவராகப்பிறந்தவர்--------------------------------------------------------105

நினைவுபடுத்தியசாதனையால்
நினைவுகூரப்படவேண்டியவர்----------------------------------------------109

கிழக்கில்கிளர்ந்தபழந்தமிழ்வேள்-------------------------------114

என்மனதிற்பட்டவை…------------------------------------------123

Some Sgnificant Biographical Notes
about the late Dr.M.Parasuraman ---------------------------130

கிராமசபைத்தலைவராக சமூகப்பணிகளின் சாதனை
**(படத்தொகுப்பு)** (6 பக்கங்கள்)------------------------------------------136

A Life in Dedication-------------------------------------------143

Vipulananda' End (From Vipulananda A Biography)-----149

2003ல் கனடா நினைவுவிழா விபுலம் மலரிலிருந்து
1969ல் அடிகளார்படிவமலரிலிருந்து------------------------------------155

விபுலாநந்தரின் வாரிசு ஸ்ரீமத்சுவாமி நடராஜாநந்தஜீ-----------173

மரணச்சடங்கின்போது ஊர்மக்களால் வெளியிடப்பட்ட
அஞ்சலி பா(2 பக்கங்கள்)-------------------------------------------------178

அமரர் மா.பரசுராமன் அவர்களின் வாழ்க்கை வரலாற்று
வெண்பா (ஜீவாபதிப்பக இணைப்பு)----------------------------------183

அமரர் ம. சற்குணம் அவர்களின் வாழ்க்கை வரலாற்று
வெண்பா (ஜீவாபதிப்பக இணைப்பு)----------------------------------199
சிவநேசச்செல்வர் அமரர் த.பொன்னையா ஓவிசியரின்
வாழ்க்கை நினைவுவெண்பா- புலவர்மணி---------------------------

# நூலுக்கானபெயர் பற்றி…..

மட்டக்களப்பிலே விபுலாந்தஅடிகளாரின் நினைவுச் சிலை 1963ஆம்ஆண்டில் நிறுவப்பட்டதையிட்டு அறியக் கிடக்கின்றது. அமிர்தகழியைச்சேர்ந்த வைத்திய கலாநிதி ஜோசப் ஞானப்பிரகாசம் அவர்களால் வடிவமைத்து உருவாக்கியசிலை மட்டக்களப்பு முற்றவெளியில் பிரதிஷ்டை பண்ணப்பட்டதையடுத்து கல்லடிஉப்போடையில் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் திருவுடல்அடக்கம் செய்யப்பட்ட சமாதிக்குமுன்னால் விபுலாநந்தர் மணிமண்டபம் அமைக்கப்பட்டது. இவையிரண்டு செயற்பாடுகளும் மட்டக்களப்பு நகரில்மாத்திரமே விபுலாநந்தரின் புகழைஎடுத்து நினைவூட்டுவனவாக இருந்தன. மேலும் அவரையிட்டு பொதுவாக கற்றவர்கள்மட்டத்திலும் ஆய்வாளர்கள் மட்டத்திலுமே ஒருகருத்தூட்டத்தை இவை ஏற்படுத்தின.

வடக்கே இமயம்வரை சென்று இராம கிருஷ்ணரின் திருப்பணி செய்தவரும் தமிழகத்திலும் இலங்கையிலும் பல்கலைக்கழகங்களின் முதற்றமிழ்பேராசானாகவும் கடமை செய்து தமிழ்வாணியை ஆங்கிலபீடத்தில் ஏற்றியவருமான விபுலாநந்தஅடிகளாரின் சிறப்பையும் அவர் கல்விக்கும் சமயத்திற்கும் ஆற்றியதொண்டையும் முற்றமிழ்வளர்ச்சிக்கு செய்ததொண்டையும் அனைவரும் அறிந்துணரவேண்டிய அவசியம் தேவையாயிற்று. சுவாமிகளின் தொண்டுகள் சாதனைகள் குறிப்பாக கிராமப்புற பாமரமக்களிடையே அதிகம் தெரியப்பட்டதாக இருக்கவில்லை. முத்தமிழ்வித்தகர், விஞ்ஞானப்பட்டதாரி, முனிவர் இத்தகைய பெருமை கொண்ட பல்கலைவிற்பன்னர் ஒருவர் மட்டக்களப்பில் பிறந்து வளர்ந்து தமிழ்உலகமெங்கும் மதிக்கப்பட்டுள்ளார் என்பதனை வெளிப்படுத்த வேண்டிய தேவை இருந்தது. மேலும் அத்தகைய நிலைக்கு தங்கள் வருங்கால சந்ததியினரையும் மட்டக்களப்பு மண்ணின் மைந்தர்களை உயர்த்த வேண்டும் என்ற உந்துசக்தியையும் மட்டக்களப்பு மக்களிடையே ஏற்படுத்த முடியாதிருந்தது. தற்காலத்திலுள்ள படித்த மக்கள்கூட தன்பாட்டனாரின் பெயரைச்சொல்ல தடுமாறுகின்ற இக்காலத்தில் இத்தகைய முத்தமிழ் வித்தகரின் வழிகாட்டுதலின் முன்மாதிரியையும் மக்கள் எப்படி சந்திக்க போகிறார்கள் என்பதும் ஒரு கேள்விக் குறியாகவே இருந்தது.

அடிகளார் அமரராகி 22 வருடகாலமாக இதற்கான எந்தவொரு ஊக்கப்படுத்தும் திறனுள்ள முயற்சிகள் எடுக்கப்படவில்லை. இதனால் மட்டக்களப்பில் நிறுவப்பட்ட விபுலாநந்தர் சிலையும் மணிமண்டபமும் ஒரு நினைவுச் சின்னமாகவே இருந்து வந்தது. இன்னும் ஒருபடிமேலேபோய் மனவெப்பத்தில் சொல்லவேண்டுமானால் சாதாராணமாக நடப்படும் ஒருகல்போலவே இதுவும் தென்பட்டது. விபுலாநந்தரின் பணிகளை அவரின் செயற்றிறன்களை மக்கள் உணரவேண்டும் அதனை அறிந்து பெருமைப்பட வேண்டும் அவர்காட்டிய வழியில் தன்சந்ததியினரை வழிநடத்த வேண்டுமென்ற எண்ணம் ஒவ்வொரு மட்டக்களப்பு மக்களிடம் உருவாக வேண்டுமென்ற எண்ணம் காரைதீவில் பிறந்த இருவாலிபர் உற்றுணர்ந்தார்ர்கள்

விபுலாநந்தருக்கான சின்னங்களை அவர்பிறந்த ஊரிலே அமைப்பது பற்றி பலவருடமாக பேசப்பட்டு வந்தாலும் அதற்கான ஸ்திரமான நடிவடிக்கைகள் யாராலும் எடுக்கப்படவில்லை. அதற்கு விபுலாநந்தரின் உறவுக்காரரால் மறுக்கப்பட்ட அல்லது தடையாக இருந்த சிலவிடயங்களுடன் நிதிநிலைமை போன்றவையும் காரணமாயிருந்தன என்றே கூறவேண்டும். இருந்தும் இவற்றையெல்லாம் தாண்டி காரைதீவில் 1962இல் கிராமாட்சிமன்றத் தலைவராக வெற்றிபெற்ற வைத்தியகலாநிதி மா.பரசுராமன் அவர்கள் முத்தமிழ் வித்தகருக்கான சிலைநிறுவுவதற்கான தொடக்கப் பணிகளை அன்றுமுதலே ஆரம்பித்தார் எனலாம். அதன் பெறுபேறாக விபுலாநந்தருக்கான முழுஉருவச்சிலை அமைத்தார்கள். அதனை ஒரு எழுர்ச்சிவிழாவாக்கி ஊர் ஊராகபவனியாக எடுத்துசென்றார்கள். கூடவே விபுலாநந்தரின் அரியபெரியபணிகளை கூறுகின்ற படிவமலரை படைத்து வெளியிட்டார்கள். இவ்விரண்டு சாதனங்களாலும் அவை சார்ந்த சாதனங்களாலும் மட்டக்களப்பின் மூலை முடுக்குகள் எல்லாம் விபுலாநந்தர்பற்றிய தெளிவும் உணர்வும் புத்தூக் கமும் மலர்ந்தன. இதன்காரணமாக இந்ததிருப்பணியின் முயற்சி பயன்தரத்தொடங்கிற்று. ஊர்கள்தோறும் ஆங்காங்கு அடிகளாரின் திருவுருவச்சிலைகள் முழுஅளவிலும் மார்பள விலும் நிறுவப்பட்டன. இவ்விருவரினதும் இப்பெரும் முயற்சியை கிழக்கிலே விபுலாநந்தர்பற்றிய விழிப்புணர்விற்கு ஒருமுன்னோடிச் செயலாக எடுத்துரைப்பது அவசியமாகின்றது. மேற்குறிப்பிட்ட செயலால் விபுலாநந்தர்பற்றிய புத்தூக்க த்திற்கும் அவரது தொண்டுகளை வெளியுலகம் இலகுவில் தேடுவதற்கான ஒருவடிகாலையும் ஏற்பட முன்னோடியாக விருந்த அமரர் மா.பரசுராமன் அவர்கள்பற்றிய இந்தநூலுக்கு விபுலாநந்த அடிகளாரின் திருவுருவச்சிலை திருப்பணியின் முன்னோடி யெனப்பெயரிடப்பட்டுள்ளது பொருத்தமானதாகும் இது வாசகர்களின் மனதில் செறிக்கத்தக்கதாகவும் இருக்குமென நாம் நம்புகின்றோம்.

மேலும் இதுபற்றி அமரர்களானவைத்திய கலாநிதி மா.பரசுராமன், திரு.ம.சற்குணம் அவர்களும் படிவமலரில் வரைந்தகட்டுரையும் 2003இல் கனடாவில் வெளியிடப்பட்ட விபுலம் மலரில் அமரர்மா.பரசுராமன் அவர்களால் எழுதப்பட்ட கட்டுரையும் மீள்பிரசுரிக் கப்பட்டுள்ளன.

அத்தோடு கைலாயப்பிள்ளை கணபதிப்பிள்ளை அவர்களால்எழுதப்பட்ட விபுலாநந்தர் வாழ்க்கைவரலாறு என்னும் புத்தகத்திலிருந்து விபுலாநந்தரின்முடிவுஎன்ற கட்டுரையும் இராமகிருஷ்ணமிசனின் பணிகளில் விபுலாநந்தரின் பின்னர் தன்னை இணைத்து செயல்பட்ட காரைதீவைச்சேர்ந்த சுவாமிஜீநடராஜாநந்தாஜீ அவர்களைப் பற்றிய ஒருகட்டுரையையும் இந்தநூலிலே இணைத்துள்ளோம்.

# தொகுப்பாசிரியரின்பார்வையில்

மனிதன் பிறந்தான் வாழ்ந்தான் இறந்தான் என்றில்லாமல், நமது சமூகத்திற்காக நாம்எத்தகைய பயன்களை விட்டுச்செல்கின்றோம் என்பதயே பிற்சந்ததி யினரால்பேசப்படும். அந்தவகையில் அமரர் வைத்தியகலாநிதி மா.பரசுராமன்அவர்கள் தான் வைத்தியராக தொழில் தொடங்கிய 1954ஆம் ஆண்டு அதாவது தனது 26வயதுமுதல் தொடர்ந்து அரைநூற்றாண்டுகள் தான் சார்ந்திருந்த சமூகத்திற்காக அளப்பரிய சேவைகளை செய்துள்ளார்கள்.

தனதுஊரில் பிறந்து தமிழ்உலகம் போற்றிய முத்தமிழ்வித்தகரின் நாமம் நலிவுற்றிருந்த 1950-1960 ஆண்டு காலப்பகுதி. அவ்வேளையில் சுவாமியின் புகழ்பரவுவதற்கும் அவரைப்பற்றி எளியமுறையில் கிராமமக்கள்,மாணவர்கள் அறிந்து கொள்வதற்கும் ஏதுவாக அமரர்அவர்கள் ஏற்படுத்திய விபுலாநந்தரின் சிலைதிருவுருவப்பணியே காரணமாயிற்று. 1962ஆம் ஆண்டுமுதல் தனது தனித்துவமான முயற்சியால் மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவும் சமூகத்தில் விபுலாநந்தர்பற்றிய ஒருவிழிப்புணர்வினை உண்டுபண்ணின.

சுவாமிவிபுலாநந்தஅடிகளார் இந்தியாவின் தலை சிறந்த ஆங்கிலப்பத்திரிகையான பிரபுத்த பாரதத்தின் பதிப்பாசிரியராக இருந்து இமயமலையின் அடிவாரத் திலுள்ள பத்திரிநாத்திற்கு தனது தொண்டின் நிமிர்த்தம் சென்ற முதல்தமிழன், விஞ்ஞானம் கணிதம் தமிழ் ஆகியமூன்று துறைகளிலும் தனித்துவமாகத் திகழ்ந்த ஒருசிறந்தபட்டதாரி. உலகிலே முதன் முதலில் தமிழ்நாட்டிலே தமிழருக்கென தமிழ்ப்பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டபோது அதற்கு தலைமைப்பேராசானாக தெரிவுசெய்யப்பட்ட முதல்தமிழன், அதேபோல இலங்கையிலும் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பீடம் அமைக்கப்பட்டபோது அங்கும் முதலாவது தமிழ்ப் பேராசியராக நியமிக்கப்பட்ட முதல்தமிழன், மேலும் இலங்கை அரசிற்கு கல்விச் சீர்திருத்தங்கள் பற்றி அறிக்கைசமர்ப்பித்த முதல்இலங்கையன். இப்படியான பலசிறப்புப்பெற்ற கிழக்கின் விடிவெள்ளியான சுவாமிகளின் திறமைகளை வெளிக்கொண்டு வருவதே தனது நோக்கம் என்று என்னிடம் பலதடவைகள் கூறியிருக்கின்றார். இப்படியான செயல்களின் ஊடாக பலகல்விமான்களை நமதுமண்ணில் உருவாக்கலாம் என அசையாத நம்பிக்கையையும் வைத்திருந்தவர்.

உலகம் விரைவாகமாறிக்கொண்டு செல்கின்றது. விஞ்ஞான வளர்ச்சியும் கணணியின் தாக்கமும் நவீன ஆயுதக்கலாசாரமும் நமது அன்றாடவாழ்க்கையை பல முறையில் பலமாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. கிராம மக்களது சமூகஒற்றுமை அவர்களது தனிமனித சுதந்திரம் என்பன இவற்றால் கட்டுப்படுத்தப்பட்டதாகவே உள்ளது. அதனால் தற்போதய காலங்களில் பொதுவாக எங்கு நோக்கினாலும் சமூகப்பொறுப்புக்கள் குறைந்து சந்தர்ப்ப வாதங்கள் மலிந்துவிட்டன.

கிராமியகலாசாரத்திற்கும் மனிதபண்பாட்டிற்கும் ஏற்ப பெரியார்கள் ஞானிகள் அறிஞர்கள் போன்றோரை கௌரவப் படுத்தி அவர்கள் கருத்துக்களை உள்வாங்கி சமூக மேம்பாட்டை செப்பனிடுவதற்கு தற்போது யாரும் முன்வரு வதில்லை. தற்கால சூழலுக்கேற்ப தம்மையும் மாற்றி அதற்கு ஏற்றவாறு உடன்பட்டுவாழ்வதையே உண்மையான வாழ்க்கை யாகவாழ்கின்றனர். இதில் புரட்சிகரமாற்றம் வரவேண்டும்.

கடந்தகாலங்களில் குறிப்பாக இலங்கையின் தமிழ்ப்பிரதேசங்களை எடுத்துக்கொண்டால் அங்கு வாழ்ந்த எந்தவொரு சமயப்பிரமுகரோ, சமூகத்தொண்டரோ, அரசியல் வாதியோ தான்மேற்கொண்ட பணியில் பலதுறைகளிலே பிரபல்யமாக விளங்கியதைக் காணமுடியாதுள்ளது. ஆனால் அமரர் மா.பரசுராமன் அவர்கள் டாக்டராக 52வருடங்கள் ஏழைக்கிராம மக்களின் நோய்களைக் குணப்படுத்துபவராகவும் சமயத்தொண்டில் மக்களிடையே மத அநுட்டானங்கள் பற்றிய விளிப்புனர்வுகளை ஏற்படுத்கிய தர்மகர்த்தாவாக 25வருடங் களும், சமூகத்தொண்டில் விபுலாநந்தர்பணியில் 50வருடங் களாகவும், அரசியலில் கிராமசபைத் தலைவராக கிராமத்தின் அபிவிருத்தியில் 15வருடங்களுமாகவும் எனப்பலதுறைகளிலும் தனிமனிதனாக தனது சாதனைகளை நிலைநிறுத்தியுள்ளார். மேலும் தான் மேற்கொண்ட சேவைகள் யாவற்றிலும் சொந்த நலன் கருதாது தனது ஊர்மக்களினது கல்வி, கலை, பண்பாட்டுவளர்ச்சிக்கும் தன்னை அர்ப்பணித்த நிகரற்ற தலைவராவார்.

இன்று அமரர் வைத்தியகலாநிதி மா.பரசுராமன் அவர்கள் அமரத்துவம் அடைந்த ஓராண்டு சிரார்த்த தினத்தில் அவரது மனிதாபிமான சமூக சமய தொண்டு களை நினைவுபடுத்திப் பலஅறிஞர்கள் அபிமானிகள்

அவர்பற்றி எழுதிய கட்டுரைகளை தொகுத்து வெளியிடுவதில் நாம் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

மேலும் இந்நூலை ஆக்குவதற்கு உகந்த ஆலோசனை வழங்கிய என்அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய "கனடாவின் தமிழ்த்தாத்தா" ஈழத்துப்பூராடனார், கலாநிதி க.தா.செல்வராசகோபால் அவர்களுக்கு என்இதய காணிக்கை.

இந்நூலானது நமதுஎதிர்கால சந்ததியின ருக்கு நமது சமூகத்தில் வாழ்ந்து தொண்டாற்றி முகவரி இல்லாமல் மறைந்திருக்கும் பெரியவர்களை வெளிக் கொணர்ந்து அவர்கள் ஆற்றியபணிகளை தெரிந்து கொள்வதற்கும் ஏதுவாக அமைவதற்கு வழிவகுக்கும் என்று உறுதிபட நம்புகின்றோம். அதன்மூலம் கிழக்கிலங்கையில் மறைந்து கிடக்கும் அதன்வரலாற்று உண்மைகளும் பண்பாட்டுகலாசார விழுமியங்களும் வெளியுலகத்திற்கு எடுத்தியம்பும் தகவல் களாகவும் ஆதாரங்களாகவும் அமையும்.

**அன்புடன்**
**அஜந்தா ஞானமுத்து**
11-11-2006

"வெற்றியை நீங்கள் கீழிருந்து பார்த்தால் அது பெரும் மலையாகத்தான் தெரியும், ஆனால். அதை நீங்கள் அடைந்துவிட்டால் நீங்கள் மேலே இருப்பீர்கள் பூமி உங்களை கீழிருந்து பார்க்கும். அதுதான் வெற்றியின் தத்துவம்."

# தமிழ்வேள் வைத்தியகலாநிதி மா. பரசுராமன் அவர்களின் வாழ்க்கை வரலாற்றுகுறிப்பு

**பிறப்பு**
ஏப்றில் -01-1929 காரைதீவில் பிறந்தார்

**பெற்றார்**
தாயார் செல்லப்பா தங்கமுத்து தந்தை வீரக்குட்டி மாணிக்கப்பிள்ளை (இருவரும் காரைதீவு)

**வளர்த்தவர்கள்**
சிறியவயதில் தந்தையை இழந்ததால் தனதுதாய்மாமன் மாமியான நவரெத்தினம் இராசம்மா தம்பதியர்களின் அரவணைப்பிலே வளர்ந்தார்.

**சகோதரங்கள்**
அண்ணன்- அமரர்மாணிக்கப்பிள்ளை வயிரமுத்து (முன்னாள் புகையிரதநிலைய அதிபர்-மட்டக்களப்பு)

தங்கை- திருமதி.தெய்வானைப்பிள்ளை வேதநாயகம் (இளைப்பாறிய ஆசிரியை) தற்போது பிள்ளைகளுடன் இங்கிலாந்தில் வாழ்கின்றார்.

**கல்விகற்றபாடசாலை**
1935-1947 ஆரம்பக்கல்வி விபுலாநந்தரால் உருவாக்கப்பட்டஇராமகிருஷ்ணசைவத்தமிழ் பாடசாலை.
1947-1949 உயர்கல்வி கல்முனையில் அமைந்துள்ள சென்மேரிஸ் கல்லூரி.

**வைத்தியகல்லூரி**
1949-1954 இலங்கைசுதேசவைத்திய கலாசாலை– கொழும்பு

**பட்டம்** வைத்திய கலாநிதி (DIMS.,RMP.)

**தொழில்** 1954 வைத்திய கலாநிதியாகப் பட்டம் பெற்றபின்னர் காரைதீவில் வைத்தியதொழிலை ஆரம்பித்து தனதுமகன் இறந்தபின்னர் அவர் நினைவாக "வாசன்

கிளினிக்” நிறுவனத்தை தான் இறக்கும் வரையில் 50 வருடங்களாக சுயமாக நடத்தி வந்தார்.

**திருமணம்** 29-8-1957 அன்று காரைதீவில் பொன்னையாஓவிசியரின்(காரைதீவுமுன்னாள்கிராமசபைத்தலைவர்)வள்ளியம்மைதம்பதியரின் இரண்டாவது புத்திரி இலட்சுமியை வாழ்க்கைத் துணையாக கைப்பிடித்தார்.

**பிள்ளைகள்** மகள்- சிவசக்கி (கனடா) மகள்- ஜெயரமணி (டென்மார்க்) மகன் அமரர் செந்தில்வாசன்

**மருமக்கள்** அஜந்தா ஞானமுத்து (கனடா) ஆனந்தமகேஷ்வரன் (டென்மார்க்)

**பேரப்பிள்ளைகள்** அனுஜன், அஜானி, அனுரன் (கனடா) அனோஜ், அனுராம் (டென்மார்க்)

**அரசியல்-கிராமசபைதலைவர்**

1963-1977 (15வருடங்கள்) கிராமாட்சிமன்ற ஆட்சிமுறையில் காரைதீவில் தொடர்ச்சியாக மூன்றுதடவைகள் மக்களால் தெரிவுசெய்யபட்டு இறுதி கிராமாட்சித் தலைவராக சிறப்புறப் பணியாற்றியவர். அதன் பின்னர் பிரதேசசபையாக மாற்றப்பட்டது.

தான் கிராமசபைத் தலைவராகவிருந்த காலத்தில் உள்ளூராட்சிஅமைச்சராக இருந்த முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா, கல்வி அமைச்சராகவிருந்த நிசங்கவிஜயவர்த்தனா மற்றும் அப்துல்மஜீத், அஷ்ரப், சோமவர்த்தனா, மன்சூர் போன்ற அமைச்சர்களையும் உயர்அதிகாரிகளையும் காரைதீவிற்கு வரவழைத்து கட்டிடங்களுக்கான அடிக்கல்லைநாட்டிவித்து அதனை கட்டிமுடித்து திறப்புவிழாக்களையும் நடத்தியவர்

**சமூகசேவைகள் சாதனைகள்**

சமாதானநீதிபதியாகபலவருடங்கள்பணியாற்றியவர்

பலநோக்குகூட்டுறவுசங்கத்தை ஆரம்பித்தவர்- தலைவர்

மண்ணாலும் கிறவலாலுமிருந்த வீதிகளை தார் வீதிகளாக மாற்றியதுடன் மின்சாரம் தொலைத் தொடர்பு களையும் காரைதீவிற்கு ஏற்படுத்தியவர்.

1969ல் காரைதீவு விபுலாநந்தா வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தை உருவாக்கி அப்போதய உள்ளூராட்சிஅமைச்சராக இருந்த முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா அவர்களை வரவழைத்து திறப்புவிழாவினைச் செய்தார்.

மக்கள்வங்கிக் கிளையினை காரைதீவில் முதலில் திறந்து வைத்தவர்

காரைதீவு தபாலகத்திற்காக தனியாக கண்ணகி அம்மன்ஆலயகாணியில் கட்டிடம் அமைத்து மக்களின் தேவையை இலகுவாக்கியவர்.

பழமையான கிராமசபைக் கட்டிடத்தினை புனரமைப்புச் செய்து அதில் நூலகத்தை ஆரம்பித்து அமைச்சர் சோமரத்தின அமைச்சர் M.M.முஸ்தபா அவர்களை யும் அழைப்பித்து திறந்துவைத்து கிராமத்தின் கல்விவளர்ச்சிக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்தவர்

1975இல்காரைதீவிற்கான கமலச்சேவை மத்திய நிலையத்தை அமைத்து அதன்தவிசாளராகக் கடமை யாற்றினார்.

1985இல்ஏற்பட்ட இனக்கலவரப் புனருத்தாரணப்பணி களுக்காக புனர்வாழ்வு குழுவினை அமைத்து தனது நண்பரும் முன்னாள் கிராமசபைத் தலைவரும் முதியோர் கல்விஅதிகாரியுமான திரு.இ.விநாயகமூர்த்தி அவர்களுடன் இணைத் தலைவராக பணியாற்றியவர்.

1992இல் முத்தமிழ்வித்தகரின் நூற்றாண்டு நினைவாக காரைதீவில் விபுலாநந்தர் ஞபகார்த்த பணிமன்றம் அமைத்து அதன்தலைவராகவும் தொடர்ந்து மணி மண்டபத்திற்கான அடிக்கல்லை இராமகிருஷ்ணமிசன் சுவாமிகளையும் அரசியல்வாதிகளையும் அழைப்பித்து நட்டுவித்து பலகோடிரூபாய்கள் செலவில் 1997இல் ஞாபகார்த்த மண்டபத்தினை கட்டிமுடித்தவர்.

**சமயப்பணியுடன் சுவாமிவிபுலாநந்தரின் தொண்டும்**

1957இல் இந்துசமயஅபிவிருத்திச் சங்கம் ஸ்தாபித்து- அதன் தலைவராக இருந்ததுடன் ஊரிலே நடைபெறும் திருவெம்பாவைத் திருவிழாவின் போது அதிகாலையில்

ஊரைச்சுற்றி திருப்பள்ளி எழுர்ச்சி பாடல்களைபாடும் வழக்கத்தையும் ஆரம்பித்து வைத்தவர்.

1973-1997 (25வருடங்கள்) ஸ்ரீகண்ணகிஅம்மன் ஆலய பிரதமதர்மகர்த்தாவாக சேவையாற்றினார்

1976இல்ஆலயநிர்வாகசபையின் பூரண ஒத்துழைப் புடன் ஸ்ரீலஸ்ரீகைலாசநாத குருக்களால் மகாகும்பாபிஷேகம் பிரமாண்டமான முறையில் சிறப்பாக நடத்தப்பட்டது.

1985இல் இனக்கலவரத்தால் சேதமடைந்த ஆலயத்தை ஆலயநிர்வாகசபையின் பூரணஒத்துழைப்புடன் புனருத் தாரணம்செய்து பூரணம்தியாகராஜ குருக்களால் கும்பா விஷேகம் செய்யப்பட்டது.

1997இல்ஆலயநிர்வாக சபையின் பூரணஒத்துழைப்புடன் கோயிலை புதியகட்டிடகலையம்சங்கள் பொருந்தியதாக புனருத்தாரணம் செய்து விஸ்வநாதக் குருக்களால் சிறப்பாக கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

1969இல்விபுலாநந்தர்சிலையை காரைதீவில் முதன் முதலில் நிறுவி குன்றக்குடி அடிகளாரை அழைத்து முத்தமிழ் விழாஎடுத்து “அடிகளார் படிவமலர்” வெளியீட்டிற்கு காரணமானவர்.

23-10-1976காஞ்சிபுரம்சீலசிறிஞானப்பிரகாச தேசிக பரமாசாரியமடாலயம் தமிழ்வேள் என்னும்பட்டம் பூஜைமடத்தில் சந்நிதியில். அடியார்கள் அன்பர்களும் கூடியிருந்த அவையில் இண்டைசாத்தித் திருநீறளித்து வழங்கப்பெற்றது.

**வெளிநாட்டுப் பயணம்**

1997ல் வெளிநாட்டுப் பயணத்தினால் தர்மகர்த்தா பதவியிலிருந்த விலகிக் கொண்டார்.
டென்மார்க் நவம்பர்-1997 கனடாவில் 1997-1998

**அமரத்துவம் இறுதிக்கிரியைகள் தகனம்**

டிசம்பர்-05-2005 (மட்டக்களப்பு போதனாவைத்திய சாலையில்) சிவபதி - காரைதீவு
காரைதீவு பொதுமயானம் (டிசம்பர் 9-2005)

# தகப்பன் ஆனவர்

எனதுதகப்பனார் எங்கள்குடும்பத்திற்கு கிடைத்த அரியபொக்கிசம். மனம்திறந்து சொல்வதானால் ஆண்டவன் எமக்கு அருளிய இனிமையானநட்பு என்றே சொல்வேன். காரைதீவில் வீரக்குட்டி மாணிக்கபிள்ளைக்கும் செல்லப்பா தங்கமுத்து தம்பதிகளுக்கும் இரண்டாவது மகனாக 1929ஏப்றல் முதலாந்திகதி அன்று அவதரித்தார். எனதுதந்தை தாயார் இருவரினதும் வம்சங்கள் காரைதீவில் மிகச் சிறப்புடைய பரம்பரையினராக வாழ்ந்துள்ளனர். காலத்திற்கு ஏற்ப தமிழ்ப்பண்பாடுகள் சிதையாவண்ணம் கட்டிக்காப்பதில் மிககண்ணும் கருத்துமாக வாழ்ந்த எனது அப்பாவின் குடும்பம் தங்கள் பிள்ளைகளுக்கு கல்வி செல்வத்தை அள்ளி வழங்கியுள்ளது.

மூத்தவர்வயிரமுத்து புகையிரததிணைக்களத்தில் அதிபராக கடமையாற்றியவர். காரைதீவினைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சதாநாயகி என்னும் ஆசிரியை மண முடித்து ஏழுபிள்ளைச் செல்வங்களைப் பெற்றுபண்போடு வாழ்ந்த குடும்பமாகும். மிகவும் அன்பாகபழகும் சுபாபமும் பிறரின்மனம் நோகாது பேசும் குணமும்கொண்ட திரு. மா.வயிரமுத்து அவர்கள்தனது இளவயதில் தெய்வாதீனமாக மாரடைப்பால் காலமாகி விட்டார்.

இரண்டாவதுமகன் எங்கள்தந்தையார் வைத்தியராக மிளிர்ந்தார். அவர் பொன்னையா ஓவிசியரின் மகளான இலட்சுமியை 1957ஆகஸ்ட்மாதம் இருபத்தொன்பதாம் திகதியன்று மணந்துகொண்டார். எனது தாயின் தகப்பனார் பொதுமராமத்து பகுதியில் ஓவிசியராகவும் காரைதீவின் கிராமசபைத் தலைவராகவும் கடமையாற்றியவர். மறைந்த டாக்டர் பொ. தம்பிராஜா அவர்கள் இவரதுமூத்தபுதல்வராகும். ஞானரத்தினம்,பரமேஸ்வரி,இலட்சுமி,சரஸ்வதி,மதுரநாயகம் ஆகியோரைப் பிள்ளைகளாகப் பெற்றெடுத்தார்கள். அமரர் தம்பிராஜா அவர்கள் மட்டக்களப்பில் மிகவும் பிரபல்யம் வாய்ந்த டாக்டராககடமையாற்றியவர். மட்டக்களப்பு மக்களால் கைராசிக்காரடாக்டர் என அன்போடு அழைக்கப்பட்டவர். நான்கு ஆண்பிள்ளைகளையும் ஒருபெண்பிள்ளையையும் பெற்று சிறப்புற வாழ்ந்தவர்கள் அமரர் திரு.திருமதி தம்பிராஜா குடும்பத்தினர். எனதுதாயின் சகோதரிகளில் மூத்தவரான பரமேஸ்வரி டாக்டர் க. சிவசிதம்பரம் அவர்களை மணமுடித்து ஒருபுத்திரியை மாத்திரம் பிள்ளைச் செல்வமாகக் கொண்டுவாழ்ந்தவர்கள்.

இளையசகோதரி சரஸ்வதி, அவர்கள் டாக்டர் ச. திருநாவுக்கரசு அவர்களை மணம்முடித்தார். அவர்களது தாம்பத்திய வாழ்க்கையில் இரண்டு ஆண்களும் ஒருபெண்ணு மாக மூன்று பிள்ளைகளை பெற்று மிகச்சிறந்த குடும்பமாக வாழ்ந்து வருகின்றார்கள். சகோரர் திரு. பொ. ஞானரத்தினம் அவர்கள் அரசசேவையில் ஓவிசியராகக் கடமையாற்றியவர். காரைதீவில் இராஜலட்சுமியை மணம்முடித்து நான்கு பிள்ளைகளைப்பெற்று வாழ்ந்து கொண்டிருக்கின்றார். அதேபோல இளையசகோதரரும் எங்கள்குடும்ப உறவினர் களால் மிகவும் நேசிக்கப்படுபவருமான மதுரன் எனஅன்போடு அழைக்கப்படும் திரு. பொ.மதுரநாயகம் அவர்கள் மட்டக்களப்பு அரசினர் வைத்தியசாலையில் ஆண்தாதியாக கடமையாற்றியவர். அவர் சறோஜினி அவர்களை மணம்முடித்து மட்டக்களப்பில் வாழ்ந்து வருகின்றார்.

மூன்றாவது எனதுதந்தையாரின் ஒரேசகோதரியான திருமதி. தெய்வானைப்பிள்ளை திரு. வேதநாயகம் அவர்களை மணம்முடித்து மூன்றுபிள்ளைச் செல்வங் களைப் பெற்றனர். ஒருசிறந்த தமிழ் ஆசிரியையாக திகழ்ந்தவர். இவர்தனது கணவன் இறந்தபின்னர் தற்போது இங்கிலாந்தில் வாழ்ந்து வருகின்றார்.

எங்கள்குடும்பத்தில் மூத்தவள்நான்.வாழைச்சேனையைச் சேர்ந்த அஜந்தா ஞானமுத்து (ஆசிரியர்) அவர்களை 1992 ஆம் ஆண்டு திருமணம் முடித்தது முதல் கனடாவில் வாழ்ந்துவருகின்றேன். எங்கள் இருவருக்கும் அனுஜன் அனுரன் என்னும் இருஆண்களும் அஜானி என்னும் செல்லப்பொண்ணையும் பிள்ளை களாகப்பெற்று மிகவும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகின்றோம்.

எனதுதங்கை ஜெயரமணி. காரைதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தவனம் ஆனந்தமகேஷ்வரன் (விவசாயஅதிகாரி) அவர்களை 1997ஆம் ஆண்டு மணம்முடித்து முறையே அனோஜ் அனுராம் என்னும்இருபுத்திர செல்வங்களைப் பெற்று டென்மார்க்கில் மனநிறைவுடன் தனது குடும்பத்தினருடன் வாழ்ந்துவருகின்றார்கள். எங்களது குடும்பத்தின் கடைக்குட்டி தம்பி செந்தில்வாசன். அவர் தனதுஒருவயது பூர்த்தியாகும் முன்னர் இறைவனிடம் சென்ற துன்பம் எனதுதந்தையாரையும் எங்களையும் பெரிதும்பாதித்தது.

எங்கள்தந்தையார் அவர்கள் எங்களுடன் வீட்டில்தங்கு வதிலும்பார்க்க நோயாளிகளை பராமரிப்பதிலும் துன்பப்படு வோரின் தேவையறிந்து அவர்கள் துயர்துடைப்பதிலும் ஆலய திருப்பணிகளுட்பட பொதுநலமன்றங்களில் பிரசன்னமாகி சேவை செய்வதிலும் கிராமாட்சிமன்ற அலுவல்களிலும் தனது பெரும்பாலான நேரத்தை செலவிட்டவராவார். எனக்கு ஆறவயதாக இருக்கும் போது என் தந்தையார் விபுலாநந்தருக்கான சிலைத்திருப்பணியில் ஈடுபட்டார். கொழும்பு ஹெறணையில் சிலைசெதுக்கப்பட்டது. நான் விபுலாநந்தசுவாமிகளை கண்டதில்லை. ஆனால் அவர் பற்றிய கதைகளை எங்கள் குடும்பத்தவர்கள் அடிக்கடி கதைப்பதோடு மட்டுமன்றி விபுலாநந்தஅடிகளாரின் வெள்ளைநிறமல்லிகையோ பாடலை பாடசாலையில் பாடும் போதெல்லாம் எங்கள்ஊரில் பிறந்த இப்பெரியாரை பற்றி மிகவும் பெருமிதம் கொள்வேன்.

கொழும்பில் செய்யப்பட்டு விபுலாநந்த சிலையை ஊர்ஊராக பலநாட்களாக பவனியாக எடுத்துவரும்போது சிலஊர்களில் நானும் எனதுகுடும்பத்தாரும் அந்த சிலை பவனியில் கலந்து கொண்ட அனுபவத்தில் பெரும்மகிழ்ச்சி அடைந்தேன். மட்டக்களப்பில் நான்செல்லும் இடங்களெல்லாம் எங்கள் ஊரில்பிறந்த மகான் முத்தமிழ்வித்தகர் முதற்றமிழ் பேராசான் விபுலாநந்தரின் திருவுருவச் சிலை அவ்வூர்களில் இருப்பதைக்கண்டு நான் பெருமிதம் அடைவேன்.

காரைதீவின் கண்ணுக்கு கண்ணாக விளங்கும் எங்கள் குலதெய்வம் கண்ணகிஅம்மாள். கண்ணகி ஆலயத்தின் பிரதமதர்மகர்த்தாவாக கடைமையாற்றிய எனதுதந்தையார் ஆலயத்தின் புனருத்தாரண பணிகளுக்காக சிற்பிகளை வரவழைத்து காரைதீவில் தங்குவித்து சிற்பவேலைகளை மேற்கொண்டார். அதன்பயனாக இன்று உயர்ந்த கோபுரத்துடன் இவ்ஆலயம் நிமிர்ந்து நிற்கின்றது. இதனையடுத்து விபுலாநந்தர் பிறந்தவீட்டின் வளவிலேயே ஞாபகார்த்தபணி மணிமண்டபம் அமைத்தார். இதற்காக தனது சொந்தகுடும்ப நேரத்தை முற்றுமுழுதாக அதற்கு பயன்படுத்தினார். அப்போதெல்லாம் நாங்கள் எங்கள் தந்தையார் எங்களுடன் தனதுநேரத்தை செலவிடுவதில்லை என்று மனம்நொந்தாலும் இன்று அவர்செய்த காரியங்களை நினைத்து மகிழ்ச்சியடைகின்றேன். எனது குடும்பத்துடன் மட்டக்களப்பின் பலகோயில்களுக்கு செல்லும் போது எனதுதந்தையார் அவ்வூர்மக்களால் கௌரவிக்கப்படுதை கண்டு நான்உள்ளூர மகிழ்ந்து கொள்வேன். எங்கள் தந்தையார் எங்களை சைவ சமயநெறியிலும் தமிழ்ப் பண்பிலும் மிகக் கண்டிப்பாக வளர்த்தவர்.

ஒருதடவை எங்கள் வீட்டிற்குவருகை தந்திருந்த பொத்துவில் பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த திரு.கனகரெத்தினம் அவர்கள் எனது தந்தையரிடம் “என்ன

டாக்டர் ஒருஅரசாங்கத்திலுள்ள அமைச்சர் தனது ஊருக்கு செய்துள்ள அபிவிருத்திகளைப்போல காரைதீவில் செய்துள்ளீர்களே! ஒருகிராமாட்சிதலைவராக மட்டும் இருந்துகொண்டு எப்படி இவ்வாறு செய்யமுடிந்தது”என்று.

தான் பிறந்த இம்மண்ணிற்கு தன்னாலான சேவைகளை உயிருடன் இருக்கும்போது செய்ய வேண்டும் என்று அடிக்கடி கூறிக்கொள்வார். வீட்டிற்கு எங்கள்தந்தையை நாடி உதவி கேட்டுவருபவர்களை நாங்கள் அன்புடன் வரவேற்போம். வீட்டிற்குவரும் சகலரையும் அவர்களது தேவைகருதி வேண்டிய உதவிகளையும் முடிந்தளவிற்கு நீதியான முறையில் யாருடையமனமும் புண்படாதபடியும் தனது சேவைகளை அவ்வப்போது வழங்கியிருக்கின்றார்.

எங்களை எவ்விதக்குறைகளும் இல்லாமல் வளர்த்து பிற்கால வாழ்கைக்கான நற்றுணையையும் தந்து எங்கள் வாழ்க்கைக்கு தேவையான சுகங்களையும் விட்டுச்சென்றாலும் அவர்உயிருடன் இல்லை என்னும் குறையே எங்களை வாட்டுகின்றது. அவர் பிறரின் பிணிதீர்ப்பதற்காக எடுக்கும் முயற்சிக்கும் கொடுக்கும் மருந்துக்கும் கூட பலரிடமிருந்து எதையும் எதிர்பார்பதில்லை. அதற்குபதிலாக தங்கள் பிணிதீர்ந்து வந்து நலமாகவுள்ள செய்தியையே அவருக்கு மனமகிழ்வை தருவதைக் காணலாம். சிறார்களுக்கான உதவி நிலையங்களுக்கும் தனது உழைப்பில் பெரும் பகுதியினை வழங்கியுள்ளார். அப்படிப்பட்ட நல்ல உள்ளம்கொண்ட எனதுதந்தையாரை எங்களுக்கு மட்டுமென நாங்கள் உரிமை கொண்டாடுவது எங்கள் தகப்பானரின் பொதுநலத் தொண்டினை இழுக்கு செய்வதாக முடியும். அதனாலேதான் அவர் காரைதீவு மக்கள்யாவருக்கும் ஒருதந்தையைப்போல தன்சேவையினை வழங்கியபடியால் எங்களுக்கு மட்டுமன்றி ஊர்மக்களுக்கும் அவர்தகப்பனானார்.

**நன்றியுடன்**
**சிவசக்தி ஞானமுத்து**
கனடா

# காரைதீவின் வளமும் டாக்டர் மா. பரசுராமன் அவர்களின் வாழ்வும்


பேராசிரியர்
இளையதம்பி பாலசுந்தரம்
Dr. E. Balasundaram
Scabrough-Ontario

ஈழம் என்னும் இலங்கை திருநாட்டிலே மூன்று காரைதீவுகள் உள்ளன. வடமாகாணத்தில்ஒன்று அது தற்போது காரைநகர்எனஅழைக்கப்படுகின்றது. இரண்டாவது புத்தளத்திலும் மற்றயதுகிழக்கிலும் உள்ளன. கிழக்கிலே மட்டக்களப்பு பொத்துவில்பிராதான பாதையில் அம்பாரை மாவட்டத்திலுள்ளது. இக்காரைதீவிற்கு ஒருபெருமை உண்டு. இங்கேஉள்ள களணிவளமும் கல்விவளமும் வேளான்மரபும் இக்கிராமத்திற்கு சிறப்பைதருகின்றது. அப்படிப்பட்ட மண்ணி லேதான் முத்தமிழ்வித்தகர் பிறந்து தமிழும் ஆன்மீகமும் சமயசமரசமும் வளர்த்தார்.

கலாநிதி. இ.பாலசுந்தரம் அவர்கள் விபுலாநந்த ருக்குப் பின்னர் இவ்வூரிற்பிறந்து, சுவாமிகள் தாபித்த காரைதீவு இராமக்கிருஷ்ணமிசன் ஆண்கள்பாடசாலையிலும் சிவானந்தாவித்தியாலயத்திலும் ஆரம்பக்கல்விகற்று, பின்னர் பல்கலைக்கழகப்பட்டம் பெற்று, கலாநிதியாகி பல் கலைக்கழகத்தமிழ்ப் பேராசிரியராகி இன்றுவரை தமிழ்கூறும் நல்லுலகெங்கும் காரைதீவுக்குப் புகழ்ஈட்டிக் கொண்டிருப்பவர் என்பதைச் சுட்டிக்காட்டுதல் இவ்வூருக்குப் பெருமை தருவதாகும்.

கலாநிதி.பாலசுந்தரம் அவர்களுக்கு இந்தியா, ரஷியா, அமெரிக்கா, இங்கிலாந்து ஆகியநாட்டு அரசாங்கங்கள் கல்விப்புலமைப்பரிசுகள் வழங்கிக் கௌரவி த்துள்ள பெருமைகளும் காரைதீவுக்கே உரித்தாகும். இவர்விபுலாந்தம்-தமிழினமேம்பாடு நோக்கிய சிந்தனைகள், தமிழர் திருமணமரபுகள் மட்டக்களப்புமாநிலம், ஈழத்து இடப்பெயர் ஆய்வு யாழ்ப்பாணமாவட்டம், நாட்டார் இசை இயலபும் பயன்பாடும், ஈழத்தில் ஒப்பனைக்கலை, தமிழ் இலக்கியத்தில் மருத்துவக்கருத்துக்கள், ஈழத்துப் பதிப்புக் கலை வளர்ச்சியிலே சன்மார்க்க சபையின் பணி, இலங்கை இடப்பெயர் ஆய்வு-2 வடமராட்சி தென்மராட்சி, இலங்கை இடப்பெயர்ஆய்வு-1 காங்கேசன் கல்விவட்டாரம், காத்த வராயன் நாடகம்பதிப்பு, ஈழத்து நாட்டார்பாடல்கள் மட்டக்களப்புமாவட்டம் ஆய்வும் மதிப்பீடும் என்னும் நூல்களின் ஆசிரியருமாவார். இக்கிராமத்திலே பிறந்தபல தமிழ் அறிஞர்களுள் ஒருவரான பேராசிரியர் பாலசுந்தரும் அவர்கள் இக்கட்டுரையைப் படைத்து இந்நூலுக்கு பெருமைதேடித்தந்துள்ளார்.

**தொகுப்பாசிரியர்**

## மட்டக்களப்பு தமிழகம் காரைதீவு

கிழக்கிலங்கையிலே மட்டக்களப்புத் தமிழக த்திலே பழம்பெரும் பதிகளில் காரைதீவும் ஒன்றாகும். இப்பதியில் சுவாமி விபுலாநந்தர்,சுவாமி நடராஜானந்தாஜீ அவதரித்த மையாலும்,சித்தருள் ஒருவராகிய சித்தானைக் குட்டி சுவாமிகள் வாழ்ந்து இங்கு சீவன் முத்தரான தன்மையாலும் இக்கிராமம் புண்ணியபூமி எனப்போற்றப்படுவதோடு, இவ்வூரின் பெயர் தமிழ்கூறும் நல்லுலகெங்கும் பேசப்படுகிறது. இங்கு வரலாற்றுப் பழமைபேசும் ஆலயங்கள் அமைந்து, ஆலய வழிபாட்டோடு தொடர்புடைய மாண்புமிக்க மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள்.

மட்டக்களப்புக்குத்தெற்கே 28மைல் தொலைவில் இந்துமா சமுத்திரத்தைக் கிழக்கெல்லை யாகவும், செந்நெல்விழையும் வயல்நிலப்பரப்பை மேற்கெல்லை யாகவும் வடக்கிலும்தெற்கிலும் முறையே சாய்ந்தமருது, நிந்தவூர் என்னும் ஊர்களை எல்லைகளாகவும், 20சதுரகிலோமீற்றர் பரப்பளவையும் கொண்ட பழந்தமிழ்ப் பதியாகக் காரைதீவுக்கிராமம் விளங்குகிறது. வயலும் வயல்சார்ந்த குடியிருப்பும் கொண்ட மருதநிலப் பரப்பாகவும் கல்விவளம் செறிந்த மக்கள்வாழ் பதியாகவும் காரைதீவு விளங்குகிறது. இங்கு 1981இல் எடுக்கப்பட்ட குடிசனக் கணிப்பீட்டின்படி 15,168 பேர் வாழ்ந்துள்ளனர். இங்கு ஸ்ரீ கண்ணகிஅம்மன் கோயில், கந்தசுவாமி கோயில், நந்தவனப்பிள்ளையார் கோயில், பாலையடி பாலவிக்னேஸ்வரர் கோயில், வீரபத்திரர் கோயில், மகாவிஷ்ணு கோயில், காரையடிப் பிள்ளையார் கோயில், அரசடிப்பிள்ளையார் கோயில், ஸ்ரீபத்திரகாளி அம்மாள்கோயில், சிவன்கோயில், கரச்சை விஷ்ணு கோயில் என்பவற்றுடன் சித்தானைக்குட்டி கோயில் ஆகியன அமைந்துள்ளன. இத்தனை கோயில்களும் இவ்வூரில் வாழும்மக்களின் பண்பாட்டுவாழ்வை நெறிப்படுத்துவானவாகும். இங்குள்ள கண்ணகி அம்மன் ஆலயத்தின்வரலாறு இக்கிராமத்தின் வரலாற்றுப் பின்னணியைக் குறிப்பிடுவதோடு, இக்கோயிலுக்குரிய வயற்காணிகளும் இதற்குச்சான்றாக உள்ளன.

## மா.பரசுராமன் அவர்களின் அரசியல்பணிக்களம்

1960களுக்கு முன்னர் உள்ளூராட்சி அடிப்படையில் இக்கிராமம் மூன்று குறிச்சிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. காலப்போக்கில் மக்கட்பெருக்கமும், கிராமியச் செயற்பாடு களும் பொருண்மிய மேம்பாடுகளும் விரிவடைந்தமையால்

இப்போது, காரைதீவு ஏழுநிர்வாகப் பிரிவுகளைக் கொண்டுள்ளது. 28.01.1988இல் காரைதீவு தனியே உதவிஅரசாங்கப் பிரிவாக நிர்வாகத் தரம் உயர்த்தப்பட்டது. இப்போது நிந்தவூர் பிரதேசசபையின் கீழ்உபபிரதேசசபை நிர்வாகத்தின்கீழ் காரைதீவின் உள்ளூராட்சி நிர்வாகம் நடை பெற்றுவருகிறது.

காரைதீவு கல்விக்குப் பெயர்பெற்ற கிராமமாக விளங்கிவந்துள்ளது. அதற்கேற்ப இங்கு பல பாடசாலைகள் அமைந்துள்ளன. திண்ணைப் பள்ளிக் கூடப் பாரம்பரிய காலம் முதலாக நவீனகல்வித்திட்டங்களை வழங்கிய பாடசாலைகள் பல உள்ளன. இங்கு முதன்முதலாக 1912இல் இராமாமகிருஷ்ணசங்க ஆண்கள்பாடசாலை அமைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து சுவாமிவிபுலாநந்தரால் சாரதா மகளிர் வித்தியாலயம் அமைக்கப்பட்டது. சண்முக வித்தியாலயம், விஷ்ணுவித்தியாலயம், விபுலாநந்த மத்தியகல்லூரி, கண்ணகி இந்துவித்தியாலயம், விக்கினேஸ்வரா வித்தியாலயம், மாளிகைக்காடு அல்-ஹூசைன் வித்தியாலயம், மாளிகைக்காடு சபீனா வித்தியாலயம், மாவடிப்பள்ளி அல்-அஷ்ரப் மகா வித்தியாலயம், இவற்றுடன் விபுலாநந்தா கல்வியகம் என்பன இக்கிராமத்திற்கு கல்விவளம் தந்து கொண்டிருக்கின்றன.

அரசமருத்துவமனை, தபால்அலுவலகம், வங்கி, கமத்தொழில்சேவைநிலையம், நூல்நிலையங்கள் என்பனவும் இயங்கிவருகின்றன. சுவாமி விபுலாநந்தர் மணிமண்டபம் 1991 டாக்டர் பரசுராமன் அவர்களின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டு 1997இல் திறந்து வைக்கப்பட்டு கல்வி, கலாசாரச் செயற்பாடுகளின் மையமாக இதுவிளங்குகிறது. காரைதீவின் மேற்கெல்லையூடாக மட்டக்களப்பு - பொத்துவில் பெருஞ்சாலை அமைந்துள்ளமையால் போக்குவரத்து வசதிகளும் இக்கிராமத்தின் வளர்ச்சிக்கு உதவியாயிற்று. பெருஞ்சாலை அருகே வர்த்தகச்சாவடிகளும் அமைந்து ஊரை மெருகூட்டுகின்றன.

அரச உத்தியோகமும் விவசாயமுமே இக்கிராமத்து மக்களின் பொரூண்மிய வாழ்க்கயின் அடிப்படைகளாகும். இக்கிராமத்தின் கல்விப்பாரம்பரியத்தின் கருவூலமாக அமைவது இராமகிருஷ்ணமிசன் பாடசாலைகளாகும். சுவாமி விபுலாநந்தரே இக்கல்விப்பாரம் பரியத்தின் பிதாமகனாவார். 1920களில் பெண்களுக்கென விடுதியோடமைந்த சாரதாவித்தியாலயம் சுவாமிவிபுலாநந்தரால் உருவாக்கப்பட்டு பெண்கல்விப் பாரம்பரியம் வளர வித்திடப்பட்டது. இப்பதியில் பிறந்து, இங்கு நிலவிய திண்ணைப்பள்ளியில் தனது ஆரம்பக் கல்வியைத் தொடங்கிய சுவாமிவிலாநந்தர் மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டிதராகி, இலண்டன் பல்கலைக்கழக விஞ்ஞானப் பட்டதாரியாகி, முதற்றமிழ்ப் பேராசிரியராக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் இலங்கைப் பல்கலைகழகத்திலும் நியமனம்பெற்று கல்விச் சாதனையால் இவ்வூருக்குப் புகழ் ஈட்டித்தந்தார்.

## கல்விவளம் மிக்க காரைதீவு

மேலும், கல்வித்துறையிலே காரைதீவுக்குப் பெருமை தந்தவர்களில் சிவானந்தாவித்தியாலயத்தின் முன்னைநாள் அதிபர் காலஞ்சென்ற கைலாயப்பிள்ளை. கணபதிப்பிள்ளை (B.A.,F.R.G.S.) அவர்களும் காரைதீவு தந்தகல்விமான் ஆவார். சுவாமிவிபுலாநந்தர் வழியில் துறவறம்பூண்டு கல்வி – சமய - சமூகப்பணி புரிந்த சுவாமிநடராஜானந்தாஜீ மற்றும்ஐக்கிய நாடுகளுக்கான தென்கிழக்காசியாவின் வனஅபிவிருத்தி ஆராய்ச்சிப் பகுதியின் பொறுப்பாளராக இருந்த கலாநிதி க.விவேகானந்தன் அவர்களும் காரைதீவின் அருந்தவப் புதல்வர்களே.

காரைதீவின் கல்வியாளர்கள் வரிசையில் பல்கலைக்கழகப் பட்டம் பெற்று ஆராய்ச்சித்துறையில் ஈடுபட்டவர்கள் வரிசையில் திரு. ம. சற்குணம், திரு. ந. நடராசா முதலியோர் வரிசை நீண்டு செல்லும். 1970களுக்குப் பின்னர் காரைதீவிலிருந்து பல்கலைக்கழகம் சென்றோர் தொகை அதிகரிப்பதாயிற்று. பல்கலைக்கழகங்களில் பொறியியல், மருத்துவம், விஞ்ஞானம், கலை, விவசாயம், கட்டிடக்கலை முதலான துறைகளில் கல்விகற்று பட்டம்பெற்று, குறிப்பிடத் தக்கவகையில் தம்மூருக்குப் பெருமை சேர்த்து வருவோர் எண்ணிக்கை பெரிதாகும். வீட்டுக்கு ஒருஆசிரியர் என்று கூறத்தக்க அளவு இக்கிராமத்தில் ஆசிரியர்களின் எண்ணிக்கை ஒரு காலக்கட்டத்தில் மிக்கதாக இருந்தது. ஆனால் தற்போது வீட்டிற்கு ஒருடாக்கடரும் பொறியலாளருமாக உள்ளது. மேலும் இங்கு பலதமிழ்ப்பண்டிதர்கள் வாழ்ந்து இக்கிராமத் திற்குப் புகழ்தேடித்தந்தனர்.

## மக்கள் சேவையின் விளைநிலம்

1948இல் இலங்கைப் பாராளுமன்றத்தேர்தலில் காரைதீவைச் சேர்ந்த திரு எஸ். கு கணபதிப்பிள்ளை எடுத்த முயற்சி 2004 ஆண்டில் கைகூடிற்று எனலாம். தொடர்ச்சியாக காரைதீவு மக்கள் பொதுத் தேர்தலில் முன்னின்று உழைத்த போதிலும் தக்கபலன் எதுவும் கிடைத்தில்லை. இப்போது

நடைமுறையிலுள்ள பாராளுமன்ற ஆட்சிமுறையில் இக்கிராமத்தைச் சேர்ந்த திரு. கனகசபை பத்மநாதன் முன்னின்று தேர்தலில் வெற்றிபெற்று நாடாளுமன்ற உறுப்பினராக் இருப்பதும் இக்கிராமத்தின் முன்னேற்றப் பாதையைக் கோடிட்டுக் காட்டுகின்றது. 1985, 1990, 2004 ஆகியமூன்று வருடங் களும் காரைதீவு மக்களின் வரலாற்றில் துயரம்நிறைந்த ஆண்டுகளாகும். முதலிருஆண்டுகளில் இனக்கல வரத்தால் காரைதீவின் 22கோடிரூபா பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்பட்டன. பலஉயிர்கள்கொன்றொழிக் கப்பட்டன. 26.12.2004 ஏற்பட்ட சுனாமியால் 2200 பேர்மாண்டனர். பதினாறாயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதிக்கப் பட்டனர். இந்த இழப்புகளை எல்லாம் ஈடுசெய்யும் வகையில் அங்குள்ள இளைஞர்களும் கல்விமான்களும் பொதுமக்களும் ஒன்றிணைந்து செயற் படும் போக்குப் பாராட்டத்தக்கதாகும்.

உள்ளூராட்சித்துறையிலும் காரைதீவு முன் னேற்றம் பெற்றிருந்தது. 1950களில் கிராமஆட்சிமன்றம் (Village Council) உடையதாக இவ்வூர்விளங்கிற்று. அதன் முதலாவது கிராமசபைத் தலைவர் திரு. தம்பையா ஆவார் அவரைத் தொடர்ந்து, திரு பொன்னையா (டாக்டர் பரசுராமனின் மனைவியின் தந்தையார்), திரு பரமலிங்கம், திரு. சாமித்தம்பி, திரு. இ. வினாயகமூர்த்தி ஆசிரியர் (1952 தொடக்கம் 1962வரையும்), டாக்டர் மா. பரசுராமன் (1963தொடக்கம் 1977வரையும்) ஆகியோர் பதவி வகித்தகாலம் நினைவுக்குவருகிறது. இவர்களில் பின்னிருவரின் பதவிக் காலங்கள் நினைவில் உள்ளன. இவ்விருவரது பதவிக்காலங்களில் காரைதீவு துரிதமுன்னேற்றம் பெற்றது. இருவரது காலங்களும் பலசோதனைகளும் வேதனைகளும் இடம் பெற்றமையை காரைதீவு மக்கள் மறக்கமாட்டார்கள். திரு. இ. விநாயகமூர்த்தி காரைதீவு இ.கி.மிசன் ஆண்கள் பாடசாலையில் ஆசிரியராக இருந்தபோது அவரிடம் குடியியல்பாடம் (Civic subject) கற்றேன் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. திரு இ.விநாயகமூர்த்திக்குப் பின்னர் கிராசபைத் தலைவராக திரு. மா. பரசுராமன் அவர்கள் தெரிவு செய்யபட்டார். இவரே காரைதீவின் கடைசி சேமனும் ஆவார்.

## சமூகப்பணியும் பரசுராமன் அவர்களும்

பரசுராமன் அவர்கள் காரைதீவில் வீரக்குட்டி மாணிக்கப்பிள்ளைக்கும் செல்லப்பா தங்கமுத்துக்கும் பிள்ளையாக பிறந்தார். இவரது சகோதரர்கள் அண்ணன் அமரர் மாணிக்கப்பிள்ளை வயிரமுத்து (முன்னாள் புகையிரதநிலைய அதிபர்-மட்டக்களப்பு), தங்கை திருமதி. தெய்வானைப்பிள்ளை வேதநாயகம் (இளைப்பாறிய ஆசிரியை) தற்போது இங்கிலாந்தில் வாழ்கின்றார். இவர்இளமையில் காரைதீவு இராம கிருஷ்ணமிசன் பாடசாலை (1935-1947), கல்முனை சென்மேரிஸ் பாடசாலை (1947-1949) ஆகியவற்றிற் கல்வி கற்றார். அதன் பின்னர் கொழும்பிலுள்ள இலங்கை சுதேசவைத்தியக் கல்லூரியிற் கல்வி கற்று (1949-1954) சுதேசிய மருத்துவத்துறையில் பட்டம் பெற்றார். தம் ஊருக்குச் சேவை செய்யும் நோக்குடன் அவர் தனியாகமருத்வமனை அமைத்து இக்கிராமத்து மக்களுக்குப் பெருஞ்சேவை ஆற்றி, மக்களின் நன்மதிப்பையும் பெற்ற சீரிய பண்பினர் ஆவார். காரைதீவு பொன்னையா ஓவிசியரின் (முன்னாள் காரைதீவு கிராமசபைதலைவர்) இரண்டாவது மகள் இலட்சுமியை 29-8-1957இல் திருமணம் செய்து சிவசக்கி (கனடா), ஜெயரமணி (டென்மார்க்), அமரர் செந்தில்வாசன் ஆகிய பிள்ளைச்செல்வங்களைப் பெற்றார்.

சுவாமிவிபுலாநந்தர்மீது நன்குபற்றுள்ளமும் தீவிர பக்தியும் கொண்ட டாக்டர்.மா. பரராமன் தானும் காவிநிறச் சட்டையே அணிந்துகொள்வது வழக்கம். முத்தமிழ்வித்தகர் விபுலாநந்தசுவாமிகளின் பணிகளை தமிழ்மக்களிடம் எடுத்துச் செல்லப்பட வேண்டுமென என்னுடன் கலந்துரையாடும் போது பலதடவைகள் தன் ஆதங்கத்தை குறிப்பிட்டிருக்கின்றார். அதற்காக கிராமங்கள் தோறும் சுவாமிகளின் திருவுருவச் சிலைகளை அமைப்பதற்கான பணிகளை 1962ஆம் ஆண்டு முதல் அமரர் ம. சற்குணம் அவர்களை தன்னுடன் இணைத்துச் செயல்பட ஆரம்பித்தார்.

அவருடைய உள்ளத்தில் துறவுணர்ச்சி குடி கொண்டிருந்த போதிலும் மக்கள்சேவையே பெரிதென நினைத்து மக்கட்பணியில் ஈடுபட்டுவந்தவர். இவர் கிராமசபைத்தலைவராக இருந்த காலத்திலே தான் பல்வேறு அபிவிருத்திச் செயற்பாடுகள் கரைதைீவில் இடம்பெற்று ஊர்பொலிவுற்றது. பாடசாலைகள் வளர்ச்சி அடைந்தன. தெருக்கள் செம்மையாக்கம் பெற்றன. அரசமருத்துவமனை விரிவாக்கபட்டு பலவசதிகள் பெற்றன. மின்சாரவிநியோகம் ஏற்படுத்தப்பட்டது. விபுலாநந்த பொதுநூலகம் பெருப்பிக்கப்பட்டது. 1969இல் சுவாமிவிபுலாநந்தருக்கு முழுஉருவச்சிலை கொறணையில் செதுக்கப்பட்டு, கொழும்பிலிருந்து சுவாமிகளின் சிலைஊர்வலமாக வாகனத்தில் எடுத்துவரப்பட்டு, காரைதீவு கிராமசசபையின்

முன்பாக நிறுவப்பட்டது. தான்1962களில் கண்டகனவை அதன் மூலம் ஆரம்பித்துவைத்து நனவாக்கினார். அச்சிலை நிறுவும் செயற்பாடுகளில் நானும் பங்குகொண்டேன் என்பதில் மனம்நிறைந்த மகிழ்ச்சி.

## சாதனைகளுக்கு சமூகத்தின் பாராட்டுக்கள்

தமிழ்ப்பற்றுள்ளத்தையும் தமிழ் மக்களுக்கு அவர் ஆற்றிய சேவையையும் கருத்திற் கொண்டு 23-10-1976இல் காஞ்சிபுரம் ஸ்ரீலசிறி ஞானப்பிரகாசதேசிக பரமாசாரிய மடாலயம் ‘தமிழ்வேள்’ என்னும் பட்டத்தை பூஜைமடத்தில் சந்நிதியில். அடியார்கள் அன்பர்களும் கூடியிருந்த அவையில் இண்டைசாத்தித் திருநீறளித்து வழங்கிக் கௌரவித்தது. பல்வேறுபட்ட சமூகசேவைகளில் இவர்தன்னை அர்ப்பணித்திருந்தார்.

சமாதானநீதிபதியாக, இந்துசமய அபிவிருத்தி சங்கத் தலைவர், பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தை ஆரம்பித்து அதன்தலைவராகவும், விபுலாநந்த நினைவுப் பணிமன்ற ஸ்தாபித்து அதன்தலைவராகவும் பணி யாற்றியவர். விவசாய விஸ்தரிப்பு நிலையத்தை ஸ்தாபித்தவர், விபுலாநந்தர் முழுஉருவச்சிலையை முதன்முதலில் காரைதீவில் நிறுவி குன்றக்குடி அடிகளாரை வரவழைத்து தொடர்ச்சியாக மூன்று நாட்கள் முத்தமிழ்விழா எடுத்தவர். ஸ்ரீகண்ணகி அம்மன் ஆலயத்தின் தருமகர்த்தாவாகவிருந்து பாரிய புனருத்தாருணபணி செய்து குடமுழுக்குசெய்தவர் இக்கோயில் மூன்றுவண்ணக்கர்களால் (Trustees) நிர்வகிக்கப் படுவதாகும். அம்மூவரில் தலைவராக 1973தொடக்கம் 1997வரை இருபத்தைந்து ஆண்டுகள் தொடர்ச்சியாக அப்பணியினைச் செம்மையாகச் செயற்படுத்தி அக்கோயிலின் வளர்ச்சியில் அக்கறைகொண்டு பணியாற்றியவர் டாக்டர் பரசுராமன் அவர்கள்.

காரைதீவுக்கும் அயற்கிராமங்களுக்கும் இடையே அடிக்கடி ஏற்பட்டுவந்த இனமோதல்களை மிகவும் சாதுரியமான முறையில் கையாணடு இரு இனங்களுக்கான ஒற்றுமையை கடைபிடித்து பிரச்சனைகளை சமரசமாக தீர்த்துவைத்தவர். இந்தமோதல்களால் பெருஞ்சவால் களையும் சிக்கல்களையும் எதிர்கொண்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. தேசிய இனப்பிரச்சினைக் காலத்தில் பலவேறு தரப்பினரது நெருக்குதல்களுக்கும் இன்னல் களுக்கும் ஆளாகி மக்களுக்குச் சேவை செய்தவர் என்பதை ஊர்மக்கள் நன்கு அறிவார்கள்.

காரைதீவின் மாண்பினுக்குப் பங்களித்தவர்களில் தமிழ்வேள் டாக்டர் மாணிக்கப்பிள்ளை பரசுராமன் அவர்களும் முக்கியஇடத்தைப் பெற்றுள்ளார் என்பதை நினைவிற் பதித்துக்கொள்வோம்.

பலர்பெரியார்கள் தம்வாழ்நாட்களில் தாம் சாந்திருந்த சமூகத்தில் செய்த சாதனைகளால் அவர்கள் இருக்கும் போதும் இறந்தபின்னரும் பிற் சந்ததியினரால் போற்றப்படுவது மட்டுமன்றி என்றென்றும் பேசப்பட்டும் வருகின்றார்கள். அவர்களில் வைத்தியகலாநிதி மா.பரசுரரமன் அவர்களின் அரசியல் சமூக சமயப் பணிகளும் போற்றப்படுகின்றன.

மேலும் முத்தமிழ்வித்தகரின் திருவுருவச்சிலை யினை மட்டக்களப்பின் பலஇடங்களில் நிறுவுவதற்கு முன்னோடியாக திகழ்ந்தவர் திரு.மா. பரசுராமன்அவர்களே.இன்று விபுலாநந்தர் பற்றியும் அவரது சமயசமரசபணிகள் பற்றியும் அறிந்து கொள்ள இச்சிலைகளும் விபுலாநந்தருக்கான விழாக்கள் போன்றவையும் முக்கியகாரணமாக விளங்குகின்றன. இப்படியாக விபுலாநந்தரின் செயற்பாடுகள் மக்களிடையே சென்றடைவதற்கு அமரர் வைத்தியகலாநிதி மா.பரசுராமன் அவர்கள்செய்த பலகாரியங்கள் விபுலாநந்தர் பற்றிய வெளிக் கொணர்வதற்கு காரணமாயிருந்தன என்பது விவாதத்திற்கு அப்பால்பட்ட உண்மையாகும்.

# எம்மண்ணில்

# என்றும்வாழும்

# சாதனையாளர்

## இ.வினாயகமூர்த்தி

முன்னாள் கிராமாட்சி மன்றத் தலைவரும்,
மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினரும்,
வளந்தோர்கல்விஅதிகாரியும்
காரைதீவு-5

மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலை தனது 50 வது ஆண்டு நிறைவு விழாவினைக் கொண்டாடிய போது அங்குபயிற்சி பெற்று வெளியேறி ஆசிரியர்களாக கடமையாற்றியதுடன் சமூகத்தில் பலவித தொண் ணடாற்றி பெருமை பூண்ட பழைய மாணவர்களை பாராட்டி விருதளித்து கௌரவித்தது. அவர்களுள் பிரபல சிறுகதை நாவல் எழுத்தாளர் மூதூரைச் சேர்ந்த அமரர் வ.அ.இராசரெத்தினம், பங்குடாவெளியைச் சோந்த இலக்கிய செம்மல் கே. வினாயகமூாத்தி, ஆசிரிய சிரோன்மணி த.செல்வநாயகம். ஈழத்துப்பூராடனார் கலாநிதி க.தா. செல்வராசகோபால் மற்றும் மு.கணபதிப்பிள்ளை என்பவர்கள் அடங்கு வார்கள். இவர்களுள் காரைதீவை பிறப்பிடமாகக் கொண்ட திரு.இ.வினாயகமூர்த்தி அவர்களுக்கு அவரது அளப்பரும் கல்வி சமூக அரசியல் சேவையைப்பாராட்டி சமூகத்தொண்டன் என்னும் விரு தினையும் வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

இவர்(1952-1962) 10வருடங்கள் தொடர்ந்து காரைதீவு கிராமசபையின் தலைவராக தனதுஇளம்வயதில் சேவை செய்தவர். 1962இல் உதவிநன்கொடை பாடசாலைகள் அரசுகையேற்றபடியால் அரச பணியில் சேர்க்கப்பட்ட இவர் தொடர்ந்து கிராமசபை தலைவராக இருக்க முடியாத நிலைஏற்பட்டது. அதைனையடுத்து ஆசிரியர் சேவை யிலிருந்து கல்விசேவையில் இணைந்து வளர்ந்தோர் கல்விஅதிகாரியாக கடமையாற்றினார். அதன்பின்பு மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினராகி தனதுசமூகப் பணி யினைத் தொடர்ந்தார்.

நம்மனதிலே என்றும் அழியாதுநிற்கும் அந்த சுனாமிப் பேரலைக்கு தன்மனைவியைப் பறிகொடுத்து மிகவும்மனவேதனையுடன் வாழும் திரு.இ.வினாயகமூர்த்தி அவர்கள் இங்கிலாந்தில் வாழும் தன்பிள்ளைகளின் அழைப்பைஏற்று அங்குசென்று மீண்டும் வந்து தன் மண்ணிலேயே வாழும் காரைதீவின் மகன்.

**தொகுப்பாசிரியர்**

## சாதனையளனாவதற்கான இலக்கணம்

உலகில் பிறந்த ஒவ்வொருமனிதனும் எவ்வாறு ஒருசிறந்த சாதனையாளன் ஆவதற்கான சிறப்புக்களை உடையவராக இருக்கவேண்டும் என்பதற்கு இலக்கணம் வகுப்பதற்கு தகுந்த உதார ணமாக அமரத்துவம் அடைந்த உயர்திரு. டாக்டர். மா. பரசுராமன் அவர்களையிட்டு வெளியிடப்படும் இந்நூல் விளங்குகின்றது. பிறப்பு என்பது எவ்வாறு நிலையானதோ அதேபோன்று இறப்பும் நிச்சயமானது. மானிடப்பிறவியானது எவ்விடத்தில் எவ்வினத்தில் எம்மொழியில் எம்மதத்தில் எப்பெற்ரோருக்கு அவதரிக்க வேண்டுமென்பதனை இறைவனே தீர்மானிக் கின்றான். மேலும் அப்பிறவிக்கான சிறப்பியல் புகழையும் எப்படியாக வாழவேண்டுமென்னும் ஒழுக்க நெறிகளையும் வாழ்விடப்பயிற்சிகளையும் அப்பிறவிக்கு அவனே வழிஅமைத்துக் கொடுக்கின்றான். இத்தகைய கோட்பாட்டுக்கு அமையவாழ்ந்தவர் எனதுமைத்துனர் பரசுராமன் அவர்கள்.

## எனதுபாலிய நட்பின் நினைவுகள்

அன்பிற்கும் பாசத்திற்கும் இருப்பிடமாய் இளமை யிலிருந்து ஒரேபாடசாலையில் உடன் பயின்று நண்பன் பரசுராமன் அவருடன் வாழ்ந்த காலத்தை மீட்டுப் பார்க்கின்றேன். நாங்கள் கல்விபயின்ற பாடசாலைக்கு அண்மையில் அமைந்திருந்த அவரின் விட்டில்தான் நாங்கள் ஓய்வுவேளைக்கு தண்ணீர் அருந்தச்செல்வோம். பொறுமைக் கும் அன்புக்கும் பரிவிற்கும் பாசத்திற்கும் இருப்பிடமாக அமைந்த அவரின்தாயார் தங்கமுத்து அவர்களின் கிணற்றின் வாளி அந்தவேளைகளில் அல்லோலகல்லோலப்படும் போதெல்லாம் எதுவித தடையுமின்றி புன்முறுவலுடன் குழந்தைகள் தங்கள் தாகத்தை தீர்ப்பதனை மகிழ்வுடன் பார்த்துநிற்பதனை இன்றும் என்நினை வலைகளில் நீங்காது நிற்கின்றது. பூமித்தாயைப்போன்ற பொறுமைமிக்க அந்ததாயின் வயிற்றில் பிறந்ததால்தான் அமரர் பரசுராமனும் அன்புடன் பிறரை மதித்து கௌரவிக்கும் பண்பாட்டினைப் பெற்றிருந்தார்.

## நான்ஆசிரியராகநண்பர் வைத்தியகலாநிதியானார்

இளமையிலிருந்து ஒன்றித்துவாழ்ந்த நாங்கள் இவரும் க.பொ.த. பரீட்சையில் சித்தியடைந்து ஆசிரிய கலாசாலை பிரவேசப்பரீட்சைக்கு தோற்றி அதிலும் சித்தியடைந்தோம். ஆனால் அவரின் விதிவசத்தால் தன்னை ஆசிரிய சேவையில் இணைத்துக் கொள்ளாது மக்களுக்கு அருந் தொண்டாற்ற வேண்டுமென்ற நியதியின் அடிப்டையில் ஆயுள்வேதக் கல்லூாயில் சேர்ந்து டாக்டர் பட்டம்பெற்றார். டாக்டரானது முதல் தான் கல்விகற்றபாடசாலைக்கு அருகாமையில் வைத்திய சாலை அமைத்து தான்பிறந்த மண்ணிற்கு மட்டுமன்றி அம்பாரை மாவட்டத்திலுள்ள சகலமக்களுக்கும் பாகு பாடின்றி அன்புடன் சீரியவைத்திய சேவையை செய்த ஒரு பெருமைமிக்க சீராளன்.

## என்சமூகத்தொண்டிற்குஉறுதுணையானவழிகாட்டி

நான்ஆசிரியராக இருந்தகாலத்தில் அரசியலில் ஈடுபடும் உரிமை இருந்த காரணத்தால் காரைதீவு கிராமாட்சிமன்றத் தலைவராகி பத்தாண்டுகள் பதவியாற்றிய காலத்தில் எனக்கு துணைநின்று ஆலோசனை கூறியதுடன் நடைபெற்ற தேர்தல்களில் எனக்கு ஆதரவாகச் செயற்பட்டு கிராமப் பணியை சிறப்புறச் செய்ய ஒத்துழைப்பு வழங்கிய பெருந் தகையே என்மச்சான்.

1962ல் அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப் பேற்றமையால் நான்அரசியலில் இருந்து விலகிக் கொள்ள கிராமமக்களின் வேண்டுதலுக்கிணங்க டாக்டர் அவர்கள் தேர்தலில் வெற்றியீட்டி ஊர் முன்னேற்றததிற்காக தன்னை அர்பணித்தவர். இவரின் காலத்திலேயே காரைதீவிற்கென தனியான கமத்தொழில் சேவைநிலையமும், கல்முனையோடு சேர்ந்திருந்த பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தினை பிரித்து காரைதீவிற்கென தனியானதாகவும் உருவாக்கியவர். மேலும் உலகப் புகழ்பூத்த முத்தமிழ்வித்தகர்சுவாமி விபுலாநந்தருக்கு அவர் பிறந்தமண்ணிலே முதன் முதலில் சுவாமிகளின் பாரியசிலையினை நிறுவியதுடன் 1985இல்இடம்பெற்ற வன்செயல்களால் பாதிக்கப்பட்டு பொலிவிழந்த காரைதீவினை அன்றய பாராளுமன்ற உறுப்பினரான திருமதி. ரங்கநாயகி பத்மநாதனுடனும் அப்போதய மாவட்டசபை உறுப்பினராகவும் இருந்த என்னுடனும் ஒன்றிணைந்து மீளக்கட்டியெழுப்பிய பெருமையுடையவர். தொடர்ந்து விபுலாநந்தரின் நினைவாக ஊரில்சகலவசதிகளுடனும் கூடியபாரிய நினைவு மணிமண்டபம் ஒன்றினையும் நிறுவினார்.

## காரைதீவின் வளர்ச்சியில் நண்பன் பரசுராமனின் பங்களிப்பு

காரைதீவின் வளர்ச்சிக்காக தன்னை முழு மையாக அர்பணித்து ஸ்ரீகண்ணகியம்மன் ஆலயத்தின் நிறைந்த தர்மகர்த்தாவாக பலவருடங்களாக தான் கனடா

செல்லும்வரை பணிசெய்து கோயிலைசிற்பக் கலையம் சங்களுடன் கூடிய வணக்கத்தலமாகவும் மாற்றினார்.

காரைதீவு கிராமசபைக் கட்டிடத்தில் முதன் முதலாக சுவாமிகளின் பெயரால் நூல்நிலையத்தினை அமைத்து அதனை கௌரவ ஆர்.பிரேமதாஸ அவர் களை வரவழைத்து திறப்புவிழாவும் நடத்தினார். தொடர்ந்து சுவாமிகளுக்கான முழுஅளவிலான திருவுருவச்சிலையொன்றை அமைப்பதற்காக ஊரவர் களுடன்சேந்து கடினமாக உழைத்தார் என்பதையும் நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

என்அன்பிற்குரியமச்சான் டாக்டர் பரசுராமன் எனது பாசத்திற்குரிய உடன்பிறவா சகோதரியான இலட்சுமையை மணம்முடித்த காலம்தொட்டு எங்கள் உறவுமுறை மிகச் சிறப்பனதாகவே இருந்தது. இடையில் சிறிதுகாலம் சிலரின் தூண்டுதல்களால் அரசியல் முரண்பாடு காரணமாக நாங்கள் பிரிந்திருந்த காலத்திலும் இருவரின்மனமும் கிராமத்தின் பால் கொண்ட பாசத்தாலும் எமதுநட்பு உறவு காரணமாகவும் மானசீகமாக இணைந்தே இருந்தோம்.

## நான்கண்ட கனம்மிகு பரசுராமன்

கறைபடியாத வாழ்க்கையில் தன்மனைவி இலட்சுமியுடன் இரண்டுபெண்களையும் ஒருமகனையும் தன் வாரிசாகக்கொண்டு நிறைந்த அவரதுவாழ்வில் குழந்தைப் பருவதிலேயே நோய்காரணமாக தன்ஒரே மகனை இழந்தார். காரைதீவுமண்ணிலே மற்றவர்களுக் கெல்லாம் ஒருமுன்னு தாரணமாகவும் ஸ்ரீகண்ணகி அம்மன் ஆலயத்தின் நிறைந்த தர்மகர்த்தாவாக சைவத்தின்பாதுகாவலனாகவும் கிராமசபைத் தலைவராக ஊரின்காவலனாகவும் பலரது மனதில் மாறாத கைராசியான டாக்டராகவும் வாழ்ந்து பிறந்த மண்ணிலேயே தன்னுயிரைவிட்ட மண்ணின்மைந்தன். ஊரிலே என்னகைக் காணும் போதெல்லாம் கட்டிஅணைத்து முத்தமிட்டு என்வாழ்வின் இறுதியை நோக்கிச் சென்றுகொண்டிருக் கின்றேன் எனக்கூறிய வார்த்தைகள் இன்றும் என்னால் மறக்கமுடியாமல் உள்ளது. எனது நண்பனும் அன்பு மச்சானுமான வைத்தியகலாநிதி பரசுராமன் தான்செய்த சேவையால் இன்றும் என்றும் காரைதீவில் வாழ்ந்து கொண்டிருப்பதாகவே நினைக்கின்றேன்.

முத்தமிழ் வித்தகர் பிறந்த தாயகமான காரைதீவில் மட்டுமன்றி கிழக்குமாகாணத்தின் பலஇடங்களிலும் அடிகளாரின் பணிகளை சந்ததி சந்தியாக நினைவு கூரத்தக்க படிவங்கள் அமைந்திருப்பதனைக் காணலாம். இதற்கு முன்னோடியாக திகழ்ந்தவர் டாக்கடர் மா. பரசுராமன் அவர்களே. இவர் எனது உறவினரும் நண்பருமான அமரர் திரு.ம. சற்குணத்துடன் இணைந்து விபுலாநந்தருக்கு காரைதீவில் சிலையினை நிறுவஎடுத்த முயற்சியின் பயனாக தொடர்ந்து மட்டககளப்பின் பலபகுதிகளிலும் அடிகளாரின் சிலை நிறுவப்பட்டது. இதனை புல்லுமலை திரு.ப.நல்ரெத்தினம் அவர்கள் வடித்துக் கொடுத்தார். பின்னர் படிப்படியாக பாடசாலைகள் ஊர்வீதிகளிலும் மார்பளவு மற்றும் முழுஅளவிலான சிலைகள் நிறுவப்பட்டன. இந்த அரும்பெரும் திருப்பணியை செய்வதற்கு முன்னோடியாக கலாநிதி மா.பரசுராமன் அவர்களே இருந்தார்கள். இதனூடாக அவர் என்றும் கிழக்கில் நிலைத்து வாழ்கிறார். விபுலாநந்தருக்கான சிலையை நிறுவும் திருபணியின் முன்னோடியான டாக்டர் மா.பரசுராமன் எனது பாடசாலை தோழன் மட்டுமன்றி மிகநெருங்கிய உறவினரும் ஆவார் இன்று அவர் நம்மிடையே இல்லையென்றாலும் அவருடன் நான் கொண்டிருந்த தொடர்புகளை வெளிப்படுத்துவதில் பெருமிதம் அடைகினகின்றேன்.

“வெற்றிக்கு இலட்சம் தேவையில்லை. இலட்சியமே தேவை. அதனுடன் வேட்கை வேண்டும். வேட்கையுடன் வெறிவேண்டும். வெறியுடன் வெற்றியை வேட்டையாட வேண்டும்.”

# பத்தினிதெய்வத்தின் பக்திதொண்டர்...

*திரு. சாமிநாதன் கங்காதரன*(B.A, Sp.Tr. Maths)
*தர்மகர்த்தா*
*ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயம்*
*காரைதீவு*

## கண்ணகிவழிபாடு

தமிழரை இடித்து உரைத்ததிற்காக சேரன் செங்கோட்டுவன் தென்நாடிலிருந்த படையெடுத்து சென்று வடக்கர்களான கனகவிஜயன் எனனும் இரு சகோதரர்களின் தோளில் இமையமலைச்சாரலில் இருந்து கல்லை தூக்கி வரச்செய்து கண்ணகிக்குசிலை எடுத்தான். இந்தசிலை யெடுப்பை கொண்டாடுவதற்கென்று மன்னன் தனியானதொரு பெருவிழாஎடுத்தான். அந்தவிழாவிற்கு பலநாட்டு மன்னர்களையும் அழைத்திருந்தான்.

இலங்கையிருந்து இவ்விழாவில் கலந்துகொள்ளச் சென்ற கஜபாகுமன்னன் தானும் ஓருசிலையைப் சேரன் செங்குட்டுவனின் ஆசிபெற்று இலங்கைக்கு எடுத்து வந்தான். அவன் சிலையுடன் இலங்கையில் வந்து இறங்கிய இடம் அங்கணான்கடவை என்னும் துறைமுகமாகும். அதன்பினனர் தான் முதன்முதலில் இலங்கையில் பத்தினிவழிபாடு தொடங்கி எங்கும் பரவாலாயிற்று. சிங்களபௌத்தர்களின் வழிபாட்டிற்குரிய கடவுளாகபுத்தபிரான் இருந்தாலும் காவல் தெய்வங்களாக கணபதியும் கந்தசுவாமி விஷ்ணு கடவுள் பத்தினித்தெய்வம் போன்றவர்கள் இன்றும் இடம்பெற்று வருவதை நாம்காணலாம். இந்தவரலாறு தமிழில் ஐம்பெரும்காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தில் நடகற் காதையில் விபரமாக பொறிக்கப்பட்டுள்ளது. இலங்கைக்கு தென்இந்திய தொடர்புபற்றி இக்காப்பியமே தெளிவாகக் கூறுகின்றது.

## கண்ணகி சிலைகொணர்ந்த கஜபாகுவேந்தன் விபுலாநந்தர் சிலைஎடுத்த பரசுராமன்

மேற்குறிப்பட்டதுபோல முத்தமிழ் வித்தகர் சுவாமிவிபுலாநந்தருக்கு சிலைஎடுத்து கிழக்கிலங்கையில் பலஇடங்களில் நிறுவச்செய்த பெருமை அமரர் மா. பரசுராமனுக்கும் அவரோடு இணைந்து செயல்பட்ட அமரர் ம.சற்குணத்திற்கும் உண்டு. அதுமட்டுமன்றி இளங்கோ அடிகளார் கண்ணகிக்கு ஒருபடிவத்தை அமைத்து சிலப்பதிகாரத்தை செய்தது போல விபுலாநந்தமுனிவருக்கும் ஒருபடிவத்தை அமைத்து அதை தமிழர்வாழ் இடங்களுக்கு ஊர் வலமாக எடுத்துச்சென்று அவரின் சீரிய செந்தமிழ்ப் பணியை நினைவூட்டி அச்சிலையினைநிறுவிய பெருமை பரசுராமன் அவர்களுக்குண்டு. அதுமட்டுமல்லாது திருவுருவச் சிலையின் திருப்பணிகளைப் பற்றிய படிவ மலரையும் வெளியிட்டபெருமையும் அவரையேசாரும். தற்போது

அவரைநினைக்கும்போது கண்ணகியின்சிலை கொணர்ந்த கஜபாகுவேந்தனா அந்நவரின் திறன்பாடிய இளங்கோவடிகளா எனஅமரர் பரசுராமன் அவர்களை எண்ணத் தூண்டுகின்றது.

இத்தகைய இனியதமிழன் பரசுராமன் கண்ணகி மேல் ஆராதபக்கி கொண்டவர். கஜவாகுமன்னன் காலத்தில் நிறுப்பட்ட கண்ணகிவழிபாட்டில காரைதீவிற்கும் முக்கிய இடமுண்டு. காரைதீவு கண்ணகியம்மன் ஆலையமும் மிகவும் பழமைவாய்ந்த தலமாகும். கண்ணகி வழிபாட்டுமுறையில் மதுரையை எரித்து தன்கற்பின் திறத்தால் கண்ணகி தீரா கோபக்கனலை தணிக்க ஆய்ச்சியர்குரவைக் கூத்தாடினர். அதன் பிரதிபலிப்பாக இன்று வசந்தன்கூத்து மட்டக்களப்பில் இடம்பெறுவது உண்டு. அதிலே கூவாக்குயிலே என்னும் வசந்தன் உண்டு. அதில் வரும் பா வரிகளால் மட்டக்களப்பில் கண்ணகிஅம்மன் ஆலயங்கள். எங்கெங்கெல்லாம் இருந்தன என்று வெளிப்படுகின்றது. அவற்றுள் கோளாவில் காரைதீவு பாணடிருப்பு எரிவில் கோட்டைக்கல்லாறு செட்டிபாளையம் புதுக்குடியிருப்பு ஆரைப்பற்றை கோட்டைமுனை ஏறாவூர் கிரான் கோராவளி வாழைச்சேனை என்பனவாகும்.

இந்தவரிசையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகவுள்ள கண்ணகிஅம்மன் வழிபாடு காரைதீவு கண்ணகி அம்மன் ஆலயத்தின் மூலம் துலக்கம் பெற்றுள்ளது. “கண்” கொடுப்பவளான இவ்வாலயத்தின் அன்னையின் அருளுக்குள் அடங்கிய இவ்வூரின் திருவையும் அறிவையும் அருளையும் பெற்று ஆண்டபாரம்பரியத்தில் சுவாமி விபுலாநந்தர், சித்தர் ஸ்ரீசித்தானைக்குட்டி, சுவாமி நடராஜானந்தர் போன்ற மகோன்னத மனிதர்களும் அடங்குவர்.

## கண்ணகிஅம்மன் கோயிலின் வரலாறு

இலங்கைத்தீவிலே மிகப்பழமை வாய்ந்த வொரு கிராமமாக காணப்படுவது கிழக்கிலங்கையிலுள்ள காரைதீவுக் கிராமமாகும். அங்கே அமைந்துள்ள கண்ணகிஅம்மன் ஆலயமும் மிகப்பழமை வாய்ந்த அருட்தலமாகக் காணப்படு கின்றது. கண்டியை ஆட்சி செய்த சேனாதிராச மன்னனின் மனைவி யானைமீதேறி தனது பரிவாரங்களுடன் கதிர்காம யாத்திரைக்காக போகும்வழியில் அமைந்திருந்த ஒரு கோயிலை அண்மித்தவுடன் மன்னனின் மனைவி சவாரிசெய்த யானை பயணத்தை தொடராமல் நிலத்தில் இருந்துவிட்டது. எவ்வளவோ முயற்சிசெய்தும் யானைப்பாகனால் அந்த யானையை அவ்விடத்திலிருந்து எழுப்பமுடியாமல் போய்விட்டது. தான்மேற்கொண்ட கதிர்காமயாத்திரையைத் தொடரமுடியாமல் ராணியார் மிகவேதனைப்பட்டார். யானை யிலிருந்து இறங்கியராணி அண்மையில் ஓலையாலும் மரந்தடிகளாலும் அமைக்கப்பட்ட சிறிய குடிசையைக் அவதானித்து அங்கு சென்றுபார்த்த போது அது ஒருஅம்மன் கோயிலெனக் கண்டுகொண்டாள். உடனடியாக தனது அமைச்சரை அணுகி இந்தகோயிலின் பூசகரை அழைத்துவந்து கோயிலில் பூசைசெய்யும்படி கேட்டுக் கொண்டாள். அதன்படி அமைச்சர் அக்கோயிலின் பூசகரை அழைத்துவந்து பூசைகள் நடைபெறத் தொடங்கியதும் படுத்திருந்த யானை தானாகஎழுந்து தன்தும்பிக்கை யினைஉயர்த்தி அம்மனைவழிபட்டது. மூடியதிரைச் சீலையின் பின்மந்திரங்கள் கூறிபூசை நடைபெறுவதை கண்டராணி அந்தமூடியசீலையை நீக்கி அம்மனைப்பார்க்க முற்பட்டபோது ராணிதனது கண்பார்வையை இழந்துதவித்தாள். அதனைப் பார்த்த பூசகர் அம்மனுக்கு பூசைநடைபெறும்போது திரைச்சீலை மூடியே பூசைசெய்வது வழக்கம் என்றும் அப்படி பூசைநடை பெறும்போது அதனையாராவது பார்த்தால் அவர்களுக்கு பார்வையிழந்துவிடும் என்றும்கூறினார். அதற்கு என்ன பரிகாரம் எனப்பூசாரை அமைச்சர் வினவியபோது தொடர்ந்துஅம்மனுக்கு நடைபெறும் பூசைகளில் கலந்து பக்தியுடன் மன்றாடினால் பார்வைமீளப்பெறலாம்எனக்கூறினார் பூசகர்.

ராணியின் கண்பார்வையிழந்த செய்தி மன்னனுக்கு கிடைக்கப்பெற மன்னனும் அங்குவந்து பூசகரின்சொற்படி தொடர்ந்து அங்கேயே தங்கி அம்மனின் பூசைகளில்கலந்து மெய்யுருகி அம்மனை வணங்கிட மூன்றாம்நாள் பூசை முடிந்தவுடன் ராணி கண்பார்வை மீண்டும் கிடைக்கப் பெற்றாள். அம்மனின்அருளையும் அனுவையும் அனுக்கிர கத்தையும் நேரில் உற்றுணர்ந்த ராணி தனக்கேற்பட்ட பூரிப்பால் அந்த அம்மனுக்கு அடிமையாகி தனது சந்தானத்தாரை வரவழைத்து ஆலயபுனருத்தாரணம் செய்து ஆலயத்தில் தவறாது பூசைபுனற்காரங்களை நடத்துமாறு மன்னனைக் கேட்டுக்கொண்டாள். அதற்காக சேனாதிராச மன்னன் தன் ஆட்சிக்குட்பட்டு வரி செலுத்தும் சிற்றரசனின் பகுதியில் இக்கோயில் அமைந்துள்ளதால் அந்த ஆலையம் அமைந்திருந்த இடத்திலிருந்து ராணியின்கண்பார்வைக்கு எட்டியதூரம்வரையில் காணப்படும் நெற்செய்கைக்கு உட்படுத்தப்படும் காணிகள் யாவற்றையும் அம்மன் கோயிலுக்கு கொடுத்து அவ்வூர்அரசனும் தங்கள்ஆட்சிக்கு இனிமேற்கொண்டு வரிசெலுத்த வேண்டாம் எனவும் ஆணை பிறப்பித்தான். அதனைத் தொடர்ந்து மன்னரின் சந்ததியினரே அதனைப்பராமரிப்பதாகவும் கண்பார்வை மீளப்பெறப்

பட்டதால் ராணியால் வழங்கப்பட்ட நிலம் கண்கண்ட வெளியென இன்றுவரை அழைக்கப்பட்டும் வருகின்றது.

## மாணிக்கநாச்சி சந்தானத்தின் வழித்தோன்றல்

இப்படியான பழமைவாய்ந்த வரலாற்றைக் கொண்ட ஆலயநிருவாகத்தில் பங்குகொள்ளுகின்ற பரம்பரையில் பிறந்த வைத்தியகலாநிதி மாணிக்கப்பிள்ளை பரசுராமன் அவர்கள் மாணிக்கநாச்சி சந்தானத்தின் வழித்தோன்றலாக தலைமைப் பதவியான தர்மகர்த்தா பதவியினை ஏற்று நீண்டகாலமாக கண்ணகியின் தொண்டில் தனது சுவட்டைப்பதித்தார். அவரது பொறுப்புவாய்ந்த வைத்திய தொழிலின் அழுத்தங்களுக்குள்ளும் இவ்வாலய த்திற்கும் சமூகத்திற்கும் அவர்தனது அளப்பரிய சேவையை வழங்கியமை எம்மால் மறக்கமுடியாததும் மெச்சத்தக்கதான விடயமாகும்.

மிகவும்பழமைவாய்ந்த கட்டிடங்களைக் கொண்டிருந்த கண்ணகிஅம்மன் ஆலயத்தினை பழங்காலகலை யம்சங்களுடன் தற்கால கட்டிடதொழில் நுட்பத்திற்கேற்றவாறு குடமுழுக்கு கண்டபெருமையும், அதன்காரணமாக “தமிழ்வேள்” என்றபட்டத்தினைப் பெற்றமையும் அன்னாரது தொண்டிற்குகிடைத்த பலனாகும். இவ்வாலயத்தின் மூலம் முத்தமிழ் வித்தகர் சுவாமிவிபுலாநந்தருக்கு சிலைஎடுத்து அதனை கிராமாட்சிமுன்றலில் தவத்திருகுன்றக்குடி அடிகளாரை அழைத்துவந்து திரைநீக்கம் செய்து அதனைத் தொடர்ந்து பலஅறிஞர்களையும் பேராசிரியர்களையும் காரைதீவிற்கு வரவழைத்து விபுலாநந்தருக்கு முத்தமிழ் விழாவெடுத்து தமிழுக்கும் சைவத்திற்கும் அணிசேர்த்து காரைதீவிற்கு பெருமையையும் தேடித்தந்தவர் பரசுராமன் அவர்கள்.

1985இல் ஏற்பட்ட வன்செயல்களின் போது இவ்வாலயம் வன்முறையாளர்களால் சிதைக்கப்பட்டது. சிதைக்கப்பட்ட ஆலயத்தினை மீண்டும் புதுப்பொலிவுற குடமுழுக்குச்செய்து ஊரவர்க்கு அன்னையின் ஆசியையும் அருளையும் கிடைக்கசெய்த திடமானமனம்கொண்ட பெருமையும் அவரையே சாரும். ஆலயத்தில் தவறாது உரியநேரத்தில் உரிய கிரியைகள் நடைபெறவேண்டும் என்பதில் மிகவும் கண்டிப்பானவர். நேரம்தவறாது ஆலயத்திற்கு வருகைதந்து கிரியைகள் நடைபெறுவதற்கு எங்கள் சபையினருக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து உற்சாகப்படுத்தும் பண்பாளர். சிறந்த முகாமைத்துவமும் நேர்மையான செயற்பாடும் இவரது இரத்தத்தில் ஊறிய நற்பண்புகளாகும். பெறுமதிமிக்க கோயிலையும் அதன் சொத்துக்களையும் மிகவும்கண்ணியத்துடன் காப்பாற்றி அவைஉரிய முறையில் பயன்படவும் வழியமைத்தவர்.

ஆலயக்குருக்கள் தொடக்கம் சகலநிர்வாகசபை உறுப்பினர்களும் மற்றும் ஆலயச்சந்தானத்தின் பங்காளர்களும் காரைதீவு மக்களும் ஏன்அம்பாரை, மட்டக்களப்புபிரதேச தமிழ் முஸ்லீம்மக்களின் நல்ல அபிப்பிராயத்தை பெற்றிருந்தவர். தனதுசொந்த தேவைகளுக்காகவோ அன்றி சுயகௌரவத்திற்காகவோ தனது தர்மகர்த்தாபதவியினை பயன்படுத்தாத உயர்ந்த மனிதன். தெய்வத்தொண்டனாகவும் கிராமாட்சி தலைவராகவும் பலகாலம் இக்கிராம மக்களுக்காக பெரும்சேவையை ஆற்றிய பெருமகன். கிராமத்திற்கு மின்சாரம் கிடைக்கப்பெற்று ஊரைவெளிச்சத்திற்கு கொண்டு வந்ததுமுதல் ஊரில்பல முன்னேற்றங்களையும் திறம்படச் செய்து வெற்றிகண்ட ஒரு வெற்றியாளன்.

காரைதீவில் அமைந்துள்ள சாரதா இல்லத்திற் காகவும் அதனை நடத்துகின்ற இராமகிருஷ்ண மிசனுக்காகவும் தன்ஊதியத்தில் பலஉதவிகளை வழங்கியகொடையாளி. இப்படியாக அவரது சேவைகள் பற்பலவென அடுக்கிக்கொண்டே போகலாம். இத்தகைய பெருமகன் இன்று எம்மோடில்லாதனை நினைக்கும்போது நெஞ்சம் வேகுகின்றது. அவரதுஉடல் காரைதீவு மண்ணில் தீயுடன்சங்கமமானாலும் அவரதுபணிகள் அவரை என்றும் காரைதீவில் நினைவுகூர்ந்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.

ஓம் சாந்தி!

“உங்களுக்குள் இருக்கும் உங்கள்குணம்தான் அசல். உங்கள் அசல்தான் உங்கள் வேர். அந்தவேர் மூலமாகத்தான் மரமாக எழுவதும் நீங்கள் மனிதனாக இருப்பதும் அடங்கியுள்ளது. நல்ல மனிதர்களின் சொற்களை நடத்தைகளை பழக்க வழக்கங்களை வழிகாட்டுதல்களை ஏற்றுக் கொள்ளுங்கள். ஆனால் அவர்களாக மாறிவிடாதீர்கள். நீங்கள் நீங்களாகவே இருங்கள். இதுதான் வெற்றிக்கான காரணமும்.”

# ஆலமர நிழலானார்...

வி.ரி.சகாதேவராஜா (M.Ed.)
உதவிக் கல்விப் பணிப்பாளர்
ஊடகவியலாளர்
காரைதீவு.

திரு வி.ரி. சகாதேவராஜா அமரர் வைத்தியகலாநிதி மா. பரசுராமனது பணிகளிலே உறுதுணையாகநின்று தோழோடுதோழ் கொடுத்து செயல்பட்டவர். இவர் ஒரு கல்விமான் கல்விப்பணியாற்றுபவர். விபுலாநந்தர் ஞாபகார்த்த மணிமண்டப செயலாளரான திறப்புவிழாவில் முன்னின்று விழாவிற்கான மலர்தயாரிப்பு முயற்சியில் வெற்றிகண்டவர்.

கல்விப்பணிகளோடு ஊடகத்துறையிலும் தனது தடத்தை பதித்துள்ள சகாதேவராஜா அவர்கள் அம்பாரை மட்டக்களப்பு பிரதேசங்களில் காலநிலை மற்றும் பிறகாரணங்களால் வெளிவராத பலசெய்திகளை தாமதமின்றி உலகிற்கு எடுத்துச்செல்லும் சிறந்த நடுநிலைமையுடைய பத்திரிகையாளராகவும் விளங்குகின்றார். அவரதுபத்திரிகை துறைச்சேவையினால் காரைதீவில் மட்டுமன்றி அயல்க் கிராமங்களிலும் நடைபெற்ற அசம்பாவிதங்கள் அச்சுறுத் தல்களை வெளிக்கொணர்ந்து மக்கள்குறைகளை தீர்ப்பதில் வெற்றி பெற்றவர். 2003ஆம் ஆண்டில் கனடாவிலே சுவாமிவிபுலாநந்தரின் நினைவுவிழா கொண்டாடுவதற்காக தாயகத்தில் பலஊர்களிலிருந்தும் சுவாமிகள்பற்றியபடத் தொகுப்பினை பலஇன்னல்களுக்குமத்தியிலும் அதனை முறையாக தயாரித்து வழங்கியவர்.

2004ல் தென்கிழக்காசியாவை தாக்கிய சுனாமி இலங்கையில் காரைதீவினையே முதலில் மிகஅகோர மாகத்தாக்கியது. அச்சுனாமியின் வேகத்துடன் போட்டி போட்டுக் கொண்டு அதுபற்றிய தகவல்களை உலகிற்கு வெளிக்கொண்டுவந்த ஒருதுணிவான பத்திரிகையாளர். சுனாமியின் நேரடியானபாதிப்பைச் சந்தித்த சகாதேவராஜா அவர்கள் ஆழியில் ஊழி என்னும் சிறப்பான ஒருநூலினை எழுதிவெளியிட்டுள்ளார். நல்லஎழுத்தாளர் நடுநிலை ஊடகவியலாளர் பண்பான பேசாளர். இவைஎல்லாவற்றிற்கும் மேலாக பொதுப்பணி என்றால் முன்னிற்கும் துடிப்பான ஒருஇளைஞர்.

**தொகுப்பாசிரியர்.**

## தனது சாதனையால் மக்கள் மனதில் நிற்பபவர்

காரைதீவின் இருபக்கமும் முஸ்லீம்கள் வாழுகின்ற ஒருபிரதேசம். இங்கேபலவிதமான இனப்பூசல்கள் அடிக்கடி இடம்பெற்று சிலதுன்பங்களை சந்திக்க நேர்வதுண்டு. இத்தகைய துயருறும்வேளைகளில் பாதிக்கப் பட்டவர்களுக்கு புகலிடம் தருவோராக பிரச்சனைகளை சமரசம்செய்து சமாதானத்தை நிலைநாட்டுபவராக அமரர் பரசுராமன் அவர்கள் விளங்கினார். அதுமட்டுமன்றி காரைதீவு கிராமத்திலுள்ள மக்களின் துயர்துடைப்பதில் முன்னின்றார்.

தனது ஆண்வாரிசான செந்தில்வாசைன குழந்தை யிலேயே இழந்த இவருக்கு மகனின் பாதிப்பு இறுதிவரை நிலைத்துக் கொண்டே இருந்தது. அச்சோகத்திலிருந்து மீள்வதற்காக இக்கிராம பிள்ளைகளின் வளர்ச்சியில் அக்கறையுடன் நடந்து கொண்டார். தான்செய்யும் உதவியால் வழமான சிறப்புறும் பிள்ளைகளை கண்டு மகிழ்வுற்றார். இவர் ஒருவைத்தியராக நோயாளர்களின் உடல் நோய்களுக்கு மாத்திரமன்றி அவர்களின் உள்ளப் பாதிப்புகளையும் கண்டு அவர்களை ஆறுதல் செய்து தேற்றுபவராக விளங்கினார். மனிதப் பாடுகளையம் துயரங்களையும் தீர்க்கின்ற ஆல மரமானது அகன்றுபரந்து தன்கிளைகள் முறிந்து விடாதபடி விழுதுகளால் அவற்றை தாங்கி மரத்தையும் உறுதியாக வைத்திருப்பது மட்டுமன்றி பிற சிறியமரங்களும் தன்னில் வளர்வதற்கு இடமளிப்பதுமுண்டு. அதேபோல இவரிடம் முக்கியமாக இனக்காழ்ப்பு மொழிக்காழ்ப்பு மதக்காழ்ப்பு அற்றவராக இருந்ததினால் இந்தபெரிய ஆலமரத்தின் கீழ் தமிழர்மட்டுமன்றி முஸ்லீம்களும் சிங்களமக்களும் இளைப்பாறிச் செல்வதுண்டு. மேலும் இவர் தமிழ் ஆங்கிலம் சிங்களம் ஆகிய மூன்றுமொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றிருந்ததால் மூன்று இனத்தவருடனும் சாவாசகமாக பழகும்பண்பினர். இத்தகைய ஆலமரமாக அனைவரையும் ஆக்றசித்த அந்தமகான் இயங்குநிலையில் எய்திய சாதனைகள் பற்பல. அவை சமகாலத்தில் புட்டுக்காட்ட வேண்டியவையாகின்ற கடப்பாடு எனக்குள்ளது.

## சந்தனநிற உடையணிந்த சாந்தசொரூபி

நானறிந்தபராயம் முதல் "டாகுத்தர் அத்தான்" அல்லது "சிவாட அப்பா" என்று அன்போடு அழைப்போம். எமது வம்சகுல விளக்காக ஒளிர்ந்தவர். எமதுகுடும்ப குவலயத்தில் அவருக்கென பெருமதிப்பு இருந்தது. சந்தனநிற வாலாமணியுடன் வேட்டியுடனும் சபைக்கு ஒருகிருஷ்ண உருவம் சமூகமளிக்கும். அந்தஉருவம் வந்த பின்புதான் எந்தக் காரியமும் நடந்தேறும். எனதுதந்தையாரை மாமா என அழைத்து அவருடன் மிகுந்த மரியாதையடன் நடந்து கொள்வார். வையகத்தில் வாழ்வாங்குவாழ்ந்த அந்தப் பெருந்தகை இன்று நம்மத்தியில் இல்லை என்பது பெருங் கவலைதான்.

எத்தனை டாக்டர்கள் காரைதீவிற்கு வந்தாலும் டாகுத்தர் எனஅன்போட அழைப்பது எனது அத்தான் பரசுராமன் அவர்களையேதான்.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்திவ் வுலகு" என்பது தமிழ்மறை தந்த வள்ளுவர் வாக்கு. மனிதவாழ்வின் நிலையாமை பற்றி சொல்லியுள்ளார் வள்ளுவர். ஆனால் அந்த நிலையாமையை வென்று இறந்தும் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் ஒருசிலரே. அவர்களுள் வைத்திய கலாநிதி மா. பரசுராமன் அவர்களும் ஒருவராவார்.

"உற்றவன் தீர்ப்பான் மருந் துஉழைச் செல்வானென்று
அப்பால்நாற் கூற்றே மருந்து"

என்னும் குறளுக்கமைய வைத்தியசேவை செய்து உயர்ந்தவர். அவரது கலவைக்காக சாரை சாரியாக வரும் மக்களுக்கு அளவேயில்லை. குறிப்பாக முஸ்லீம் சகோதர்கள் அதிகம். ஒருகாலத்தில் காரைதீவு என்றால் வெளியூர வர்களால் முதல் உச்சரிக்கும் பெயர் டாக்டர் பரசுராமன் என்பதாகும். அந்த அளவிற்கு அவரது மேதாவிலாசம் வெளி யூர்களில் பளிச்சிட்டிருக்கின்றது என்பது தெளிவாகின்றது.

## ஆலமரத்தை சுற்றிய கொடியானேன்

உறவுமுறையால் உள்வீட்டுப் பிள்ளையாக வலம் வந்த எனக்கு விபுலாநந்த பணிமன்றம் மூலம் அவருடன் சேர்ந்து பணியாற்றும் வாய்ப்பும் கிடைத்தது என் அதிஸ்டமே. இன்று நிமிர்ந்து நிற்கும் விபுலாநந்த ஞாபகார்த்த மணிமண்டபத்தின் மூலகர்த்தா அவரே. அதற்காக அவருடன் இணைந்து கொழும்பு சென்று அங்குபல அரசியல்வாதிகளினதும் அறிஞர்களினதும் அறிமுகம் அவர்களால் எனக்குகிடைத்தது மட்டுமன்றி "அடிகளார் நினைவாலயமலர்" ஆசிரியராக பணியாற்றவும் அடியேனுக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. டாக்டரது பலபரிமாண ஆளுமையை பலஇடங்களில் கண்டு வியப்படைந்தது மட்டுமல்லாமல் அவரிடமிருந்து அவற்றை

கற்றுக் கொள்ளும் பேறும் பெற்றேன். காரைதீவில் “சேர்மன்” என்றால் இருவருக்குத்தான் அந்தப் பெயர் பொருந்தும் ஒருவர் எனது அத்தான் பரசுராமன் மற்றயவர் திரு.இ.வினாயகமூர்த்தி அவர்கள்.

அண்மையில் இந்த உலகத்தையே உலுக்கிய சுனாமியால் எமது மண்ணும் குறிப்பாக காரைதீவும் பலமாகப் பாதிப்பிற்கு உள்ளானது. பல்லாயிரம் உயிர்களைப் பலிகொண்டதுடன் பலகோடி ரூபாய்கள் பெறுமதியான சொத்தக்களையும் அழித்துச் சென்றுவிட்டது. சுனாமியன் தாக்கத்தை நேரில்கண்டவன் என்பதாலும் ஊடகத்துறையில் பணிபுரிபவன் என்பதாலும் அதுபற்றிய தகவல்களை திரட்டி உலகத்திற்கு தெரிவித்தேன். “ஊழியில் ஆழி” என்னும் ஒருநூலினை சுனாமியின் தாக்கம் பற்றிய தகவல்கள் அடங்கியதும் மேலும் அதனுடன் காரைதீவுபற்றிய சரித்திரத்தினையும் எழுதி வெளியிட்டேன்.

நான்எழுதிய அப்புத்தகத்தில் காரைதீவு சம்பந்தப்பட்ட பலதகவல்களை மதிப்பிற்குரிய பரசுராமன் அவரிடம் கேட்டுப் பெற்று அதில் பதிவுசெய்துள்ளேன். அவரிடம் நான் தகவல்களை பெறச்சென்றபோது மிகவும் உற்சாகமாக என்னுடன் கலந்துரையாடி பலதகவல்களைத் தெரிவித்தார். மேலும் சிலதகவல்கள் தன்னிடம் இல்லாமல் இருப்பதாகவும் எனதுதந்தையாரிடமும் பலதகவல் இருந்த தாகவும் குறிப்பிட்டார். பண்டிதர் வீ.சி. கந்தையா அவர்களால் எழுதி வெளியிடப்பட்ட கண்ணகி வழக்குரை நூலுக்கான பலதகவல்கள் எனது தந்தையாரிடமிருந்த ஏட்டுச்சுவடிகள் மூலமே நூலாசிரியர் பெற்றுக் கொண்டதாகவும் தெரிவித்தார். மேலும் இப்படியான சிறந்த காரியங்களை தொடர்ந்து செய்ய வேண்டுமென அன்பொழுக என்னை ஆசீர்வதித்தார். இப்படியாக தட்டிக்கொடுப்பவர்கள் இக்காலத்தில் மிக அரிது.

## பணிகளின் சிகரமாக பரசுராமன்

கண்ணகியம்மன் ஆலய பிரதம தர்மகர்த்தாவாக இந்துசமய அபிவிருத்திசங்கத் தலைவராக அவர் சைவசமயத் துறையில் காட்டிய ஆர்வம் அளப்பரியது. சமூக, கலாசாரம், அரசியல் துறைகளில் நேர்மையுடன் பரிணமித்து விளங்கியவர் டாக்டர் பரசுராமன். இவரது செயற்பாடுகளால் காரைதீவின் புகழ்பரவப் பல தலைவர்கள் பெரியோர்களின் தொடர்பும் காரைதீவிற்கு இவரால் கிடைத்தன. எங்கள் குலத்திற்கு மட்டுமன்றி காரேறு மூதூருக்கும் ஆலவிருட்சமாய் மிளிர்ந்தவர்அவர். ஊர்பற்றும் நல்லுணர்வுமுள்ள காரைதீவில் பிறந்த எவரும் அவரை என்றுமே மறக்கமாட்டார்கள் என்பதுஉறுதி. அகுதாவது அவர்இன்னமும் நித்தியமாய் எம்மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார் என்பதுவே உண்மை.

புராணங்களில் கல்லாலை என்னும் மரத்தைப் பற்றி இடையிடையே பேசப்படுவதுண்டு. என்றும் நிலைத்துள்ள இறைவனையும் அவருள்ளே நிலைத்துள்ள இறையடி யார்களையும் குறிப்பிடும்போது கல்லாலை என்று குறிப்பிடுவது வழக்கு. தாவர சாஸ்திரத்தின்படி பல புயல்களையும் பெருங்காற்று இடிமுழக்கம் போன்றவற்றை தாங்கி பலநூற்றாண்டு காலம் நிலைத்திருப்பது கல்லாலை. அப்படியான மரத்தின் கீழ்தானே முனிவர்கள் தவம் செய்து வாழ்ந்து தமது உபதேசங்களை மக்களுக்கு வழங்கினார்கள். இதே போலத்தான் வைத்தியகலாநிதி மா. பரசுராமன் அவர்களும் தமது வைத்திய சமூக அரசியல் ஊராட்சி மன்ற சேவைகளாலும் யாரும் செய்ய முடியாத பெரிய சாதனைகளை காரைதீவில் செய்துள்ளார். அதனையிட்டு அவரது முதலாவது சிரார்த்ததினத்தில் இந்நூலில் எனது கட்டுரை அணிசெய்வது நான் பெற்ற பாக்கியமே.

“மதம் தீமைகளை அழிக்கின்றது ஒழுக்கம் தீமையை மறைக்கமட்டுமே செய்கின்றது. ஆசை அழைத்துச் செல்கிறது. விருப்பம் பின்னாலிருந்து தள்ளுகிறது”.

# தெய்வமாக நடமாடினார்

கு.மகாலிங்கசிவம்
முன்னாள் காரைதீவு பிரதேச சபை உறுப்பினர்
காரைதீவு.

1963ஆம் ஆண்டில் முதன்முதலாக காரைதீவில் ஒருநடமாடும் தெய்வத்தை சந்திக்கும் வாய்ப்பு எனக்கு கிட்டியது. அதனைத் தொடர்ந்து அவரது உறவினரை மணம்முடித்ததினால் நான் அவரின் மிகவும் நெருங்கிய உறவினரானேன். தொழில்நிமித்தம் வெளிமாவட்டத்தில் நான்கடமையாற்றிய போதும் என்குடும்பத்தவரில் மிகவும் அன்புடையவராகவும் என்பிள்ளைகளை தன்பிள்ளை களைப் போல கவனி த்தும்வந்தவர் டாக்டர்அவர்கள். அம்பாரை மாவட்டத்திலே மிகவும் புகழ்பெற்ற கைராசிக்கார டாக்டராக விளங்கிய பரசுராமன் அவர்கள் எங்கள் குடும்பத்தவர்களுக்கு மட்டுமன்றி பலருக்கு ஏற்பட்ட நோய்ப்பிணிகளையும் எதுவிதமான எதிர்பார்ப்பு களுமின்றி குணப்படுத்திய பெருந்தகையாளர்.

## காரைதீவின் இருகண்கள்

திரு.இ.வினாயகமூர்த்தி அவர்களும் அமரர் டாக்டர்.மா.பரசுராமன் அவர்களும் காரைதீவிற்கு கிடைத்த இரண்டு கண்கள். இவர்கள் இருவரும் இக்கிராம வளர்ச்சிக்காக பலஅளப்பரிய சேவைகளைச் செய்தவர்கள். பரசுராமன்அவர்கள் காரைதீவில் டாக்டராகவும் கிராமசபைத் தலைவராகவும் ஆலய தர்மகர்த்தாவாகவும் பலநோக்குக் கூட்டறவுச் சங்கத்தலைவராகவும் கமநலசேவை நிலையத்தின் தவிசா ளராகவும் இந்து கலாச்சார சபையின் தலைவராகவும் விபுலாநந்தமணிமண்டப ஸ்தாபகராகவும் பணிபுரிந்தவர். அவரது சேவைகளால் அப்பதவி புனிதம்பெற்றது என்றே கூறவேண்டும். அமரர் டாக்டர் பரசுராமன் அவர்கள் தமது உடல் பொருள் அனைத்தையும் காரைதீவின் வளர்ச்சிக்காக அர்பணித்தவர். அன்னாரது சேவை பலமட்டங்களில் தனித்துவமும் சிறப்பும் உடையதாக விளங்கியது. அரசியல் ஆத்மீகம் தவிர அவர் சமூகமேன்பாட்டிலும் தனதுசேவையை விரிவுபடுத்தியவர். தான் எடுத்துக்கொண்ட எந்தக் காரியத்தையும் குறைவில்லாது நிறைவேற்றும் ஆற்றல் படைத்த சிறந்த நிர்வாகியாக நான் அவரைக் கண்டேன்.

## விபுலாநந்தருக்கு சிலைநிறுவி மக்கள் மனதில் நிலைத்தவர்

தமிழ்நாட்டிலிருந்து குன்றக்குடி அடிகளாரை வரவழைத்து சவாமிவிபுலாநந்தரின் சிலையை திறப்பித்து

தொடர்ச்சியாக அவர் நடத்திமுடித்த முத்தமிழ்விழா அதற்கு சான்றுபகரும் நிகழ்வாகும். அதன்பின்னர் இன்றுவரை காரைதீவில் இப்படியான எழுச்சிமிக்க நிகழ்வு ஒன்றுதானும் நடைபெறவில்லை என்பதை நினைக்கும் போது டாக்டர் அவர்கள் மிகவும் உயர்ந்து காணப்படுகின்றார். அமைதியான சுபாபமும், பொறுமையான குணமும், கவர்ச்சியான உரையாடலும், சிரிப்பூட்டும்பகிடிகளும் அவரிடம் என்றும் மாறாமலிருந்த நற்பண்புகளாகும். ஒருநடமாடும் தெய்வமாக எங்கள் குடும்பத்தவரால் போற்றப்பட்ட டாக்டர்அவர்கள் இறந்த செய்தி என்னை மிகவும் பாதிப்புக்கு உள்ளாக்கியது. இயற்கையை வென்றவர் யாரும் இல்லை. அதனால் அவரும் இயற்கையுடன் சங்கமமாகிவிட்டார் என்று சொல்வதிலும் பார்க்க கிழக்கிலங்கை மக்களின் மனதில் ஒன்றரக்கலந்து விட்டார் எனக்கூறவதே பொருத்த மானதாகும். அத்தகைய மகத்தானதொரு பணியை அவர் சாதித்துள்ளார்.

விபுலாநந்தஅடிகளை அறிந்தவரும் அவரது பணிகளால் பயன்பெற்றவர்களும் தமிழகத்திலும் ஈழத்திலும் அநேகர் உள்ளனர். அதுமட்டுமன்றி அவரது பெயரில் தமது சுயஇலாபங்களையும் பெருமைகளையும் பெருக்கி கொள்பவர் களுள்ளும் அநேகர் உள்ளனர். விபுலாநந்தஅடிகளாரின் மறைவிற்கு பின்னர் ஆரம்பமான இந்தப்பாரம்பரியம் இன்றும் தொடர்வது வேதனைக்குரியது. அவரினை நினைவு கூருகின்றோம் என்ற போர்வையில் களியாட்டங்களை நடத்தி அதில் குளிர்காய்வது தவிர்க்கபட வேண்டியதாகும். ஆனால் வருங்கால சந்ததியினருக்கு சுவாமிகளின் பணிகளை எடுத்து நினைவுறுத்தி அவரின் வழியைகடைப் பிடிக்கத்தக்க செயல்பாடுகளில் இறங்கியவர்கள் ஒருசிலரே. அவர்க ளுள்ளும் விரல்விட்டு எண்ணக் கூடியவர்கள் மிகச்சிலரே. அந்தவகையில் சுவாமிகளது மறைவிற்கு ஐந்து வருடங்களுக்கு பிறகு அடிகளாரின் வாழ்க்கை வரலாற்றை தமிழ்உலகிற்கு முதலில் அறிமுகம் செய்தவர் அமரர் அருள்செல்வநாயகம் அவர்களே.

அதன்பின்பு அருள்செல்வநாயகம் எழுதிவெளி யிட்டகட்டுரை தொகுதியில் பலதகவல்கள விடுபட்டி ருந்தபடியால் அந்த குறைபாட்டை காரைதீவில் அமரர் மா. பரசுராமன் அவர்களின் முயற்சியால் அமரர் ம. சற்குணத்தின் அளப்பரிய பங்களிப்பால் அடிகளார் படிவமலர் மூலம் அதனை நிபர்த்தி செய்தாகள். இன்று விபுலாநந்த அடிகளாருக்கு எத்தனை நூல்கள் நினைவு மலர் ஆய்வுகள் மதிப்பீடுகள் விழாமலர்கள் வெளிவந்துவிட்டன. அவற்றை யெல்லாம் வாசித்து அறிந்தவர்களுக்கு ஓர்உண்மை புலனாகும் .அதவாது அமரர் மா.பரசுராமன் அமரர் ம.சற்குணம் ஆகிய இருவராலும் படைக்கப்பட்ட படிவமலர் இன்றுகூட அடிகளார்பற்றிய அதிகமான தகல்களை தருமொரு நூலாகவுள்ளது. இந்த சாதனைக்குரியவர்களான அவ்இருவரும் என்றுமே போற்றப்படவேண்டும். இது விபுலாநந்தஅடிகாளருக்கு செய்தமிகப்பெரிய திருப்பணி யாகும். விபுலாநந்தர் பிறந்தமண்ணில் முழு உருவச்சிலை அமைந்தது முதல்அதனைத் தொடர்ந்து கிழக்கிலுள்ள கல்விசாலைகளிலும் சிலைகள் நிறவப்பட்டன. அதற்கு முன்னோடியான சாதனையை அமரர் மா.பரசுராமன் போன்ற தமிழ்பற்றுள்ள ஒரு தொண்டனால்தான் செய்ய முடியும். விபுலாநந்தரின் சிலைகள் மட்டக்களப்பில் கௌரவப் படுத்தப்படும் காலம்வரையும் அந்தச்சிலை திருப்பணியை ஆரம்பித்துவைத்த வைத்தியகலாநிதி மா.பரசுராமன் அவர்களின் பெயரும் நிலைத்து நிற்கும்.

# ஸ்ரீராமகிருஷ்ணமிசனின் அன்புத்தொண்டர்

இறைபக்தியில்
## சுவாமி அஜராத்மானந்த
இராமகிருஷ்ணமிசன்
கல்லடி மட்டக்களப்பு

## வள்ளுவரின்வாக்கின்படி வாழ்ந்தவர்

மறைந்தும் மறையாதபேராளர் டாக்டர் மா. பரசுராமன் அவர்களின் ஆத்மா நிலைபேறடைவதாக.

“நெருநல் உளனொருவன் இன்றுஇல்லை என்னும்
பெருமை யுடைத்தில் வுலகு”

பொய்யா மொழிப்புலவன் வள்ளுவனின் மேற் குறித்த வாக்கிற்கேற்ப பலபெருமைகளை தன்னகத்தே சுமந்தவராய் நேற்றுவரை எம்முடன் வாழ்ந்த ஓர்அன்பர் இன்று எம்மத்தியில் இல்லை.

விபுலாநந்தஅடிகள்,நடராஜந்தாஜீ,பரசுராமன்
இராமகிருஷ்ணமிசன் சங்கிலித் தொடர்பு

விபுலாநந்த அடிகளாரின் உறவினரும் அவர் பாதையயை பின்பற்றியவருமான சுவாமி நடராஜநந்தாஜீ விபுலாநந்தரவர்களின் மறைவின் பின்னர் இராமகிருஷ்ண மிசனின் பரிபாலனத்தையும் முக்கிய பணியையும் ஏற்று தகைபட நடத்திவந்தார். திரு.பரசுராமன் அவர்கள் சுவாமி நடராஜாநந்த சுவாமி ஜீவாநந்தாஜீ போன்றவர்களின் மிசன்களை நிருவகித்த காலங்களில் அவர்களுடைய தொண்டிற்கு தொண்டனாக விளங்கினார்.

இதனால் காரைதீவு கிராமமும் எமதுஸ்தாபனமும் நீண்ட காலமாகப் பின்னிப்பிணைந்த ஓர் வரலாற்றுப் பின்னணி யைக்கொண்டது. காரைதீவு என்றதும் எம்நினைவில் நிற்பது எமது இராமகிருஷ்ணமிசன் மகளிர் இல்லமும், அன்பர் டாக்டர் பரசுராமன் போன்ற அன்பர்களுமே. அந்தளவு எமதுமகளிர் இல்லப் பணிகளிலும் எமதுஸ்தாபனம் சார்ந்தபணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட ஓர்அன்பர் இன்று இல்லாமை எமது ஸ்தாபனத்திற்கு பேரிழப்பே.

காரைதீவுக் கிராமத்தை பொறுத்தவரையில் எமது தொண்டுகளுக்கும் மகளிர் இல்ல வளர்ச்சிக்கும் பலவழிகளில் உதவுகின்ற அன்பர்களை நினைவு கூர்ந்தால் அவர்கள் பரம்பரைபரம்பரையாக உதவு பவர்களாகவே காண்கின்றோம். இவ்வகையில் எம்மால் மறக்கமுடியாத குடும்பங்களுள் முன்னணியில் திகழும் குடும்பத்தை

சார்ந்தவரே அன்பர் டாக்டர் பரசுராமன் அவர்கள். எமது இல்லத்திற்கு தொலைபேசி தொடர்பு இல்லாதிருந்த காலத்தில் எம்மையும் எமது ஸ்தாபனத்தையும் இணைத்து எமது பணிக்கு பாலமாக இருந்ததுடன் மட்டுமல்லாது நாம் இட்டபணிகளுக்கு முதலிடம் கொடுத்து நிறைவேற்றி வைக்கும் அணுக்கத் தொண்டராகவும் விளங்கினார்.

ஸ்ரீராமகிருஷ்ணமிசன் சாதுக்களிடம் அவர் கொண்டிருந்த ஈடுபாடும் அதற்கு அடையாளமாக மகாசமாதி எய்திய ஸ்ரீமத் சுவாமி ஜீவானானந்தஜீ மகராஜ் அவர்கள்மீது இவர் வைத்திருந்த பக்தியும் அன்னார் மீது சுவாமிகள் கொண்டிருந்த அன்பும் மறக்கமுடியாதன. எமதுஸ்தாபனம் ஏதாவது சமய கலாசார சமூகப்பணிகளை காரைதீவுப் பிரதேசத்தில் முன்னெடுத்தால் அவற்றை காரைதீவு மக்களுடன் தொடர்புபடுத்தி ஏற்பாடுசெய்யும் முன்னோடியாகத் திகழ்ந்தவர் அவரே.

சமயசமரசசன்மார்க்க தத்துவங்களை சமயத் தொண்டிலும் புகுத்தினார்.

இவ்வாறு பலவழிகளிலும் எம்மையும் எமது ஸ்தாபனங்களையும் அவற்றின் பணிகளையும் எக் காலத்தும் ஆகர்ஷித்ததுடன் நில்லாது தான்சார்ந்த சமூகத்திற்கும் பிரதேசத்திற்கும் தன்னாலான பெரும் பங்களிப்புக்களையும் அவ்வப்போது ஆற்றிக்
கொண்டிருந்த பேராளர் டாக்டர் பரசுராமன் அவர்கள் இன்றுஎம்மைவிட்டு இறைபதம் எய்திவிட்டார்.

"ஊழின் பெருவலி யாவுள மற்றொன்று
சூழிலும் தான்முந் துறும்"

என்னும் வள்ளுவனின் வாக்கிற்கு அடிபணிந்து அன்னாரின் ஆத்மா பரம்பொருளின் திருப்பாதக் கமலங்களில் நித்திய சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் இழப்பினால் துயருறும் குடும்பத்தினருக்கும் உற்றார் உறவினருக்கும் மற்றோருக்கும் இப்பேரிழப்பை தாங்கும் சக்தியை தாராளமாக அருளவேண்டுமென பிரார்த்தித்து நிற்கின்றேன்.

ஓம் சாந்தி. ஓம் சாந்தி. ஓம் சாந்தி.

# விபுலாநந்தர் நினைவுப்பணி நிறுவனர்

வெ. ஜெயநாதன்
தலைவர்
சுவாமி ஞாபகார்த்த பணிமன்றம்.

திரு. வெ. ஜெயநாதன் அவர்கள் ஆசிரியராகவும் அதிபராகவும் கடமையாற்றியவர். காரைதீவில் சமூக சேவைக்கென குறிப்பிட்ட ஒருசிலரே முன்னுக்கு வந்து செயல் படுவதுண்டு. அவர்களுள் தனது குடும்ப பொறு ப்புக்களுக்கு மத்தியிலும் தன் முன்னோர்களால் எடுத்து செல்லப்பட்ட பணிகளை தொடர்வதில் அவர் முன்நிற்கின்றார்.

அமரர் வைத்தியகலாநிதி மா. பரசுராமன் அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி முத்தமிழ் வித்தகரினதும் ஸ்ரீமத்நடராஜானந்தாஜீ அவர்களினதும் பணிகளையும் சேவைகளையும் காரைதீவின் எதிர்கால சந்ததிக்கு நினைவு படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டுவருபவர் ஆவார்.

இதற்காக அமரர் பரசுராமன் அவர்களால் காரைதீவில் நிறுவப்பட்ட நினைவுப்பணிமன்றத்திலும் தொடர்ந்து மணிமண்டபம் நிறுவுவதிலும் உறுப்பினராகவும் செயலராகவும் தொண்டாற்றியவர். அமரர் பரசுராமன் அவர்களின் கனடாபயணத்தின் பின்னர் அவர்வகித்த தலைமைப் பொறுப்பினை தான் ஏற்றுநல்லபடியாக செயல்படுத்திவரும் ஒருசேவையாளர்.

தொகுப்பாசிரியர்

கிழக்கிலங்கையில் பண்டைப்புகழ்பூத்த கிராமம் காரைதீவு. அந்த கிராமத்தாய் ஈன்றெடுத்த முத்து சுவாமி விபுலாநந்த அடிகளார்.
அந்த முத்தமிழ்வித்தகராம் விபுலாநந்தர் பற்றியும் அவரது தொண்டுகள் பற்றியும் பிற்காலச் சந்ததி யினருக்கு சுட்டிக்காட்டி விளிப்புணர்வை ஏற்படுத்தியவர் அமரர் மா.பரசுராமன் அவர்கள்.
மற்றும் கல்விசம்பந்தமாக அடிகளார் காட்டிய விழிப்புணர்வு கொள்கைகள் பற்றியும் அறியாதிருந்த எமது கிராமம் முதல்தொட்டு அகில இலங்கை முழுவதிலும் யாவரும் அறியச் செய்யும் வகையில் தொண்டாற்றியவர் வைத்தியகலாநிதி மா. பரசுராமன் அவர்கள் என்பதை திட்டவட்டமாகக் கூறிவைக்க விரும்புகின்றேன்.

விபுலாநந்த சுவாமிகளின் பணிகளும் அவரது கல்விக் கொள்கைகளும் தமிழ் பேசும் பாமர மக்களிடையே செல்லவேண்டும் என்ற விருப்பில் செயல்பட்டவர். அதற்காக 1962 சுவாமிகளுக்கான முழுஅளவிலான திருவுருவச் சிலையை நிறுவுவதற்கான ஆயத்தங்களை மேற் கொண்டார். அதன்பயனாக உலகம்போற்றும் உத்தம ஞானி வித்தகருக்கு 1969இல் காரைதீவு பிரதானவீதியில் பொதுநூலக முன்றலில் முதல்முதலாக முழு அளவிலான சிலைநிறுவி பெருமையும் படைத்தவர் டாக்டர் அவர்கள் என்பதை யாவரும் அறிவர். 1963களில் மட்டக்களப்பு தமிழ்கலாமன்றத்தினர் அடிகளாரின் திருவுருவச் சிலையை வடிவமைப் பதற்காக மட்டக்களப்பைச் சேர்ந்த சிலபிரமுகர்கள் அமரர் மா.பரசுராமன் அவர்களிடம் வந்ததுபோது அவர்களுக்கு சுவாமிகளின் சிலையை அமப்பதற்கு தேவையான ஒத்தாசைகளையும் ஆதரவினையும் மனமுவந்து நல்கியவர்.

முத்தமிழ்வித்தகர் பால் கொண்டிருந்த காதலால் அவரது தொண்டுகள் மற்றும் கல்விவளர்ச்சிக்கான பணிகளை தொடர்ந்து செயல்படுத்தும் திட்டங்கள் பற்றிய சிந்தனையிலேயே டாக்டர் அவர்கள் இருப்பார்கள். சுவாமியின் முழுஅளவிலான திருவுருவச் சிலையினை நிறுவியதைத் தொடர்ந்து அவருக்காக காரைதீவில் பிரமாண்டமான ஞாபகார்த்த மணிமண்டபம் நிறுவுவதற்கான ஆயத்தங்களைச் செய்யத் தொடங்கினார். அதன்பயனாக 1967ஆம் ஆண்டுமுதல் சுவாமியின் நினைவாக காரைதீவிலே ஞபாகார்த்த பணிமன்றத்தை நிறுவி அதன்மூலம் சுவாமிகளின் தொண்டு தமிழ்பேசும் இடமெல்லாம் சிறப்புற நடைபெற வேண்டுமென்ற பேரவாவில் செயல்பட்டவர் அமரர் பரசுராமன் அவர்கள்.

தொடர்ந்து 1991இல் காரைதீவில் சுவாமிகள் பிறந்த இல்லத்திலேயே நினைவாலயம் அமைக்கப்பட வேண்டும் என்னுகின்ற ஆர்வமேலீட்டால் என் போன்றவர்களையும் தன்னுடன் இணைத்து ஒரு சபையினை உருவாக்கி அதற்காக முழுமூச்சுடன் செயல்பட்டார். அவரது அரசியல் தொடர்புகளும் ஆன்மீகநெறியில் கொண்டிருந்த நாட்டமும் இந்த செயல்பாட்டின் வெற்றிக்கு உறுதுணையாக நின்றன என்றால் மிகையாகாது. அவரது நோக்கம் வெற்றி யளிக்க அவர்பாதையில் நாம் தொடர்ந்து செயல்ப்பட்டு வருகின்றோம் எனபதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

மருத்துவராகி அதனைத்தொடர்ந்து காரைதீவில் அவர் ஆற்றிய சேவைகள் பலவற்றுடன் நிமிர்ந்து நிற்கும் விபுலாநந்தர் ஞாபகார்த்தபணிமன்றமும் இன்றும் என்றும் வைத்தியகலாநிதி பரசுராமனின் பெயரை நிலைபெறச்செய்துள்ளது.

எங்களையும் தன்னோடுஇணைந்து பெரும்பணி களை காரைதீவில் நிறைவேற்ற ஆலோசனைகள் வழங்கிய பெருமகனை நாம் பெருமையுடன் என்றும் நினைவு கூருகின்றோம்.

# Our loving Grandfather!!

By: Adjani Gnanamuttu

My grandfather late Dr.M. Parasuraman was born in Sri Lanka on April 1st 1929. We were always teasing him on April fools. He was a very smart and also talented man. He is a grandfather of 5 grandchildren. He loved his grandchildren but, he has only granddaughter and that is me!! Adjani Gnanamuttu, he loved me more than my brothers because I was the only girl and because I have gotten older and he really wanted to see my "Samathy". He really loved to see all his grandchildren a lot and play with them. The things I really like about him are that he is intelligent, caring, thankful, honest and eager to do things.

My grandfather's favorite things were to see and speak to his 2 daughters, spend time with his grandchildren and to help other people. He also loved his 2 son in-law. They were very helpful and were eager to help him. But he was also eager to help us too.

My most favorite things about my grandpa was that when ever he knew my birthday was coming up, he would always send me a pop-up birthday card which I love and he would always be the first one to wish me by phone from Karaithivu on my birthday. When ever we went to Sri Lanka he would be there at the door waiting for us and the first one to give a hug to our family. He really loved me as much I loved him. He would always give us presents when we went there. He would also let us play with his doctor stuff like: his Stethoscope, his medical instruments, and more. He would always give me a Punjabi, a lenga, bangles, necklaces, earrings, rings and lots of potus. For my brothers, he would buy clothes and once or twice he bought chains for them.

I think my grandfather is one of the most important people in my life. He really wanted to see me for my celebration but I feel sorry because he missed it!!!!! I wish that he had never died and then he could have saw all of my celebrations and take the first pictures and everything with me!! When we sent the first picture to him, he as so sad and was kissing it and was practically crying. I really love you grandpa!!!!!

AND WE'LL MISS HIM A LOT. WE PRAY TO GOD SO HE CAN GIVE HIM A PEACE FULL LIFE IN HEAVEN

## A POEM ABOUT MY GRANDFATHER

**G**ood-natured for others

**R**adiant as the birds above

**A**mazing at being a grandfather

**N**atural about everything you do

**D**ainty as an antique of gold

**F**antastic at the things that you do best

**A**miable to other people around you

**T**hankful about everything

**H**onest about everything you say or do

**E**ager to try your best

**R**avishing all the time!!!!

# சான்றோரைப்போற்றுமின்!!
# அவர்புகழ்ஏத்துமின்!!

தமிழ்ஒளி
## வித்துவான் க.செபரெத்தினம் B.A. Dip
முன்னாள் அதிபர்- மட்டக்களப்பு

மட்டக்களப்புக்கு தெற்கே, தம்பிலுவில் என்னும் கிராமத்தை பிறப்பிடமாகவும் பழுகாமத்தை புக்ககமாகவும் கொண்டவர் வித்துவான் திரு.க. செபரெத்தினம் அவர்கள். இலங்கைபல்கலைக்கழக B.A.Dip. பட்டதாரியான வித்துவான் க.செபரெத்தினம் அவர்கள் பயிற்றப்பட்ட ஆசிரியருமாவார். அவர் இலங்கை கல்விநிருவாக சேவையின் கல்லூரி அதிபராக மட்டக்களப்பில் பணியாற்றியவர்.

இவர் அதிபராக கடமையாற்றிய பழுகாமம் கண்டுமணி மகாவித்தியாலயத்தில் 1970இல் அடிகளாரின் முழுஉருவச் சிலையையும், பட்டிருப்பு மத்திய மகாவித்தியாலயத்திலும், வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலயத்திலும் பாடசாலை முன்றலில் அழகிய பீடங்கள் அமைத்து அடிகளாரின் மார்பளவுச் சிலைகளைநிறுவி பெருவிழாக்களை நடத்திய பெருமையும் இக்கட்டுரையாசிரியரை சாரும்.

வாழையடிவாழை, விபுலாநந்த அடிகளார் வாழ்வும் வளமும், நயனங்கள் பேசுகின்றன, ஈழத்து தமிழ் சான்றோர் என்னும் நூல்களை எழுதி வெளியிட்டதுடன் கிழக்கிலங்கை மண்ணின் புகழ்பூத்த மைந்தர்கள் பகுதி-2 என்னும் நூலினை கலாநிதி ஈழத்தப்பூராடனாருடன் இணைந்து தொகுத்து வழங்கியவர்.

1993இல் இலங்கை இந்துசமயகலாச்சார அமைச்சி னால் "தமிழ் ஒளி" பட்டம்வழங்கி கௌரவிக்கப்பட்டவர். வித்துவான் அவர்களின் தமிழ் இலக்கியபணியையும் அவரது கல்விச் சேவையையும் பாராட்டி 2004இல் கிழக்கிலங்கைப் பல்கலைகழகம் கௌரவ இலக்கியமுதுமாணிப் பட்டம் வழங்கி சிறப்பித்தது.

தற்போது கனடாவில் தனதுமனைவி பிள்ளைகளுடன் மகிழ்வாகவாழுமிவர், தமிழ்மொழியிலும் விசேடமாக விபுலாநந்தஅடிகளாரிடம் அளவுகடந்த பற்றுள்ளவர். இனி வித்துவான் ஐயாஅவர்கள் தான்அறிந்த வைத்தியகலாநிதி மா. பரசுராமன் பற்றி கூறுவதைப் பார்ப்போம்.

**தொகுப்பாசிரியர்**

மனிதன் என்றுசிந்திக்கத் தொடங்கி நாகரிக வாழ்விற்குள் கால்பதிக்கத் தொடங்கினானோ, அந்தக் காலகட்டத்திலிருந்து தான்வசிக்கும் மண்ணுலகையும் தனக்கு மேலேயுள்ள விண்ணுலகத்தினையும் அவற்றின் கண்ணுள்ள இயங்குதிணை நிலைத் திணைப் பொருள்களையும் படைத்துக்காத்து வருபவனான இறைவனின் இருப்பை உணர்ந்து கொண்டதோடு அந்த இறைவனையே போற்றி பரவிடும் பக்குவத்தையும் பெற்றுக்கொண்டான். இறைவனின் திருவுருவினை தன்சிந்தனையின் எல்லைக் கோட்டினுள் நின்று கற்பனைசெய்து கொண்ட மனிதன் அத்திருவுருவை மரங்களிலும் கற்களிலும் வடிவ மைத்து வணங்கி வரத்தொடங்கினான். இவ்வழிபாட்டு முறை உலகின் பலநாடுகளிலும் இடம் பெறலாயிற்று.

நாகரிகவாழ்வின் விளைவாக கலை,கலாச்சார விழுமியங்களும், ஆட்சிஅரசியல் என்னும் வளர்ச்சிப் படிகளும் ஏற்பட்டதால் மனிதகுலம் வளம் பெற்ற செய்திளை வரலாறு சுட்டிநிற்கின்றது.

## சான்றோரைபோற்றும் தமிழரின் பாரம்பரிய பண்பு

மொழி கலை கராசார விழுமியங்களைப் பேணிவளர்த்து அவற்றின் வளர்ச்சிக்காக உழைத்த சான்றோர்களையும், அரசியல் நீதியுடனும் நேர்மைத் திறத்துடனும் நடத்தி நாட்டையும் மக்களையும் வீர தீரத்துடன் பாதுகாத்த காவலர்களையும் பாராட்டி அவர்களின் பெருமையினை பின்வரும் சந்ததியினரும் அறிந்து கொள்ளும் வண்ணம் நடுகற்களையும் உருவச்சிலைகளையும் நம்முன்னோர் நிறுவியிருந்தனர் என்றும் செய்திகளைக் கூறும் செய்யுள்கள் பண்டைய இலக்கியங்களிற் பரவிக் கிடக்கின்றன. புறநானூறு செய்யுள்களிலிருந்து சிலஅடிகளை அதற்கு பதச் சோறாகப் பார்க்கலாம்.

“பலர்க்குழி லாகி எலகமீக் கூறித்
தலைபோ கள் [illegible] யிற் சிறுவழி மடங்கி
நிலைபெறு [illegible] ஆகியக் கண்ணும்
இடங்கொ[illegible] அளிப்ப…….”

என்னும் 223ஆம் செய்யுளிலே கோப்பெருஞ் சோழனுக்கு நிறுவப்பட்ட நடுகல் செய்தியும்,



“ நடுகல் பீலிசூட்டி நார் அரி
சிறுகலத்து உகுப்பவும் கொள்வன் கொல்லோ”

என்னும் 232ஆம் செய்யுளிலே அதியமானஞ்சிக்கு நிறுவப்பட்ட செய்தியுடன் நடு கல்லுக்கு மயிற்தோகை சூட்டப்பட்டு, நாரால் அரிக்கப்பட்ட மது சிறிய கலம் ஒன்றினால் விடப்பட்ட செய்தியும்,

“ உயர் இசை வெறுப்பத் தோன்றிய பெயரே
மடஞ்சால் மஞ்ஞை அணிமயிர் சூட்டி
இடம்பிறர் கொள்ளாச் சிறுவழிப்
படஞ்செய் பந்தர்க் கல்மிசை யதுவே”

என்னும் 260ஆம் செய்யுளில், நாட்டுக்காக உயிர்நீத்த மறவன் ஒருவன் நினைவாக நிறுவப்பட்ட நடுகல்லிலே அவனது பெயர் பொறிக்கப்பட்டிருந்தமை, அதற்கு மயிற்தோகை சூட்டப்பட்டிருந்தமை, அதுசித்திர வேலைப்பாடு கொண்ட புடவையால் அமைக்கப் பட்டிருந்த பந்தரின்கீழ் நிறுவப்பட்டிருந் தமையுமான செய்திகளையும் காண்கின்றோம்.

பண்டைக்கால மன்னர்கள் தங்களைப் புலவர் பெருமக்கள் போற்றிப் பாடுவதைப் பெரும் பேறாகக் கருதினர். இச்செய்யுள்கள் அம்மன்னர்களின் பெருமையை இன்றும் பறைசாற்றி நிற்கின்றன. நினைவுச் சின்னங்களாக விளங்கும் சிலசெய்யுள்களை புறநானூற்றிலிருந்து கீழே தருதும்:

“ பாடல் சான்ற விறல்வேந்த னும்மே”- புறநானூறு-11
“ புலவரை இறந்த புகழ்சால் தோன்றல்”-புறநானூறு-21
“ஊரையும் பாட்டும் உடையே [illegible] லரே
…………………………..
புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வுலவன் ஏவா வான ஊர்தி
ஏய்துப………………….. “ புறநானூறு-27

இலங்கைவளநாட்டைப் பொறுத்த வரையில் பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில், இலங்கை மக்கள் அனைவராலும் தேசியத் தலைவர்களாகப் போற்றப் பட்டவர்களுள், சேர் பொன்.இராமநாதன், சேர். பொன். அருணாசலம் ஆகியோர் சிறப்பிடம் பெறுகின்றார்கள். இவர்களிருவரும் நாட்டுக்காற்றிய நற்பணிகளைப் போற்றி

பேணிடும் வண்ணம் அவர்களின் முழு உருவச்சிலைகள் இலங்கை அரசாங்கசபையின் மைதானத்தில் இலங்கைமக்கள் அனைவரது சார்பிலும் நிறுவப்பட்டுள்ளமையை சுட்டிக்காட்டுதல் பொருத்த மானதாக கருதுகின்றேன்.

இவர்கள் இருவருள் இலங்கைதேசிய காங்கிரஸ் என்னும் அமைப்பினை 1919இல் நிறுவியவர்களுள் ஒருவரும், அந்த அமைப்பின் ஆரம்பகாலத் தலைவருமாக திகழ்ந்தவரும், இலங்கைத் தமிழர்சபையை 1923 இல் நிறுவியவரும், ஒப்பற்ற சமூக சமய தொண்டருமாய் விளங்கிய சேர் பொன் அருணாசலம் அவர்களின் நினைவாக 1930ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3ஆம் திகியன்று, தேசாதிபதி அவர்களால் அரசாங்கசபை மைதானத்தில் திறந்து வைக்கப்பட்ட உருவச்சிலையின் பீடத்திலே மும்மொழிகளிலும் எழுதப்பட்டுள்ள வாசகத்தில் தமிழிலே எழுதப் பட்டுள்ளது வருமாறு:

நிரம்பிய கல்விபுலமையும் அரசியல் வன்மையும்,
ஆளுந்திறனும் வாய்ந்த
ஸ்ரீமான் சேர்.பொன்னம்பலம் அருணாசலம்
1853-1924
தேசசேவைக்கென்ற தந்நாட்களை
அற்பணஞ்செய்த பெருந்தகையாளர்
சட்டமன்றத் திருத்தத்தினை அரிதின் முயன்று
முற்றுவித்தவீரர்-இலங்கையிற் சர்வகலா
சங்கம் அமைப்பதற்காய் அருந்தவம் ஆற்றித்
தளராதுழைத்த பெருமகன்.
இவரது நன்றிகளை மறவா இலங்கை
வாசிகளால் நிறுவிய நடுகல்

## வள்ளுவர் காட்டும்வழி

அருமையுடைய செயல்களை ஆற்றுகின்ற பேரறிவுடைய சான்றோர்களை நன்கு மதித்துப் போற்றுவதால் விளையும் நன்மையும், போற்றாவிடத்து விளையும் தீமையையும் வள்ளுவப்பெருந்தகை விளக்குவதை கீழே காணலாம்:

அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொள்ளல்" (குறள் 443)

ஆற்றுவா ராற்றல் இகழாமை போற்றுவார்
போற்றலு ளெல்லாந் தலை. (குறள்-891)

ஏரியாற் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார் (குறள்-896)

வள்ளுவனாரின் கருத்தினை வழிமொழியும் வண்ணம் மகாகவிபாரதியார் கூறியுள்ள கருத்தையும் கீழேதரு கின்றேன்
"எதனை விரும்புகின்றோமோ அது தோன்றுகின்றது. எதை ஆதரிக்கின்றோமோ அதுவளர்ச்சி பெறுகின்றது. பேணாத பண்டம் அழிந்து போகும். புழக்கத்தில் இல்லாததிறமை இழந்துவிடப்படும். அறிவுடை யோரையும் லோகோபாரிகளையும் வீரர்களையும் கொண்டாடாதே தேசத்தில் லோகோபாரமும் வீரமும் மங்கிப்போய்விடும். தமிழ் நாட்டில் இப்போது புதியஉயிர் தோன்றியிருப்பதால் நாம் இவ்விடத்தில் தமோகுணஞ் செலுத்தாமல் கம்பன், இளங்கோ,திருவள்ளுவர் முதலிய மகாகவி களுக்கு ஞாபகச்சிலைகளும், வருஷேச்சவங்களும் ஏற்பாடு செய்யவேண்டும்" (பாரதியார் கட்டரை பக்கம்-198)

## இலங்கையில் சான்றோருக்கான சிலை நிறுவுதற்கான அடித்தளம் ஆரம்பமானது

ஈழத்தமிழ்ச் சான்றோரும், தமிழ்த்தூதுவர், தமிழாராய்ச்சி மாநாடுகளின் தந்தை என்றெல்லாம் விதந்தோதப்பட்டவருமான தவத்திரு தனிநாயகம் அடிகளார் வழிகாட்டலோடு, 1968இல் முதலாவது தமிழாராய்ச்சி மாநாடு சென்னையிலே நடைபெற்ற போது தமிழ்மொழிக்கு தொண்டாற்றிய சான்றோர்கள் பலரின் உருவச்சிலைகள் நிறுவப்பட்டு பெருமை படுத்தப்பட்டனர். அச்சான்றோர்களுள் ஈழத்தைச்சேர்ந்த காசிச்செட்டி,ஸ்ரீலஸ்ரீஆறுமுகநாவலர்,சி.வை. தாமோதரம் பிள்ளை, வி.கனகசபைப்பிள்ளை, தி.த.கனகசுந்தரம் பிள்ளை, ஞானப்பிரகாச சுவாமிகள், விபுலாநந்த அடிகள் முதலிய அறிஞர் பெருமக்களுள் எவரது உருவச்சிலைகளும் இடம்பெறவில்லை. இம்மாபெரும் தவறு சுட்டிக்காட்டபட்ட போதும் தவறு திருத்தப் படாமலே போய்விட்டது.

தமிழாராய்ச்சி மாநாடு ஏற்பாட்டாளர்களால் இழைக்கப்பட்ட தவறும் காட்டப்பட்ட உதாசீனமும் ஈழத்தமிழ் அறிஞர்களை விழிப்புறச் செய்தது.

கொழும்பில் வாழ்ந்த தமிழ்அறிஞர்கள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்சபை என்னும் ஒரு அமைப்பினை நிறுவியதோடு நாவலர் பெருமானின் உருவச்சிலை யினை

உருவாக்கும் பணியிலும் ஈடுபடலாயினர். கொழும்பு விக்டோரியா பூங்காவில் உருவாக்கப்பட்ட திவுருவச்சிலையானது ஊர்வலமாக யாழ்ப்பாணம் கொண்டுசெல்லப்பட்டு, நல்லூர் கந்தசுவாமிஆலயத்தின் தென்கிழக்கிலிருக்கும் காணியில் அமைக்கப்பட்ட மணிமண்டபத்தில் 1969 ஜூன்மாதம் 29ஆம் நாளில் நிறுவப்படலாயிற்று. இதனைத்தொடர்ந்து நாவலர் பெருமானின உருவச்சிலைகள் இலங்கையில் தமிழ்ப் பகுகளில் நிறுவப்பட்டன. கனடாநல்லூர் கந்தசுவாமி ஆலயத்தினுள் 2004 நவம்பர் 7ஆந் திகதியன்று ஆறுமுகநாவலரது சிலைநிறுவப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்க நிகழ்வாகும்.

## மட்டக்களப்புமண்ணில் சிலைநிறுவும் திருப்பணியின் தொடக்கம்

மட்டக்களப்பு தமிழகத்தார் தங்கள் அருந்தவப் புதல்வாரன விபுலாநந்தஅடிகளாரை நினைவில் வைத்துப்போற்றி வருவதையே காண்கின்றோம். பாட சாலைகளுக்கும் நூல்நிலையங்களுக்கும் அடிகளாரின் பெயரைச்சூட்டியும், மன்றங்களைநிறுவியும், அடிகளாரின் திருவுருவச்சிலைகளை நிறுவியும் அடிகளார் நினைவு கூரப்பட்டு வருகின்றார்.

மட்டக்களப்பு தமிழ்கலாமன்றத்தினர், மட்டக்களப்பு நீதிமன்ற முன்றலிலே அடிகளாரின் திருவுருவச்சிலை ஒன்றினை 1963 ஜூன்மாதம் 16ஆந்திகதி நிறுவி யுள்ளனர். இச்சிலை மட்டக்களப்பு அமிர்தகழியைச் சேர்ந்த வைத்தியகலாநிதி ஜோசப் ஞானப்பிரகாசம் அவர்களால் வடிவமைக்கப்பட்டது. மேற்படி உருவச் சிலை அடிகளாரின் நினைவாக உருவாக்கப்பட்ட முதலாவது சிலையாகக் கொள்ளப்படுகின்றது.

மட்டக்களப்பு மக்களின் பெருமுயற்சியினால் கல்லடி உப்போடையில் சிவாநந்தா வித்தியாலயத்தின் அருகில், சுவாமிகளின் சமாதி அமைந்துள்ள இடத்தில் நிறுவப்பட்ட விபுலாநந்தர் ஞாபகார்த்த மண்டபம் 1963 செப்ரம்டபர்மாதம் 6ஆம்திகதியன்று திறந்து வைக்கப்பட்டது.

## சுவாமிகளின் திருவுருவச் சிலையின் முன்னோடி

அடிகளார் திருஅவதாரம் செய்த காரைதீவைச் சேர்ந்த மக்கள் விரும்பியவாறு அக்கிராமத்தின் கிராமாட்சி மன்ற தலைவராகவிருந்த வைத்திய கலாநிதி மா. பரசுராமன் அவர்களால் அமைக்கப்பட்ட நூல்நிலையமானது “விபுலாநந்தபொதுநூல் நிலையம்” என்னும் பெயருடன் அப்போதய உள்ளூராட்சி அமைச்சராக இருந்த மாண்புமிகு ஆர்.பிரேமதாச அவர்களால் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. 1969 ஏப்ரல்மாதம் 14ஆந்திகதி இடம்பெற்ற இந்நிகழ்வினைத் தொடர்ந்து அந்நூல் நிலையத்திற்கு முன்பாக முத்தமிழ்வித்தகர் விபுலாநந்தரின் முழுத்திருவுருவச் சியையானது முதல் முதலாக அடிகளாரின் மாணவரும் அடிகளாரிடம் அன்பும்பக்தியும் கொண்டவருமான தவத்திரு குன்றக்குடி அடிகளாரால் திறந்து வைக்கப்பட்டது. புகழ்பெற்ற சிற்பி புல்லமலை திரு.ப.நல்லரெத்தினம் அவர்களால் பக்திஉணர்வுடன் வடிவமைப்புச் செய்யப்பட்டு காரைதீவு மக்களால் நிறுவப்பட்டது. அன்றுமுதல் அடிகளாரின்பெருமையை நாற்றிசை யிலும் நவின்று அவர்புகழ் பரப்பிய ஒருநினைவுச் சின்னமாக இதுதிகழ்ந்தது.

முன்னாள் இந்துக்கலாச்சார அமைச்சராகவிருந்த மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினரான செல்லையா இராசதுரை அவர்களால் 1982 இல் நிர்மாணிக்கப்பட்டு தற்போது கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ள விபுலாநந்தர் இசைநடனக் கல்லூரியானது இசைப்புலவராம் அடிகளாரின் புகழ் பரப்பும் ஒருநினைவுச் சின்னமாக மிளிர்கின்றது.

நாம்முன்னர் காரைதீவில் நிறுவப்பட்டுள்ள அடிகளாரின் முழு உருவச்சிலை பற்றிக் குறிப்பிட் டிருந்தோம். அந்தநிகழ்ச்சியானது கிழக்கிலங்கையில் பெரியதோர் எழுச்சியையே ஏற்படுத்திவிட்டது. வடக்கே திருகோணமலை தொடக்கம் தெற்கே திருக்கோயில் வரையுமுள்ள கிராமங்கள் பாடசாலைகள் போன்ற இடங்களில் அடிகளாரின் முழு உருவச் சிலைகளும் மார்பளவு சிலைகளும் போட்டிபோட்டுக் கொண்டு அவ்வூர் மக்களால் நிறுவப்பட்டன.

## ஊர்களிலும் பாடசாலைகளிலும் சுவாமிகளின் சிலை

வாழைச்சேனை விபுலாநந்தர்வீதி, சித்தாண்டிக் குடி, ஆறுமுகத்தான் குடியிருப்பு, வவுணதீவு முதலிய இடங்களிலும் திருக்கோணமலை இந்துக்கல்லூரி, கட்டைபறிச்சான் சேனையூர் மகாவித்தியாலயம், வாழைச்சேனை இந்துக் கல்லூரி, மொறக்கொட்டான் சேனை இராமகிருஷ்ணமிசன் பாடசாலை, வந்தாறுமூலை மத்தியமகாவித்தியாலயம் (தற்போதய கிழக்கிலங்கைப்

பல்கலைக்கழகம்), ஆறுமுகத்தான் குடியிருப்பு, சிவாநந்தா வித்தியாலயம், களுதாவளை மகாவித்தி யாலயம், செட்டிபாளையம் மகாவித்தியாலயம், பட்டிருப்பு மகாவித்தியாலயம், பழுகாமம் கண்டுமணி வித்தியாலயம், காரைதீவு மத்திய மகாவித்தியாலயம், அக்கரைப்பற்று இராமகிருஷ்ணமிசன் வித்தியாலயம், தம்பிலுவில் மத்திய மகாவித்தியாலயம் முதலிய பாடசாலைகள் அடிகளாரின் சிலைகளை நிறுவிப் பெருமை சோத்துக் கொண்ட பாடசாலைகளாகும்.

இக்கட்டுரை ஆசிரியர் அதிபராக கடமையாற்றிய பழுகாமம் கண்டுமணி மகாவித்தியாலயத்தின் வெள்ளி விழா 1970இல் கொண்டாடப் பட்டபோது வித்தியாலய முன்றலில் சிற்பி புல்லுமலை திரு.ப. நல்லரெத்தினம் அவர்களால் வடிக்கப்பட்ட அடிகளாரின் முழுஉருவச் சிலையானது நிறுவப்பட்டு அடிகளாரின் மாணக்கரான அமரர் பேராசிரியர் சு.வித்தியாநந்தன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அவ்வவாறே வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலயத்திலும், பட்டிருப்பு மத்திய மகாவித்தியாலயத்திலும் பாடசாலை முன்றலில் அழகிய பீடங்கள் அமைத்து அடிகளாரின் மார்பளவுச் சிலைகளை நிறுவி பெருவிழாக்களை நடத்திய பெருமையும் இக்கட்டுரையாசிரியரையே சாரும்.

மேலும் வாழைச்சேனையில் அடிகளாரின் திருவுருவச் சிலையினை அமைக்கும் நோக்குடன் திருப் பழுகாமத்தினைப் பிறப்பிடமாகக் கொண்டு வாழைச் சேனையில் மணம்முடித்து வாழ்ந்தவரும் மட்டக்களப்பு ஊர்ப்பணிமன்ற ஸ்தாபகரும் விபுலாநந்தரின் மாணக் அமரர் வேலாயுதம் ஞானமுத்து (முன்னாள் உ ாங்க அதிபர்) அவர்களும் வாழைச்சேனையில் பிரபல்யமடைந்த முறிவு வைத்தியரும் மக்களால் அன்புடன் மதிக்கப் பட்டவருமான டாக்டர். காராளசிங்கம் அவர்களும் செயல்பட்டனர். அதன்காரணமாக 1970ஆம் ஆண்டு பிரதான வீதியிலிருந்து மக்கள்வங்கியின் முன்பாக கற்குடாவீதியினை நோக்கிச் செல்லும் பிரதான உள்வீதியில் பெருவிழாவெடுத்து ஊர்வலமாக எடுத்து வரப்பட்ட விபுலாநந்தருக்கான மார்பளவுச் சிலையினை பீடமமைத்து நிறுவி அதற்கு விபுலாநந்தர் வீதியென பெயரும் சூட்டப்பட்டது. இப்புனிதப் பணிக்கு அவர்களுடன் தோளோடுதோள் நின்று உழைத் தவர்களுள் வைத்திய கலாநிதி மா.பரசுராமன் அவர்களும் ஒருவர் என்பதனை நினைக்கும் போது வியப்படையாமல் இருக்கமுடியாது.



கிராமங்களிலும் பாடசாலைகளிலும் நிறுவப் பட்டுள்ள அடிகளாரின் உருவச்சிலைகள் ஆங்காங்கே உள்ள மக்களுக்கும் மாணாக்கருக்கும், அவர்களது கல்வி, கலை, கலாசார எழுச்சிக்கு வழிகாட்டி வருகின்றன. மனிதஇனத்தின் மேம்பாட்டுக்காகவும், கல்வி, கலை,கலாசார விழுமியங்களின் வளர்ச்சிக் காகவும் வாழ்நாள் முழுவதும் உழைத்த உத்தமர்கள் சான்றோர்களுக்கு, அவர்களின் பணிகளைப் போற்றிடும் வண்ணம் நிறுவப்படும் உருவச்சிலைகளும் அமைக்கப்படும் நினைவுச்சின்னங்களும் மக்கள் அனைவருக்கும் மானசீகமாக உதவி வருகின்றன என்பது கண்கூடு.

மட்டக்களப்பு தமிழ்கலாமன்றத்தினா் அடிகளாரின் ஞாபகச்சிலையை1963 ஜுன்மாதம் 16இல் நிறுவியபோது காரைதீவைச் சோந்த மக்கள் மனமுவந்து அனுப்பிய ஆசிச் செய்தியில்.

“பேர்பெருகு புனித வினை பாரெல்லாம் பரவிடப்<br>
பெருமை புகழ் ஓங்கி நிற்கப்<br>
பின்வரும் சந்ததிக் கென்று மிவையழியாது<br>
பீடிற்று வாழ்க மாதோ”

என்று குறிப்பிட்டிருப்பதும், காரைதீவில் அடிகளாரின் திருவுருவச்சிலையை 1969 ஜுலைமாதம் 19இல் திறந்துவைத்த ஞான்று வெளியிடப்பட்ட அடிகளார் படிவமலருக்கு மதுரைப்பல்கலைக்கழக துணைவேந்தராகக் கடமையாற்றிய பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரன் அவர்கள் அனுப்பி வைத்த வாழ்த்து கடிதத்தில்,

“சுவாமிவிபுலாநந்தர் அவர்களின் உருவச்சிலையினை அவர் பெயரால் நிறுவி நூல்நிலையத்தின் முன்பு திறப்பது மிகப் பொருத்தம். அவர்கள் தமிழுக்கு ஆற்றிய தொண்டு நூல்நிலையத்திற்கு வந்துபோகும் மக்களின் இதயத்தில் இடம்பெற்று அவர்களைத் தொண்டில் ஈடுபட ஊக்குவிக்கும் என்பதில் ஐயமில்லை.”

என்று குறிப்பிட்டிருப்பதும் நினைவுச்சின்னங்களை நிறுவுவதன் நோக்கம் பற்றிய நாம் கூறியிருக்கும் கருத்தினை அரண்செய்வனவாக அமைந்திருக்கக் காண்கின்றோம்.

இயற்கையானதும் செயற்கையானதுமான அனைத்து எல்லைகளையும் கடந்து “ யாதும் ஊரே யாவரும் கேளிர்” எனவாழ்ந்து, இறுதிமூச்சு வரைக்கும் கல்வி, கலை, கலாசார விழுமியங்களின் வளர்ச்சிக்காக உழைத்த பெரியாரான விபுலாநந்த அடிகளாருக்கு, அவர்பிறந்த கிராமமான காரைதீவிலும் நிறுவிட விழைந்து அவரின் பெயரில்

நூல்நிலையமும் அமைத்து, அந்த நூல்நிலையத்தின் முன்றலில் அன்னாரின் திருவுருவச்சிலையினை நிறுவியும் தங்கள் வணக்கத்தையும் நன்றிக் கடனையும் புலப்படத்திய காரைதீவு மக்களுக்கு, காரைதீவு கிராமாட்சி மன்ற தலைவராக விளங்கிய அமரர் வைத்திய கலாநிதி மா.பரசுராமன் அவர்களே வழிகாட்டியாக திகழ்ந்தா ரென்பது இங்கு குறிப்பிட வேண்டும்.

செயல்வீரரும், எண்ணிய எண்ணியாங்கு எய்திய திண்ணியரும், தொலைநோக்குக் கொண்ட சிந்தனை யாளரும், பழகுதற்குகெளியருமான அமரர் வைத்திய கலாநிதி மா.பரசுராமன் அவர்களுக்கு காரைதீவு மட்டுமல்ல தமிழ்பேசும் மக்கள் அனைவரும் கடமைப்பட்டுள்ளனர். போற்றுதற்குரிய பணிகள்பல ஆற்றி சான்றோர்களின் வரிசையிற் தனது பெயரையும் பொறித்துச் சென்றுள்ள அமரர் மா.பரசுராமன் அவர்களது அடியொற்றிச் சான்றோர்களைப் போற்று வோமாக: சான்றோர்களின் வழியில்நம்மையும் இணைத்து பணியாற்றிட உறுதி பூணுவோமாக.

“வெற்றிக்கு இலட்சம் தேவையில்லை. இலட்சியமேதேவை. அதனுடன் வேட்கை வேண்டும். வேட்கையுடன் வெறிவேண்டும். வெறியுடன் வெற்றியை வேட்டையாட வேண்டும்.”

# தலைவராகப்பிறந்தவர்

திரு.அழகரெத்தினம் திருநாவுக்கரசு
கமநலச்சேவை மத்திய நிலையம்
காரைதீவு

"உலகம் ஒருநாடகமேடை
உதித்தவர் எல்லாம் நடிகர்களாவர்
உண்மையாய் நடித்தவர் உயர்ந்தவராவார்-மக்கள்
உள்ளத்தில் என்றும் நிலைப்பவராவார்"

உலக நாடுகளில் தலைவர்களாகவும், ஞானிகளாகவும், விஞ்ஞானிகளாகவும், மேதைக ளாகவும், மக்கள் நலன்விரும்பிகளாகவும் வாழ்ந்து என்றும் உலகமக்கள் மனதில் நீங்காது நிலைத் திருக்கும் பலரை நாம் இங்குகுறிப்பிடலாம். அவர்களின் சேவைகளாலும் சாதனைகளாலும் நாம் பலநன்மைகளை அனுபவிப்பதோடு இந்தஉலகமும் புதிய பரிணாமத்தினைப் பெற்றுள்ளது. அதன்பயனாக பலபுதிய கண்டுபிடிப்புக்கள் நவீனவிஞ்ஞான மாற்றங்கள் என்பன ஏற்பட்டதுடன் உலகம் கிராம மயமாக்கம் பெற்றும் வருகின்றது. ஆனால் மேற் குறிப்பிட்டவர்களின் வரிசையில் கிராமப் புறங்களில் இருந்து மக்கள்உள்ளத்தில் என்றென்றும் நிலைத் திருக்கும் மனிதர்கள் ஒருசிலரே என்றேகூறலாம்.

அப்படியாக கிழக்கிலங்கையின் காரைதீவிலே பிறந்தவர்களுள் முதன்மை பெற்று உலகப்புகழ் பெற்ற ஞானியாக விளங்கியவர் சுவாமிவிபுலாநந்த அடிகளாவார். மேலும் தங்கள் பெயரை கிழக்கிலங்கையிலும் தங்கள்கிராமத்திலும் நிலை நிறுத்திய சிலரை நாம் இன்றும் நினைவுகூரக் கூடியதாகவுள்ளது. அந்தவரிசையில் காலஞ்சென்ற வைத்தியகலாநிதி மா.பரசுராமன் அவர்களும் இடம் பெறுகின்றார் என்றால் அதுமிகையாகாது. காரைதீவு கிராமத்திலே பிறந்து தனது ஊரிலும் மற்றும் கல்முனை பாடசாலைகளில் கல்விபயின்று கொழும்பு சென்று வைத்திய கல்லூாயில் கல்விகற்று ஒருவைத்தியராக திகழ்ந்த ஒருகிராமத்தவன்தான் அமரர் மா.பரசுராமன் அவர்கள். தமிழ்க் கிராமத் தவனுக்கே உரித்தான சாதராணமான உடையான வாலாமணி வேட்டியுடனே என்றும் அவரைக்காணலாம்.

வைத்தியதுறையில் கற்றுத்தேர்ந்த பின்னர் அரசாங்க மருத்துவத்துறையில் சேர்ந்து தொழில் செய்யாமல் தன ஊரிலேயே ஒரு சிகிச்சை நிலை யத்தினை அமைத்து தன்ஊர் மக்ககளுக்கும் காரைதீவைச் சூழவாழ்ந்த பிறஇனத்தவருக்கும் தன் சேவையினை இறக்கும் வரைக்கும் செய்தார்.

பிறருக்கு கீழேகடமைசெய்யாது மக்களுக்கு தன்ஆற்றலை வெளிப்படுத்தி கைராசிக்கார டாக்டர் எனப்பெயர் பெற்றார். மக்களுக்கு சேவைசெய்யும் நோக்கத்தில் தன்கிராமத்தின் வளர்ச்சிக்கான செயல் பாடுகளை முன்னெடுப்பதுடன் சுவாமி விபுலாநந்தரின் பணிகளை வெளிக்கொண்டு வருவதற்கான ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நடவடிக் கைகளில் ஈடுபடத்தொடங்கினார். மக்களிடம் இனிதாகப் பழகும் சுபாவமும் பிறரை அனுசரித்துப் போகும் நற்குணமும் மக்கள் தேவையறிந்து உதவும் மனோ பக்குவமும் இயற்கையாகவே இவரிடம் குடி கொண்டிருந்தது. இந்த நற்குணங்களால் ஊர் மக்களால் இவர் பெரிதும் விரும்பப்பட்டார்.

ஆரம்பத்தில் சமயப்பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு முதன்முதலாக காரைதீவிலே இந்துமாமன்றத்தை நிறுவி சமயப்பணிகளை தொடங் கினார். அதன்மூலம் திருவெம்பாவைக் காலங்களில் ஊரவர்கள் அதிகாலையில் எழுந்து ஒன்றுகூடி கிராமத்தைச் சுற்றி நடைபவனியாக திருப்பள்ளியெழுற்சி பாடுதல் ஆரம்பமானது. அவரது இப்பணிகளால் மக்களிடம் நல்லவரவேற்பு கிடைத்தது. எனது சகோதரரான காலஞ்சென்ற திரு.அ.மாணிக்கவாசகர் அவர்களும் வைத்திய கலாநிதி மா.பரசுராமனுக்கு உடந்தையாக இதில் செயல்பட்டார். சுயநலம்கருதாத அவரது பணிகளாலும் திட்டங்களாலும் தலைமைப் பதவிகள் இவரைத் தேடித்தானாகவே வந்தன. கண்ணகிஅம்மன் ஆலையத்தின் பிரதம தர்மகர்த்தா பதவிதொடக்கம் கிராமசபைத் தலைவர் பதவியுட்பட பலசங்கங்கள் நிறுவனங்களின் தலைமைப் பதவிகளுக்கு போட்டியின்றி மக்களால் இவர் நியமிக்கப்பட்டார்.

காரைதீவிற்கென்று தனியான பொதுநல சேவை நிலையங்கள் இல்லாதிருந்த காலத்தில் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், பொதுநூலகம், விளை யாட்டு மைதானம், கமத்தொழில் சேவைநிலையம், வங்கி, தபாலகம் போன்றவற்றுடன் வீதிப்புன ரமைப்புகளையும் மின்சாரவசதிகளையும் ஏற்படுத்தி கிராமத்தைப் பொலிவுறச் செய்தார். தனது தலைமைத் துவத்தாலும் சிறந்த ஆளுமையாலும் கிராம வளர்ச்சிக்கு தேவையான பலஸ்தாபனங்களையும் நிறுவனங்களையும் அரசாங்க பாராளுமன்ற உறுப்பினர் களிடம் தனக்கிருந்த செல்வாக்கினைப் பயன்படுத்தி நிறுவினார். செய்ய முடியாதென பலரால் மறுக்கப்பட்ட சிலவிடயங்களை இவர் காரைதீவிலே செய்துகாட்டிய பலநிகழ்வுகளைக் குறிப்பிடலாம். காரைதீவினைச் சூழவுள்ள நெல்வயல் காணிகளையும் மற்றும் நிந்தவூர், கரவாகுப்பற்று,

மாவடிவெட்டை போன்ற பகுதிகளில் விவசாயத்தினை மேற்கொள்ளும் தமிழ் முஸ்லிம் மக்களின் தேவைகருதி கமநலச்சேவை மத்திய நிலையத்தினை நிறுவி அதன் தவிசாளராகச் சிறப்புடன் சேவையாற்றிய பெருமகன்.

சீர்மிகு காரைதீவு பதியினிலே சிறப்புறவாழ்ந்த திரு. மாணிக்கப்பிள்ளை பரசுராமன் அவர்கள் ஓர்தனித்துவமான வைத்தியராக பொதுமக்களின் சேவையில் ஈடுபட்டு மக்களுடைய நலனில் அதிக அக்கறைகாட்டி வாழ்ந்தவர் என்பதனையும் யாவரும் அறிவர். பிறர்பசியை அறிந்து உணவூட்டி ஆதரவ ளிக்கும் பண்புகொண்ட மனைவி பிள்ளைகளுடன் சிறந்தகுடும்பத் தலைவராகவும் ஊரிலுள்ள சமய, சமூக, அரசியல் நிறுவனங்களினதும் பொதுநல மன்றங்களினதும் தலைவராகவும் சிறந்த பணியாற்றிய கிராமத்தில்பிறந்தஒரேதலைவன் டாக்டர் மா.பரசுராமன் மட்டும்தான் என்பது எனதுதாழ்மையான கருத்து.

# நினைவுபடுத்திய சாதனையால் நினைவுகூரப் படவேண்டியவர்

திரு. இரா.நாகலிங்கம் (அன்புமணி)
மட்டக்களப்பு
முன்னாள் உதவிஅரசாங்க அதிபரும்,
வடகிழக்கு மாகாண ஆளுனரின் செயலாளரும்

அன்புமணி என்று எல்லாராலும் வாஞ்சையுடன் அழைக்கப்படும் திரு. இரா.நாகலிங்கம் அவர்கள் ஆரயம்பதியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சாதாரண எழுதுவினைஞராக அரசபணியில் புகுந்து வடகிழக்கு ஆளுநரின் செயலராக பதவியுயர்ந்தவர். மட்டக்களப்பு வளர்ச்சிக்கான எந்தவொரு நிகழ்வாக இருந்தாலும் அதில் அன்புமணி அவர்களின் பங்கு பளிச்சென தெரியும். மட்டக்களப்பின் எங்காவது பொதுநலனுக்கும் வளர்ச்சிக்கும் நடைபெறும் கூட்டங்களில் ஆலோசனை வழங்குபவராக அன்புமணி பிரசன்னமாகியிருப்பார். கலாசார நிகழ்ச்சிகளோ சமயஒன்றுகூடலோ அங்கே அன்னாரின் முத்திரை பதிக்கப்பட்டிருக்கும். எந்தவொரு விழாமலர் ஆயினும் அதில் அவரது கட்டுரையோ ஆசிச்செய்தியோ அலங்காரம் செய்யும்.

அரசசேவையிலிருந்து இளைப்பாறிய பின்னரும் மட்டக்களப்பின் கலாசார வளர்ச்சிக்காக பாடுபடும் மனவளம் கொண்டவராக திகழ்கின்றார். மட்டக்களப்பின் எழுத்தாளர் மன்றத்தினை ஆரம்பித்து “மலர்” என்னும் பத்திரிகையினை நடத்தி எழுத்தாளர்களுக்கு ஏணியாக இருந்தவர். இன்று மட்டக்களப்பில் எழுத்துலகில் துலங்கும் அநேக எழுத்தாளர்களை வெளியுலகிற்கு கொண்டுவந்த பெருமை இவருக்கே உரியது. மட்டக்களப்பு முற்றவெளியில் விபுலாநந்த அடிகளாரின் திருவுருவச்சிலை பிரதிட்டை செய்த வைபவத்திற்கு பலவழிகளாலும் ஆதரவளித்து தொண்டாற்றிய இவர் காரைதீவில் நிறுவிய சிலைக்கான தனது ஒத்தாசையை அமரர் மா. பரசுராமன் அமரர் ம. சற்குணம் ஆகியோருக்கு வழங்கியவர். இவர்களின் தொடர்பால் விபுலாநந்தருக்கான திருவுருவச்சிலை எவ்வாறு உருப்பெற்று நிறுவப்பட்டது, அதனால் உண்டான பின்விளைவுகள் தாக்கங்கள் பிரதிபலிப்புகள் என்ன என்பதை பின்வரும் கட்டுரையில் விளக்குகின்றார்.

**தொகுப்பாசிரியர்.**

## செய்யாமல் செய்த உதவி

இன்று ஈழத்தமிழகம் எங்கும் சென்று நாங்கள் விபுலாநந்தர் பிறந்தமண்ணின் மைந்தர்கள் என்று சொல் கூடியவிதத்தில் எங்களுக்கு மதிப்புநிலையை பெற்று தந்தவர் விபுலாநந்தஅடிகளார் ஆவார். பல்கலை கழகங்களில் தமிழ் பீடமமைத்து தமிழ்வளர்த்த ஞானி இவர். முத்தமிழுக்கு இலக்கணம் கண்ட முனி. மட்டக்களப்பின் கல்விவளம் மட்டுமன்றி மலையகம் யாழ்ப்பாணம் தமிழகம் எனப்பல இடங்களில் கல்வி வளத்திற்காக உரமூட்டியவர். அத்தகைய வித்தகர் தனது இளவயதில் 1947இல் அமரரானார்.

காலங்கள் கடந்துகொண்டே போயின விபுலாநந்தர் நினைவு கொள்ளக் கூடிய விழாக்கள் பரந்த அளவில் ஆரம்பாகலங்களில் எடுக்கப்படவில்லை. இவரது தாபனங்களின் மாணக்கர்களாலும் அடியார்களின் மத்தியிலும் சிறிய அளவிலேயே நினைவு கூரப்பட்டு வந்தது. அவருடைய பணியோ பல்கலைகழக மட்டத்தில் ஆய்வு செய்து காலங்காலமாக நினைவு கூரப்படவேண்டிய கலைகள். சமரசசமய முத்தமிழ் என்பன அவர் படைத்த சாதனைகள். தமிழினத்தினது தமிழ்மொழி வளாச்சிக்கு வழிகாட்டும் கலங்கரை தீபம். இருந்தும் விபுலாநந்தர் பற்றிய அறிவினையும் அவரது தொண்டினையும் உலகிற்கு வெளிக் கொண்டுவரும் எவ்வித முயற்சிகளும் எவராலும் எடுக்கபடாதிருந்த நிலையில் 1969இல் விபுலாநந்தர் பிறந்த காரைதீவின் தவப்புதல்வர்களான இரு இளைஞர்கள் எதிர்கால சந்ததியினர் காலங்காலமாக விபுலாநந்த சுவாமிகளை நினைவு கொள்ளதக்கதாக ஒருஅரிய சாதனையை புரிந்தனர்.

விபுலாநந்த அடிகளாரின் திருவுருவச்சிலைத் திருப்பணிக்காக எவருமே துணியாத ஒரு பணியை திரு.மா.பரசுராமன் அவர்களும் திரு.ப.சற்குணம் அவர்களும் தொடங்கினார்கள். அதிக பணச் செலவில் செய்ய வேண்டிய திருப்பணியை சிறிய தொகையுடன் நிதிபற்றாக்குறையில் ஆரம்பித்தார்கள். இந்த நிலையில் அத்திருப்பணிக்கான சிலையை உருவாக்கு வதற்கு வேறு ஒருவாலிபரும் கைகொடுத்தார். அவர்தான் புல்லுமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட சிற்பஓவியக் கலைஞர் திரு.ப. நல்லரெத்தினம் என்பவர். விபுலாநந்தர் மேல் கொண்டிருந்த பக்தியின் காரணமாக இந்த நல்லகாரியத்தை செய்யப்போகும் அந்த இருவருக்கும் இத்திருப்பணியை இலாபம் கருதாது செய்துமுடித்தார்.

இதிலே அவரது சிற்ப திறனும் கற்பனைவளமும் அற்புதமாக பளிச்சிட்டன.

இவ்வேலை நடந்து கொண்டிருந்தபோது நிதி நிலைபற்றிய குழுக்கள் கூட்டங்களில் நானும் பங்கு பற்றியிருந்தேன். மட்டுமன்றி மட்டக்களப்பு எழுத்தாளர் சங்கம்சார்பில் போதிய ஆதரவு வழங்கிய தருணத்தில் ஆரம்பத்தில் மட்டக்களப்பில் நிறுவிய சிலைக்கும் அவர்களால் எடுக்கப்படவிருக்கும் சிலைக்கும் இடை யிலுள்ள தாரதம்மியம்களை நான்உணரலானேன். நகரமத்தியில் அமைந்திருந்த சிலையால் விபுலாநந்த சுவாமிகளின் பணிகள்யாவும் படித்த மட்டத் தவராலேயே நுகரப்பட்டுக் கொண்டிருந்தது. அதனால் விபுலாநந்தரின் பணிகளை உணர்பவர்கள் சாதாரண மக்களாக இருக்கவேண்டும் ஆகவே சாதாரண மக்களையும் சென்றடையக் கூடியதாக அவர்களின் பணியிருப்பதை அவதானித்தேன். எனவேஎனது உள்ளக்கிடக்கைகளுக்கு இவை ஊக்கமும் உரமும் ஊட்டுவதாகவும் அமைந்திருந்தபடியால் இத்திருப் பணிக்கான முழுஆதரவையும் என்னாலான வரையில் செய்தேன். சிலைஅமைப்பதற்கான நிதிக்கான ஆதரவிற்கு மட்டுமன்றி சிலையை ஊர்கள் தோறும் ஊர்வலமாக எடுத்துவருகின்ற முயற்சிகளுக்கும் தக்க, மக்களின் மனஉந்துதல்களையும் ஆதரவுகளையும் நல்குவதற்கான பலமுயற்சிகளில் பங்குபற்றி என்பங்களிப்பை செய்தேன்.

ஏற்கனவே எழுத்தாளர் இலக்கிய ஆர்வலர் படைப்பாளி என்ற வகையில் அமரர் சற்குணமவர்கள் எனக்கு நன்கு அறிமுகமாகியிருந்தார். ஆனால் அமரர் பரசுராமன் அவர்கள் சற்குணம் அவர்கள் விபுலாநந்த சிலைநிறுவும் பணிபற்றிய கூட்டங்களை ஒழுங்கு செய்யும் போது திரு.மா.பரசுாராமன் அவர்களை அழைத்து வருவார். அப்போதுதான் நான் அவரையிட்டு தெ[illegible]ாள்ளுகின்ற வாய்ப்புகிடைத்தது. முற் காலத்திலே [illegible]ரிவர்கள் மரத்தின்கீழே நீண்ட தவமிருந்து பல[illegible]க்கு பின்பு நன்குபழுத்த ஒரே யொருகனி முனிவர்முன் விழும். அப்போது அதனை முனிவர்எடுத்து உண்டு நீண்டகாலம் வாழ்வார் என்பதனை நாம்புராணங்களில் படித்திருக்கின்றோம். அதுபோல சபைகளிலே பிரசன்னமாகியிருக்கும் திரு.பரசுராமன் அவர்கள் அங்குநடைபெறும் விடயங் களை மிகஅவதானமாக கேட்டுவிட்டு இறுதியில் ஒருசில வார்த்தைகளையே அவர்கூறுவார். இது அங்கிருந்த வர்களுக்கும் சபையின் நிகழ்வுகளுக்கும் நீண்ட ஆயுளையும் அதிவலுவையும் கொடுக்கும். இவரைப்பற்றி சொல்வதானால் எனக்கு இரண்டு சொற்றொடர்கள்தான் எனதுஎண்ணத்தில் பளிச்சென உதிக்கின்றன. ஒன்று- இவர் ஒரு இல்லறத்தில் வாழ்ந்த இராமகிருஷ்ண மிசன் துறவி. மற்றயது- நல்லதொரு தமிழ்ப் பண்பாளன். உண்மையிலே இவருடைய முயற்சி யால்தான் ஊரெங்கும் விபுலாநந்தர் பற்றிய உணர்வு ஏற்பட்டது. அதனைக் காலங்காலமாக நினைவு கூரத்தக்க நிலையில் ஊரெங்கும் முக்கியமான இடங்களில் விபுலாநந்தருக்கான நினைவுருவச்சிலைகளை நிறுவி னார்கள் என்று சொல்வது நன்றெனப்படுகின்றது.

# கிழக்கில்கிளர்ந்த பழந்தமிழ்வேள்

எஸ்.பி.கனகசபாபதி B.A.(Hons)
Montreal Quebec

“கனக்ஸ்” கனடாவில் நீண்டகாலமாக தமிழ்ப்பணி செய்துவரும் நான்கெழுத்து சக்தி அதனைச்சற்றே விரிவாக்கினால் “கல்கிதாசன்” என்னும் புனைபெயர் வெளிவரும். வெறுமனே கதைகள், கட்டுரைகள் கவிதை களால் அலங்கரிக்கப்பட்ட பத்திரிகைகளில் இசை, நடனம், அரசியல், சமூகப்புரட்சி, வரலாறு, நாட்டுநடப்பு, தேச சஞ்சாரங்கள் என்பனவற்றை நகச்சுவையுடன் புகுத்தி தமிழர்களின் நீண்டகால துயிலை எழுப்பியவர் அமரர் கல்கி. இப்படியாக இதழியலில் முத்திரைபதித்த அமரர்கல்கியின் அடியவரானவர். அதனால் அவரின் பெயரை தனது புனைபெயராக்கி அதில் புகுந்து கொண்டவர். எழுத்துலகில் வலம்வரும் உண்மையானபெயர் எஸ்.பி. கனகசபாபதி! தமிழ்மொழிப் பாண்டித்தியம் பெற்றவர். அவர் இலங்கைஅரசதுறையிலும் வங்கியிலும் பணியாற்றியவர். பலபத்து ஆண்டுகளக்கு முன்னர் கனடாவில் புலம்பெயர்ந்து ஆங்கிலம் பிரஞ்சு மொழிகளில் சிறந்து தமிழ் - பிரன்சு மொழி பெயர்ப்பாளராகவும் மக்கள் நலன்பேணும் ஆயுள்காப்புறுதி துறையிலும் தடம்பதித்தவர். மேலும் சொல்லப்போனால் ஒருஆங்கிலக்கவிஞனும்கூட. இவரது ஆங்கிலகவிதைக்கு அமெரிக்ககவிதைவட்டம் பரிசளித்து பாராட்டி அதன் கவிதைத்தொகுதியிலே பிரசுரித்தும் உள்ளது. முதன்முதல் வடஅமெரிக்காவில் மட்டக்ளப்பிற்கே உரிய வடமோடிநாடகமான “வில்விசயன்” என்னும்நாடகத்தை பயிற்று வித்து அரங்கேற்றிய பெருமையுடையவர். மட்டக்களப்பிலிருந்து மண்வாசைன யுடன் புலம்பெயர்ந்த கனடாஅண்ணாவியாரும் கூட. அரசியல் வாரிசுகளின் தந்தை என்னும் பெருமைக்குரிய அறப்போர் அரியநாயகம் வாழ்க்கை வரலாறு என்னும் நூலை எழுதியதுடன் மட்டக்களப்பின் பண்டைவரலாற்று அடிச்சவடி இரண்டு தொகுதிகளின் இணைஆசிரியருமாவார். மொன்றியல் ரொரன்ரோ விபுலாநந்தர் பணிமன்றத்தின் ஆர்வலர்.மொன்றியல் உலகத்தமிழர் சங்கத்தின் ஸ்தாபகர். காரைதீவிலிருந் 15 மைல் தெற்கிலேயுள்ள திருக்கோவில் என்னும் புகழ்பெற்ற ஊரிலேபிறந்து வாழ்தவர். சிறப்பாக விபுலாநந்தரின்பணிகளில் ஈர்க்கப்பட்டதனால் காரைதீவி னையும் தன்னுள்மானசீகமாக காதலித்தவர். அதன்பயனாக காரைதீவில் தான்கண்ட அமரர் மா.பரசுராமன் பற்றிய இவரது கட்டுரை.

தொகுப்பாசிரியர்.

கண்ணகிவாழுமூர், கவிந்தமிழ்பேசுமூர், காரேறுமூதூர், களத்துமேடுகளமைந்தவூர், முத்தமிழ் வித்தகர்உதித்தவூர், காரைதீவு என்னுமூர். அந்தவூர்தான் கலாநிதி பரசுராமனும் உதித்தவூர்.

எனக்கு அப்போதுசிறுவயது. எனதுஊர் திருக்கோவில். காரைதீவைக்கடந்து ஒவ்வொரு தடவையும் பிரயாணம் பண்ணும் போதெல்லாம் அந்த ஊரைநன்றாக உற்றுரசித்துச் செல்வேன். அந்தஊரில் ஏதோ ஒருவிதசக்தி இருப்பதுபோல எனக்குப்பட்டது. அழகியதெங்கும்,கமுகும்,வயலும்வயல்சார்ந்த வெளி களும், கடலும்கடற்கரைக்காட்சிகளும், கட்டிடங்கள், கடைத்தெருக்கள், மாடமாளிகைகள், கல்விக்கூடங்கள், கற்றார், பெற்றோர், கலைஞர்கள், கவிஞர்கள், ஆசிரியர்கள், பிள்ளைகள், கிள்ளைகள் இப்படியே எண்ணற்ற காட்சிகள். எல்லாமே என்னைக்கவர்ந்தன.

காலப்போக்கில் நான் சிவாநந்தவித்தியா லயத்தில் கல்விபயின்று பின்னர் பல்கலைக்கழகம் செல்ல வேண்டிய நிலை உருவானதற்கும் காரைதீவிற்கும் ஒருசம்பந்தம் ஏற்படலாயிற்று. அது வரைக்கும் காரைதீவிற்குள் உள்ள அந்தச்சக்தியை முற்றாக என்னால் உணரமுடியவில்லை. ஆனால் அதைப்பற்றியே இடையிடையே நான் சிந்திப்பதுண்டு. அது வார்த்தைகளால் புரியவைக்கமுடியாத ஒரு உணர்வு.

எங்களூர் பாடசாலையில் க.பொ.த.சாதாரணப் பரீட்சையில் சித்தியடைந்து உயாதர கல்விக்காக ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கும் போது எங்கள் பாடசாலையில் அதிபராகவிருந்த அமரர் திரு.எஸ்.எம்.லீனா அவர்கள் என்னைஅழைத்து ஒரு பதிவுத்தபாலைத் தந்தார். அதனை நான்படித்தபோது “சுவாமிவிபுலாநந்தர் ஞாபகார்த்த தங்கப்பதக்கமும் புலமைப்பரிசிலும்” என்றதலைப்பில் அக்கடிதம் வரையப்பட்டிருந்தது. 1963இல் க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு முதல்முறையாக அரசினால் சுவாமிகளின் பெயரால் அறிமுகப்படத்தப்பட்ட புலமைப் பரிசில் திட்டம். முதல்தர மாணவனாக நான் க.பொ.த.சா.பரீட்சையில் சித்தியடைந்தமைக்காக அந்தப் பரிசு எனக்கு அப்போது வழங்கப்பட்டிருந்தது. அப்போதிருந்த இராமகிருஷ்ணமிசனின் மடாதிபதி மறைந்த சுவாமிநடராஜானந்தஜீ அவர்களால் உறுதி செய்யப்பட்டு அக்கடிதம் எனக்கு எனது பாடசாலை அதிபரூடாக அனுப்பப்பட்டிருந்தது. அதனால் நான் எனதுபாடசாலை எனதுகுடும்பம் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. காரைதீவைப்பற்றி மேலும் அறிய வேண்டுமென்ற ஆவலை இக்கடிதமே தூண்டியது எனலாம்.

யார் இந்தச்சுவாமி விபுலாநந்தர்? யார் இந்த மடாதிபதி நடராஜாநந்தஜீ? மற்றும் இராமகிருஷ்ண மிசனின் தொண்டுகள் என்ன? என்பனபோன்ற கேள்விகளுக்கு நான் என்னுள்ளேயே விடைகாண முயன்று கொண்டிருந்தேன். அதனால் என்பார்வை காரைதீவுக்கு திசைதிரும்பியது. சுவாமிநடராஜாநந்தாஜீ விபுலாநந்தரின் மருமகன். உறவுகளால் உயர்ந்த காரைதீவு. அதனால் அங்குள்ள சக்தியின்வடிவம் சிறிதாக புலப்படத் தொடங்கியது எனக்கு. மேலும் சுவாமிவிபுலாநந்தரால் பலபாடசாலைகள் இலங்கையில் உருவாக்கப்பட்டு நிருவகிக்கப்பட்டு வந்தமையும் அவற்றுள் சிறந்த பாடசாலையாக விளங்கும் சிவாநந்தாவிற்குதான் நான் எனது க.பொ.த. உயர் படிப்பிற்காக செல்கின்றேன் என்பதுவும் அதை விடமேலாக முதல்முறையாக அறிமுகப் படுத்தப்பட்ட புலமைப்பரிசில் எனக்குகிடைத்தமை பற்றியும் சிந்திக்க சிந்திக்க நான் ஆகாயத்தில் மிதப்பது போன்ற ஒருமகிழ்ச்சி. மட்டக்களப்பு நோக்கிய பயணங்களின் போது காரைதீவினை கடக்கும் போதும் எனக்கு முன்புஏற்பட்ட அந்தசக்கி என்னுள் விளையாடுவது போன்ற ஒருபிரமையை உண்டுபண்ணியது.

காரைதீவைச்சேர்ந்தசுவாமிவிபுலாநந்தரைப்பற்றி நிறைய ஆராய்ந்தேன். அவர் பிறந்தஇடம், படித்த இடங்கள், கற்றகல்வி, அவரதுஆக்கங்கள், பணிகள், போதனைகள், சேவைகள், சமூகப்பார்வை முதலிய சகலவிடயங் களையும் பற்றிஅறிய அறிய அவரை நேரில் காணமுடியவில்லையே என்ற கவலையும் ஏக்கமும் என்னுள் எழலாயிற்று. ஆயினும் ஒரு பெரும்பாக்கியம் அவரது மருமகன் சுவாமிஜீ நடராஜாநந்தஜீ அவர்களுடன் சிவபுரியில்-குருகுலத்தில் தங்கி அவரோடு அளவளாவும் சந்தர்ப்பமும் எனக்கு கிடைத்தது பெரும்பேறாகவே கருதுகின்றேன். அவர் கூறிய புத்திமதிகள் உபதேசங்கள் அவரதுஆசியும் சேர்த்து காரைதீவில் நான் கண்டகாட்சிகளும் எனக்கு புதியசக்தியை தந்தன. புண்ணியவான்களைப் பெற்ற பூமியாதலால் காரைதீவு எனதுமதிப்பிற்குரிய ஊராக விளங்கியது. நான்பாடசாலையிலிருந்து வீடுசெல்லும் போதும் மீண்டும்பாடசாலை செல்லும் போதெல்லாம் காரைதீவினை என்கண்கள் உற்று நோக்கி அங்கு எதையோ நான்தேடுவதைப் போன்ற உணர்வு ஏற்படும். ஆவ்வூர்மக்களில் பலரை நான்பஸ்சில் சந்தித்திருக் கின்றேன் அவர்களுடன் அளவளாவியிருக்கின்றேன் அப்போதெல்லாம்

சுவாமிவிபுலாநந்தர் இன்னமும் அவ்வூரிலே உலாவருவதாக என்னுள்நான் நினைத்துக் கொள்வேன்.

இப்படியான ஒருநிலை என்னுள் ஊறியிருந்த ஒருகாலகட்டத்தில்தான் ஒருநாள் காரைதீவிலே சந்தனநிற வாலாமணியும் வேட்டியும் அணிந்த ஒருகனவானைக் கண்டேன். அதன்பின்னர் அவரைப் பலதடைவைகள் கண்டிருக்கின்றேன். சிலவேளைகளில் அவர் என்கண்களில் தென்படாதபோது அந்த உருவத்தையே நான் தேடுமளவிற்கு என்மனதில் அவர்பதிந்துவிட்டார். பஸ்சில் பயணம்செய்த சிலரிடம் அவரைப்பற்றி விசாரிக்கலானேன். இவரும் விபுலாநந்தரின் உறவினரோ என எண்ணினேன். சிவாநந்தாவில் என்னுடன் படித்த காரைதீவைச் சோந்த சகமாணவர்களிடம் அவ்வூர்பற்றியும் அங்குவாழும் மக்கள்பற்றியும் அறியமுற்பட்டேன். அதன்பயனாக நான்நினைத்தது போலவே நான் காரைதீவில் காணும் தேடும் அந்தஉருவத்திற்கும் சுவாமிவிபுலாநந்தருடன் தொடர்புடைய விடயங்கள் தெரிய வந்தன. காரைதீவில் ஒருபிரபல்யமான டாக்டர் அத்தோடு அவர்தான் அவ்வூரின் சேர்மனும் மேலும் அங்குள்ள ஆலயத்தின் பிரதமதர்மகர்த்தாவும் அவரே என்று அறிந்தேன் ஆச்சரியப்பட்டேன். அவரது கம்பீரமான தோற்றம் வீச்சானநடை, சந்தனநிற உடை, சாந்தமான பேச்சு, மக்கள்பிணிபோக்கும் வைத்தியசேவை, சுவாமி விபுலாநந்தரிடம்கொண்டபக்தி, கிராம அபிவிருத்தியில் அவரது தூரநோக்குச் சிந்தனைகள், மண்வாசைன கைங்கரியங்கள் போன்ற இன்னோரன்னவை பற்றி கேட்க கேட்க என்னை அவர்பால் கவர்ந்தன.

“மனமென்னும்மேடையிமீது முகமொன்று ஆடுது....” ஆமாம் இன்றும் கூடப் அமரர் பரசுராமன் அவர்களின் இளமைக்கால முகம் என் அகக்கண்களில் தெரிகின்றது. இன்றுமட்டுமல்ல இனிமேலும் நான் காரைதீவைத் தாண்டுகையில் அந்தமுகத்தைத்தேடிக் கொண்டே இருப்பேன்.

டாக்டர் மா.பரசுராமன்அவர்கள் தான் சிறுவனாக இருந்த காலத்தில் சுவாமிவிபுலாநந்தர் கடற்கரையில் உலாவப்போகையில் அவரைப்பின்தொடர்ந்து செல் வாராம். காரணம் அவருடன்அளவளாவ வேண்டு மென்ற பேராசையால். அதைஅறிந்த சுவாமிகளும் அவருடன் உரையாடியிருக்கின்றார். சுவாமியின் போதனையால் ஈடுபாடுகொண்ட பரசுராமன் அவர்கள் அவரதுபணியில் தன்னையும் ஈடுபடுத்திக் கொண்டார்கள். சுவாமியைப் பெரிதும்மதித்த பெருந் தகைகளில் வைத்தியகலாநிதி பரசுராமன் அவர்களும் ஒருத்தர். சுவாமியின் போதனைகளிலும் சாதனைகளிலும் ஊறிய அவர் விபுலாநந்தர் மறைந்த பின்னர் ஆறாத்துயரில் ஆழ்ந்தார்.

வைத்தியத்துறையில் பட்டம்பெற்று ஒரு வைத்தியராக 50ஆண்டுகள் சேவையாற்றிய போதும் தமிழ்ப்பணியில் தனதுசமூகத்திற்காக சமய, அரசியல், சமூகப்பணிகளுட்பட பல்வேறு துறைகளில் மக்களு க்காக சேவையாற்றி தாராள மனப்பான்னையுடன் வாழ்ந்தவர்.விபுலாநந்தர்,நடராஜாநந்தாஜீ,சித்தானைக்குட்டி போன்றவர்களின் வரிசையில் ஒருசிறந்த சமூகசேவை யாளனை வள்ளலை வல்லவனை இன்று காரைதீவு மக்களும் இழந்துவிட்டனர். இத்தகைய உயர்ந்த மனிதனை கிழக்கில் கிளர்ந்தபழந் தமிழ்வேளைத் தொலைத்துவிட்டு கிழக்கிலங்கை சமூகமும் தவிக்கின்றது.

“நல்லாரைக்காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றேயவரோடு
இணங்கியிருப்பதுவம் நன்றே” ,

இந்தப்பாடல் வரிகளின்படி டாக்டர் மா.பரசுராமன் இந்தப் பூவுலகினைவிட்டுப் போனாலும் அன்னாரது சொற்களையும் குணங் களையும் கூடவே அவரது சேவைகளையும் நினைப்பது மிகவும்நன்றல்லவா. நல்லதொரு நோக்கத் திற்காக அல்லது கொள்கைக்காக இறுதிவரை போராடி உயிர்நீத்த உலகதீரர்கள் மாவீரர்கள் என இந்தமாநிலம் பலரை மதிக்கின்றது. நினைக்கின்றது. சிலையெடுத்துத் துதிக்கின்றது. அப்படியாயின் தன் இறுதிமூச்சுவரையும் தான் பிறந்த மண்ணுக்கும், சமயத்திற்கும் சமூகத்திற்கும் சேவைசெய்து மறைந்த வள்ளல் டாக்டர் மா. பரசுராமன் அவர்களுக்கும் நிச்சயம்சிலையெடுத்து நினைவு கூரவேண்டியவர்களாக கிழக்கின்மைந்தர்கள் முன்வர வேண்டும்.

காரைதீவுக்கிராமத்திலே சாதாரண ஒருகுடும் பத்தில் பிறந்து வைத்தியகலாநிதியாகி, மக்களை நல்வழிபடுத்தும் சமயப்பணியில் தொண்டாற்றி, ஒரு நேர்மையான அரசியல்வாதியாக கிராமசபைத் தலைவராக பின்தங்கிய நிலையிலிருந்த தன்ஊர் மக்களுக்கு அளப்பரிய சேவைகளைச் செய்து பல மக்கள்நலன் நிலையங்களை ஆரம்பித்து சுவாமி விபுலாநந்தரின் பணிகளை சாதாரணபாமர மக்களும் அறியும் வகையில் எடுத்துச்சென்ற உத்தமனாம் பழந்தமிழ்வேள் மா.பரசுராமன் அவர்களை கிழக் கிலங்கை மக்கள் மறப்பது ஞாயமா?

இந்தவிடத்தில் இன்னுமொரு விடயத்தையும் சொல்வது பொருத்தமாக இருக்கும் எனநம்புகின்றேன். கிழக் கிலங்கையில் பலகிராமங்கள் கல்வித்துறையில் சிறந்துவிளங்கின. கல்லாறு, காரைதீவு, களுதாவளை, தம்பிலுவில், திருக்கோவில், மண்டூர் இப்படி இன்னும் அநேககிராமங்கை 120 [illegible]வாமிவிபுலாநந்தரைத்தொடர்ந்து பலகல்விமான்களுட[illegible]தித்தார்கள். புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, பண்டிதர் பூபாலப்பிள்ளை, திரு.கை.கணபதிப்பிள்ளை,கலாநிதி ஈழத்துப்பூராடனார், பேராசிரியர் மௌனகுரு, பேராசிரியர் பாலசுந்தரம், வித்துவான் செபரெத்தினம்,வித்துவான் ஞானரெத்தினம் எனப்பலர். கிராமங்கள் தோறும் கல்வியும் செல்வமும் பெருகின. வளம்கொளித்து விளங்கிய வேளை மக்கள்செறிவுடன் வாழத்தொடங்கினர். கிராமங்கள் விஸ்தீரணம் பெற்றன. ஆனால் கிழக்கிலிருந்த கிராமங்கள் கிராமங்களாகவே தொடர்ந்தும் இருந்தன. ஏன்மாறவில்லை? ஏன் மாற்றவில்லை?

இலங்கையில் வடக்கிலும் கிழக்கிலும் காரைதீவு என்னும் பெயரில் கிராமங்கள் இருந்தன. இதனால் தபால்விநியோகத்தில் பலகுளறுபடிகள் ஏற்பட்ட இருகிராமத்தவர்களின் வாழ்க்கையில் பெரும்பாதிப் பினை ஏற்படுத்தியது. இதனால் ஒருகாரைதீவின் பெயரை மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை முன் வைக்கப்பட்டது. வடபகுதியிலிருந்த காரைதீவை காரைநகர் எனமாற்ற முஸ்தீபுகள்நடைபெற்றன. ஆனால் மருத்துவர் பரசுராமன் அவர்கள் கிழக்கிலிருந்த காரைதீவை காரைநகர் அல்லது காரைப்பட்டினம் எனமாற்ற வேண்டுமென கடும் பிராயத்தனம் எடுத்துக் கொண்டார். இந்தக் காரைதீவின் ஒருபக்கம் மட்டுமே கடலால் (நீரால்) சூழப்பட்டிருப்பதால் தீவுஎன்பது இக்கிராமத்திற்கு பொருந்தாது என தன் வாதத்தினை முன்வைத்து செயல்பட்டார். தனதுபகுதி மக்களின் ஒட்டுமொத்த ஆதரவின்மையும் வடபகுதி மக்களின் ஒற்றுமையும் ஆதரவும் அரசியல் செல்வாக்கும் விளையாட கிழக்கின்காரைதீவு இன்னமும் தீவாகவேயுள்ளது மிகவும் மனவருத்தத்திற்குரிய விடயமாகும். இதனை எடுத்துரைத்த தீர்க்கதரிசியின் உள்ளக் கிடக்கையை உணராத நம்மக்கள் பலஅபிவிருத்தித் திட்டங்களை இழந்துள்ளதுடன் தற்போதய திட்டமிடல் அமைச்சினதும் தேர்தல் ஆணையத்தினதும் செயற்பாடுகளின்படி நகர சபையாக மாற்றப்படுவதிலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளது.

இறுதியாக நான்மதித்த கிழக்கில்பூத்ததமிழ் மைந்தர்களுள் மருத்துவர் பரசுராமனும் ஒருத்தர். அன்று கண்டமுகம் இன்றுஇல்லை. அதனைஇனிமேல் காண முடியாதகாரியம் ஆகிவிட்டதால் அன்னார்பற்றி நான் அறிந்த விடயங்களையும் என்உள்ளக்கிடக்கை களையும் இதன்மூலம் சொல்லக்கிடைத்தமையால் மனம் திருப்தி அடைகின்றேன்.

மிகச்சிறந்த சமூகசேவையாளனும், பக்திமானும், நேர்மையான அரசியல்வாதியும், சிறந்தவைதியனும், கொடைவள்ளலும், தொண்டனுமாகிய என்மண்ணின் மைந்தன் தமிழ்வேள் வைத்தியகலாநிதிமா.பரசுராமன் அவர்கள் கிழக்குமண்ணிலே என்றென்றும் நினைவு கூரப்படும்வகையில் அன்னாரது பெயரில் வேறுவடி வங்களில் நினைவுமையம். நினைவுச்சிலை, புலமைப் பரிசில் போன்றவற்றைச்செய்யநாம்முன்வர வேண்டும். இதன்மூலம் இன்னும் பலஅறிஞர்களையும் மேதாவி களையும் நம்மண்ணில்உருவாக்கலாம் என்பது எனதுமுடிவு.

# என்மனதிற்பட்டவை

கலாநிதிக.தா. செல்வராசகோபால்
(ஈழத்துப்பூராடனார்)

விபுலாநந்த அடிகளாரின் சிலைத்திருப் பணித் தொண்டர் அமரர்தமிழ்வேள், வைத்தியகலாநிதி மா.பரசுராமன் எனும் இந்தபனுவலை காணும்போது என் மனதுள் சிறைப்பட்டிருந்த பலசிந்தனைகள் விடுதலை யாகிச் சிறகடித்துப் பறக்கின்றன. அவற்றை உங்கள் முன்வைப்பது நலமென்பது மட்டும்என் எண்ணமன்று. இந்தச் சிந்தனைகளால் நம்முள்பலர் ஈர்க்கப்பட்டு தம்செயல்களில் ஒருசெம்மையைத் தாமே உருவாக்கிக் கொள்வர் என்பதும் என்எண்ண விளைவாகும்.

பாரகத்தே பிறந்தவர்கள் இறப்பது முன் கூட்டியே உறுதிப்படுத்தப்பட்ட நியதி.ஆதிமனிதனும் இதற்குக் கட்டுப்பட்டு உலகில் உடலை விட்டதுடன் தன்உயிரையும் தொலைத்து விட்டான். அவ்வாறு மெய்யைவிட்டுப் பிரிந்துபோனஉயிர் என்னவானதென்று இன்றுவரை எவரும் கண்டதுமில்லை! எனினும் இதைநீங்கள் வாசிக்கின்ற கணத்திலே கூடபலர் இறந்தும் இருப்பார்கள்! அல்லது இறந்துகொண்டே இருப்பார்கள் என்பதுமட்டும் உறுதியான உண்மை! இந்த இறப்பு பிறப்பிற்கிடையிலான வாழ்க்கை நாடகம் தொடர்ந்து கொண்டும், அத்தகைய வாழ்க்கை காலத்தை மண்ணில் அழகுற எழுதியஎழுத்துக்கள் அழிந்து சிதைந்து இருந்தஇடம்தெரியாதவாறு மரணம் உட்கொண்டும் நிகழும் நிகழ்ச்சிகளை ஏப்பமிட்டவாறு காலச்சக்கரம் சுழல்கின்றது என்ற விதிமட்டும்மாறவே மாறப்போவதில்லை.

இறந்தவர் உடலை மண்ணுள்புதைத்தோ சிதை யில் எரித்தோவிட்டு அவர்....தாயின் மடியில்... பரமன் மடியில், அமரரானார், சிவபதமடைந்தார், நித்திய இளைப்பாறுதல் பெற்றார் என்றெல்லாம் எண்ணிக் கொண்டு ஆறுதல் அடைகின்றோம். ஒருவரின் மரணத் தினால் சிலநாட்கள் துயரப்படுகின்றோம். பின்பு வழக் கமான வாழ்க்கைக்குத் திரும்பிவாழ்கின்றோம். அவரின் நினைவாக கல்வெட்டு அல்லதுகையறுநிலை என்றெல் லாம் அழைக்கப்படும் நினைவுமலர், கண்ணீரஞ்சலிக் கைப்பிரதிகளை அச்சிட்டு விநியோகிக்கின்றோம். ஈற்றில் இதுஒரு குடும்பநிகழ்வின் ஆவணப்படுத்தல் நிலை யையே பெறுகின்றது. இதனால் அமரரான அவரின் உற்றார் உறவினர்களே அன்றி மற்றுயார் பயனடையப் போகின்றனர்?

வாழ்க்கையில் தனக்காகத் தன்குடும்பத் திற்காக வாழ்ந்து அமரரானவர்களே அதிகம் எனலாம். அவர்களுடைய நினைவுமலர்களால் பிரயோசனம் என்ன என நான்கேட்பதை தவறாகக் கொள்ளவேண்டாம். அத்தகையவர்களின் நினைவின் ஆவணமாக ஒருநல்ல நூலை வெளியிடலாம்.

அதில் அந்தநூலின் வெளியீட்டிற்கு காரணமாயிருந்த அந்தஅமரரின் கல்வெட் டையும் இணைத்துக் கொள்ளலாம். இதன்மூலம் அவரது வாழ்க்கையும் நினைவு கூரப்படும் ஒருபுதுநூலும் அவரது பிரிவின் தயவால் மக்களிடையே உலாவரும். இப்படி யெல்லாம் நான்நினைத்ததுண்டு. ஐம்பது வருடகாலம் அச்சகம், பதிப்பகம் வைத்திருந்த என் சேவையை நாடி வருபவர்களிடம் இந்த எண்ணத்தை வெளிப்படுத்தி வந்தேன். அதன்பயன் அதிக அளவிற் கிடைக்கா விட்டாலும் அடிக்கொன்று ஆவணிக்கொன்று என்ற அளவில் அதுவும் சிறிய நூல்களாகவே வெளி வந்துள்ளன.

அரைநூற்றாண்டுக் கால எதிர்பார்ப்பு வீண்போக வில்லை என்பதை திரு. அஜந்தா ஞானமுத்து அவர்கள் படைத்து வெளியிட்ட இந்தப்பனுவலைக் கண்டபின், நான்உணர்ந்து மகிழ்ந்தேன். ஆத்மதிருப்தியுற்றேன். இவர்துடிப்பான கடுப்பான ஒருசெயற்திறனுள்ள வாலிபர். மண்பற்றும் இவருடன் கூடவே புலம்பெயர்ந்து வந்துள்ளது. என்கடந்தகால அனுபவத்தில் பலரால் முடியாது என்று அஞ்சி பதுங்கி ஒதுங்கிய பல காரியங்களில் துணிந்து கால் வைத்து வெற்றிகண்டவர். உதாரணமாகஇவர் 1991இல் ஒன்றுசேர்த்தமைத்த முதன் முதல் மட்டக்களப்பு கனேடிய மக்களின் ஒன்றுகூடல். சுவாமிவிபுலாநந்த கல்வி அபிவிருத்திமன்றம், 2003இல் விபுலாநந்தர் மன்றத்தை நிறுவி விபுலாநந்த அடிகளாரின் விழாவினை மிகச் சிறப்பாகவும் விமர்சையாகவும் அதன் மூலம் நடத்தியமை 2002இல் நடத்திய பாடுமீன்களின் ஒன்றுகூடல். ஆதியஇவருடைய நிறுவனங்களின் தொடக்கப்பணிகள். இவரின் ஆற்றலுக்கும் ஆக்கத்திற்கும் சான்றுபகர்ந்தாலும், இப்போது கறையான் புற்றெடுக்கப் பாம்புகுடியிருப்பது போன்ற அவற்றின் நிலைகளை நான்கண்டு கொதித்துப் போவதுமுண்டு. அப்போதெல்லாம் முடியாததை தொடங்கிவைப்பது என் பணியேதவிர இதிலேதொடர்ந்து தோய்ந்து போவதல்ல என்செயல் என்று மென்மையாக இவர் சொல்வதைக் கேட்டுப் பூரித்துப் போவேன்.

தனதுமாமனார் அவர்கள் அமரரானதும் அவரை யிட்டு ஒருநினைவஞ்சலிப்பா மடல் எழுதித்தரும்படி என்னைக கேட்டுக் கொண்டார். அமரர் மா.பரசுராமன் அவர்களும் அமரர்ம.சற்குணம் அவர்களும் இணைந்து செய்த விபுலாநந்தர் படிவத் திருப்பணிபற்றிய காரிய ங்களை ஓரளவு தெரிந்திருந்தேன். பட்டிருப்புத் தேர்தல்தொகுதியில் இதுபற்றி நடந்தஆதரவுக் கூட்டங் களின்போது இவர்கள் இருவரையும் அடிக்கடி கண்ட சந்தர்ப்பங்களும் அனுபவங்களும் நிறைய இருந்தன. மேலும் அமரர் ம.சற்குணம் அவர்களின் இலக்கிய நூற்திரட்டல்,மட்டக்களப்பு கலையும்வாழ்வும் பற்றிய பலஆய்வுகளைச் செய்ததற்கான தகவல் திரட்டல்கள் என்பனவற்றிற்கு எனதுஇல்லநூலகத்தையும் மனோகரா அச்சகத்தையும் அடிக்கடி வந்து உபயோகித்து வந்த தொடர்பினாலும் ஏற்பட்டநட்பு பற்றிய நேரடி அனுபவமும் அறிவும் இருந்தன.

எனவே அமரர் மா.பரசுராமன் அவர்களின் விபுலாநந்தரின் படிவத்தின் நாடளாவிய ஊர்வலமும் அதன்போது விநியோகிக்கப்பட்ட அமரர் ம.சற்குணம் அவர்களின் சிலைநாயகன் விபுலாநந்தஅடிகளாரின் வரலாறும் மக்களிடையே அவரின்மகிமையை உணர்த் தின. உள்ளங்களில் உறுத்தப்பட்டன. இதன்பேரில் பலபாடசாலைகளிலும் கிராமப்பொது இடங்களிலும் அடிகளாரது முழுஉருவச்சிலையும், மார்பளவுச்சிலை களும் நிறுவப்பட்டன. அதுமட்டுமல்ல பலபாடசாலை களில், நாளாந்தபணிகளைத் துவக்கமுதல் மாணவர்கள் அடிகளார் சிலை அருகில் குழுமி நின்று அவரால் இயற்றப்பட்ட வெள்ளைநிற மல்லிகையோ என்ற இறைவணக்கப் பாடலை பாடும் பழக்கமும் உண்டானது. இவற்றைப் பார்த்த எனக்கு இந்த மண்மகிமைத்தாகம் மக்களிடை ஏற்படக்காரணரா யிருந்தவர்களையிட்டு பெருமிதப் பெருக்கில் நீந்தும் சுகத்தைத் தந்தன.

இந்தஉந்துதலால் நான் நினைவுமலரின் இடத்தில் ஒருசாதனை மலருக்குரிய தகவல் கூறும் பனுவலைப் படைத்தால் அது பயனுள்ளதாக மட்டு மல்ல,அதைப் பார்ப்பவர்கள் மனதில் தாங்களும் ஏதாவது சாதனை புரியவேண்டும்மென்ற தவிப்பை உண்டாக்கும் எனச்சொன்னேன். மேலும் மற்ற உயிரினங்களைப் போலப் பிறந்து உயிர்வாழ்வதற்காக வாழ்வதுடன் மட்டும் இறந்துபோகும் மனிதர்களுக்கு நினைவுமலர் ஆவணம் தயாரிக்கும் வாரிசுகள் தமக்கு உவப்பானவர்கள் செய்யாத சாதனைக்குப் பரிகாரமாக அவரது நினைவு நிறுத்தத் தக்கதொரு நூலையாவது வெளியிடின், அதன்மூலம் அவரின் பெயரைத் தக்கவைத்துக் கொள்ளலாமே என்று எண்ணமும் ஏற்படவழிவகுக்கும் எனவும் சொன்னேன். தான்செவி மடுத்தவற்றை அலசிஆராய்ந்து தக்கதெனக் கண்டால் மட்டுமே அதில் தலையிடும் சுபாவம் கொண்ட திரு.அஜந்தா ஞானமுத்து அவர்கள் இதையே தான் விரும்புவதாகவும் எண்ணியதாகவுஞ் சொன்ன போது சந்தோசப்பட்டேன். அதை நூலுருவாக்கும் அச்ச மைப்பை எனக்குக் காட்டிய பொழுது ஆனந்தப்பட்டேன்.

நான்உலகத்தமிழர்பண்பாட்டியக்கத்துடன் என்னை இணைத்துக்கொண்டவன். அதன் உலகத் தலைமையின் பிரதித்தலைவராக இருந்து பணி புரிந்தவன். கனடாவில் அதன்கிளையைத் தாபித்தவன். இத்தனைக்கும் ஏற்ற தகுதியைவழங்கியவை இரண்டு காரியங்களே! முதலாவதுஅடிகளார் பிறந்த மாநில மண்ணில்பிறந்தவன் என்னும் உரிய தகமையாகும். இரண்டாவதுவிபுலாநந்தர் பிள்ளைத்தமிழ், யாழ்நூல்வெண்பா, விபுலாநந்தரின் தனஞ்செயனாரின் தசரூபத்தமிழாக்கத்தை செய்யுள் வடிவில் கூத்தர் விருத்தமாக படைத்ததும், விபுலாநந்தர் அம்மானை, விபுலாநந்தர் கல்விச் சிந்தனைகள், விபுலாநந்தர் தோத்திரத்திரட்டு முதலியபடைத்தும் பதிப்பித்தது போன்ற விபுலாநந்தர் இலக்கியத்தை வளர்த்ததுமாகும். கனடாவில் அடிகளாரது நூற்றாண்டு விழாஎடுத்து அதற்காக ஒருமலரை வெளியிட்டது. விபுலாநந்த 127 ன்றக் காப்பாளராக பணிசெய்தது. அடிகளாரது அவரின்மறைவின் பின்னரும் செயற்படுத்தி வந்த மாணாக்கர்கள் தொண்டர்களைஒவ்வொரு நினைவு விழாவின்பொழுதும் நினைவுபடுத்தும் முயற்சியைத் தொடங்கி வைத்ததுபோன்ற சிறுபணிகளையும் செய்துள்ளேன்.

இத்தனைக்கும் அடிகளார்வாழ்ந்த காலத்தில் வாழ்ந்திருந்தாலும் அவர்தாபித்த சிவாநந்தாவித்தியா லயத்தில் சொற்பகாலமே கல்விகற்றிருந்தாலும் விபுலரை நேரிற்கண்டதில்லை. அவரது பூதவுடலை மட்டும் கல்லடி தபோவனத்தில் வைத்துக் கண்டேன். ஆயினும் 1943ஆம் ஆண்டில் நான் அவரை அவர் படைத்த எழுத்துவடிவத்திற் கண்டு அவர்வசமானேன். அந்த ஆண்டில் நான்தோற்றிய கனிஷ்டபாடசாலைத் தராதரப்பத்திரப் பரீட்சைக்குத் தமிழ்இலக்கியமாகப் படித்த உரை நடைச் சிலம்பு என்ற பாடமே அவரை எனக்கு அறிமுகம் செய்து வைத்த எழுத்தோவிய மாகும். அதனால் அவரது பக்தனானேன்.

1947ஆம் ஆண்டில் ஆசிரியபயிற்சிக் கலாசாலை யில் என்பயிற்சி நெறியைத் துவக்கியபோது என் பெயரின் முதலெழுத்தின்விதி அடிகளாரின் தாயக மண்ணிற் பிறந்த இருவரைஎன்வலது இடதுபக்கங் களில் சேர்த்து வைத்தது. பொதுவாக மாணவர்கள் அகரவரிசையில் பதியப்பெறுவது வழக்கம். அதன்படி திரு.சுந்தரம்பிள்ளைஎன்பவருக்குஅடுத்ததாகஎன் பெயர் இடம்பெற்றது. அதைத்தொடர்ந்து திரு.செல்லத்துரை என்பவரின்பெயர்இடம்பெற்றது.இருவரும்காரைமண்ணின் மைந்தர்கள்.முதலாமவர்அடிகளாரின் சோதரியின்மகன், அடுத்தவர்பிற்காலத்தில்திரு.பூ.சுந்தரம்பிள்ளை அவர் களின் தங்கை மரகதவல்லியை திருமணஞ் செய்தவர். இந்தஇருவரும் என்னிலும்பார்க்க வயது, உருவத்திற் பெரியவர்கள். ஆயினும் என்பால் மிகவும் அன்பும்ஆதரவும்கொண்டு அவர்களின் தம்பியைப்போல பேணியவர்கள். இத்தகைய தொடர்பு இருவருடகாலம் தொடர்ந்து இருந்ததால் விபுலாநந்தர் அவதரித்த மண்ணைப் பற்றிய நல்லெண்ணமும் அடிகளாரைப் பற்றிய உயர்மதிப்பும் என்னை அறியாமலே என்உள்ளத்தில் வளர்ந்து வந்தது. இதன்விளைவாக என்இலக்கியப் படைப்புக்களால் அடிகளாரை நான்சிறப்பிக்க முயன்றேன்.

மட்டக்களப்பில் அவதரித்துத் தமிழ் பேசும் நல்லுலகல் தமிழும்,சமய சமரசமும் வளரக் கிராமப் பாடசாலை மட்டத்திலும் பல்கலைக் கழகங்களிலும் தமிழ் வளர்த்த விபுலாநந்த அடிகளாரின் நிழலிற் பயன் பெற்றவர்கள் பலர். படிப்பால் உயர்ந்து பட்டதாரிகளானோர் பலர். இன்று அவரை நினைவு கூர்பவர்களும் படித்தமட்ட அறிஞர்களே எனலாம். ஆனால் அவர்பிறந்த மண்ணின்மக்கள் விபுலாநந்தரின் அருமை பெருமைகளை அறிந்து தமதுமக்களை அவர்வழியில் நடத்துவதில் பின்நிற்கிறார்கள். காரணம்அவரையிட்ட அறிவு போதாமையே எனலாம். இப்போது நடாத்தப்படும் நினைவுவிழாக்களாலும் மலர்களாலும் இத்தகையமக்களல் எதுவிதபயன்களும் பெறபோவதில்லை. அதனால் தமது சந்ததியினரை அடிகளது வழியில் நடத்திச் செல்லும் உந்துசக்தியற்றவர்களாகின்றனர். இந்தகுறையை, விழாவெடுத்து மலர்வெளியிடும் குழாத்தினர் விபுலாநந்தரின் வாழ்க்கைவரலாற்று நூல்களைப் பதிப்பித்து பாடசாலைகளுக்கும் படிப் பகங்களுக்கும் பகிரவேண்டிய பணிகளில் ஈடுபட்டு முழுமைசெய்ய முன்வரவேண்டும் எனும் இறை நியமம் அல்லவா?

# SOME SIGNIFICANT BIOGRAPHICAL NOTES ABOUT THE

# LATE DR.M.PARASURAMAN

# (THAMIL VERL) OF KARAITIVU, BATTICALOA.

## Biographical Notes about the late Dr.M.Parasuraman

1- **Birth:** Date of Birth - April 01, 1929
Place of Birth - Karaitivu, Batticaloa

2- **Parents:** Father- Veerakutty Manikkapillai
Mother-Sellapa Thangamuthu

3- **Grew up:** Due to the early demise of his father while he was young, he grew up in the loving care of his maternal uncle and aunty.

4- **Brother:** Manikkapillai Vyramuthu
(Station Master. CGR Batticaloa)

5- **Sister:** Mrs. Theivanaipillai Vethanayagam
(Retired Teacher- Residing in U.K.)

6- **Marriage:** Date of wedding- August 29, 1957
Wife- Latchumi Ponniah
(Second Daughter of Mr.Ponniah (overseer) and Mrs. Valliammai Ponnaiah.

7- **Children:** Daughters Sivasakthi (Canada)
Jeyaramani (Denmark)
Son- The late Senthilvasan

8- **Son-in-Law** Ajantha Gnanamuttu (Canada)
Ananthamaheswaran Kanthavanam (Denmark)

9- **Grandchildren:** (i) Anujan Gnanamuttu
(ii) Adjani Gnanamuttu
(iii) Anuran Gnanamuttu

(iv) Anoj Ananthamaheswaran
(v)Anuram Ananthamaheswaran

10- **Education** (i) 1935-1947 Early Education
Ramakrishnamission, school-Karaitivu
(A school established by Swami Vipulananda)

(ii) 1947-1949 Higher education St. Mary's College – Kalmunai

(iii) 1949-1954 Medical education Indigenous Medical College- Colombo.
Obtained the Degree – DIMS; RMP.

11- **Employment:** 50 years in medical Profession
(i) Owened his own medical clinic until his son desmise.

(ii) Catered to the patients through the "Vasan Clinic" a medical clinic established in loving memeory of his son; until his passing away in 2005

12- **In Politics** 1963-1977- Three times (A total of 15 years) consecutively elected by the Karaitivu divison voters as a Chirman (Village head) Hon. Chairman. Subsequently, this becomes a regional council under the reorganization of local Bodies.

Under his stewardship as chirman of the council, he invited several senior cabinate ministers, including His Excellency R.Premadasa; the then President of Republic of SriLanka on the occation at the opening for the Karaitivu Vipulananda Vidyalay Play Ground.

13- **In the service to Humanity:**

(i) Honoured by his appointment as Justice of the Peace.

(ii) Replaced the dilapidated gravel and sandy roads with materialize tarred roads.

(ii) Interduced electricity and telephone service

(iv) Constructed a sports Ground for the Karaitivu Vipulananda Vidyalayam and had it declared open by His Excellency R.Premadasa; the then President of Republic of SriLanka on the occation at the opening for the Karaitivu Public Library.

(v) Inaugurated the Peoples' Bank branch at Karaitivu.

(vi) Helped to provide a block of land belonging to the temple for the construction for the Post Office Building.

(vii) Helped to inaugurate a Public Library in the former Village council building and declared open by the cabinet Minister Hon. Somaratne and the Hon.M.M. Mustaffa

(viii) 1985- In association with Mr.E.Vinayagamoorthy, Senior Education Officer, carried out extencsive post ethnic Relief work, as chirman of the Relief organizing committee

(ix) 1997- Founder of the Swami Vipulananda Memeorial Manram and Memorial Hall at Karaitivu.

(x) Inaugurated the Multi-Purpose Co-Operative Society.

(xi) Inaugurated an Agrarian service Centre.

14- **In his service to Religion**

(i) Junctioned as the President of the Goddess Kannaki Amman Temple during 1973-1997; a total of 25 years

(ii) As the President of the Hindu Religious Society, organized with meticulous care, various temple ceremonies and other religious activities.

(iii) Conducted in an illustrious manner the “Maha Kumbabisheham” ceremony with the co-operation of board of Trustees and the inhabitants of Karaitivu. The Ceremony was officiated by the High Priest Sreelasiri Kailasanathar Kurukkal.

(iv) Fully restored Kannaki Amman Temple that was destroyed during the ethnic disturbances and carried out Kumbabishegam, duly officiated by the High Priest Poorna Thiyagaraja Kurukkal, drawing the full support of the Board of Trustees and the people of Karitivu.

(v) 1969- Helped to erect a statue of Swami Vipulananda and it blessed by the Hindu saint Kuntrakudi Adigalar, coincide with the publication of a souvenir (ADIGLAR PADIVAMALAR) in memery of the Swamijee.

(vi) 1976- With unstinted support of the Kannaki Amman Temple Executive committee members, redesigned the KOPURAM of the temple, in corporating the traditional Hindu sculptures and carried the kumbabishegam ceremony coducted by the Vishvanatha Kurukkal.

15- **Travel Abroad**: Visited to Denmark in 1997
Migrated to Canada in 1997/1998
And return back home in 1998

16- **Called to Rest:** December 05, 2005

17- **Cremation:** December 09, 2005
at Karaitivu - His birth place

# Dr.Parasuraman
# A Life in Dedication

By Elayathamby Thangarajah
(Formally of the Central Bank of SriLanka)

"Let us see
God in the service of man"
Said
Lord Ramakrishna Paramahamsar.

The same wisdom was experessed by W.C. Gannett, when he said that

"If there is any kindness
Or good thing I can do
For my fellow being, let me do it now.
For I shall pass this way
But once"

Our late Dr.Manikkampillai Parasuraman did just that in his real life. I write about an incident that is true in nature, to connect the life of late Dr. Parasuraman to the noble profession of healing to wich he belonged.

"Doctor, you have an emergency; an unconscious victim of snake-bite is just been wheeled in to the emergency".

That was exactly what the panting ward attendant, who ran across the hospital ground and then to the Badminton Court, told the young House-Officer, who was playing badminton with his collegues a favourite game of the young doctor.

When the athletic young doctor heard this, he knew that every second gained is crucial. So, he repeated exactly what his panting ward-attendant did. He raced to the emergency Ward, grabbed a towel, cleand his hands and face, while appealing to the nursing staff, said, "I have no time to give instructions. Some of you know what to do in a situation of this nature. Give me your helping hands we could try saving a life."

The nurses rallied round. Blood transfusion system, oxygen supply system, antidote serum to neutralize the effect to the poison and other paraphernalia were brought and placed into positions and the treatment began. The young doctor checked the victim's pulls found to be low, but steady. He slit opened the fang-marks where the python; a snake with deadly poison found in Sri Lanka, specially in paddy fields, bit the victim while a nurse tied a mask around the young doctor's mouth and nose. The young doctor squeezed out the poison-mixed blood through the open wound simultaneously, transfusing a supply of fresh blood mixed with the antidote, into the circulatory system. he also constantly monitored the dulls-rate applying resuscitation to the victim every now and then.

The story was that this young paddy-field worker was bitten by this poisonous snake around 2:30 in th afternoon, while working in a paddy-field on the western shore of the Batticoloa lagoon. He had to be ferried across the lagoon to reach the hospital, which again took yet another two and a half hours. When he was finally brought to the hospital, some thought he was already dead, and suggested they took back home the victim to avoid the humiliation of an autopsy. At the insisfence of the victim's wife however they reluctantly brought him nto the hospital.

Incidentally, the Head-Surgeon under whom this young doctor worked found his diagnosis always correct. Based on his opinion the Head-Surgeon had issued instructions to the others to follow this young doctor's instruction, in the event he happened to be not available for consultation. With his instruction in place, the staff had no difficullities in rallying round the young doctor.

By about mid-night, the nursing staff finding the young doctor a little weasy, suggested to him to go to his Quarters and rest a while and that they will call him if his presfnce was needed. But still, the young doctor professed to stay

close to his patient; little knowing that as far as the doctor was concerned, this was a practical lesson in refrospect applying the knowledge of what he learned long time ago, as this case happened to be his first case of snake-bite.

This young doctor still in his badminton playing short pants and polo t-shirt, saw in the screen the victim’s pulls-rate improving gradually. Everyone was happy. In the meantime, the Head-Surgeon got the wind of it, personally visited with a basket of goodies for everyone to eat.

Meanwhile, the victim’s wife watched the whole king standing in a corner as a silent spectator. She was amazed to see so amny people running around, attending on her husband with a doctor himself standing besides her husband. She had heard of several stories of patients being left alone unattended too many hours and this was all the more curious to her.

Python bites are generally fatal. When the Head-Surgeon came to know about the astonishing recovery in this particular case he could resist the tmetation of openly congratulating each and everyone who played a part.

He patted the doctor and remarked that he had a great future. The young doctor actually left the ward only on the following morning, when he was sure that his patient was on the road to hi full recovery.

The day the patient was discharged, he expressed his desire to meet the doctor before he left, who according to him, “Gave him back his life.” The patient had come to know that he would have been barried alive, if not for his wife and this young doctor.

Not faneying what his patient had in mind, the young doctor ame to see him. After paying the customary respect to the doctor, he asked for a photograph of the doctor. When the doctor askedhim out of curiocity as to why he needed a photo of him, “Doctor,” he began, “no one has seen god. But, I have seen one in you. Only god, they say can give back a life, in my case you gave me back my life. I want to keep your photo near my swami picture and pray for you” he concluded. Having touched by his innocence, he opened his wallet and game him a photo oh himself, which he took for a passport application.

In this modern materialistic world, there is a tiny fraction of people who have some wholesome genuine feelings to help others. Such few, especially in the medical profession, are considered akin to the god almighty and consider doctors as walking gods.

Late Dr.M. Parasuraman was one such rare breed belonging to this medical profession. He dedicated his entire life in service of humanity through his medical profession. He in addition brought solace to his people through his religious and temple activities through his several outreach and using his political means he had in his possession. It is my sincere belief that his demise will not only be a hreat loss to his family, but it also will be a great loss to his village people.

I come to know Dr. M.Parasuraman while I was a room-mate of his brother Mr. Vyramuthu, in a hostel at Maradana. My uncle,the late sanitary inspector K.Varnakulasingam, who ;-mate of Mr.Vayramuthu arranged me a place with en I came to Colombo in 1954 to join the Central Book Services.

The late Dr. M.Parasuraman was a frequent visitor at that time, to his brother’s room. I remember him as a person, little fairer than his brother M. Vyramuthu wearing a white vesty with a yellowish or light brown national dress a top.

I am proud to record here, that it was me and the late Dr. M.Parasuraman who jointly packed all the medicine he bought for his medical clinic to be opened up at his village Karaitivu, after passing out as a doctor.

The late Dr.M. Parasuraman, as I mentioned at the beginning, did exactly what lord Rmakrishna Paramahamsa and W.C Gannett echoed.
I consider it a very great pleasure indeed to associate myself with this artile to be included in a book in his memory.

☆

"உங்களுக்குள் இருக்கும் உங்கள்குணம்தான் அசல். உங்கள்அசல்தான் உங்கள்வேர். அந்தவேர் மூலமாகத்தான் மரமாக எழுவதும் நீங்கள் மனிதனாகஇருப்பதும் அடங்கியுள்ளது. நல்லமனிதர்களின் சொற்களை நடத்தை களை பழக்கவழக்கங்களை வழிகாட்டுதல்களை ஏற்றுக் கொள்ளுங்கள். ஆனால்அவர்களாக மாறிவிடாதீர்கள். நீங்கள் நீங்களாகவேஇருங்கள். இதுதான் வெற்றிக்கான காரணமும்."

# VIPULANANDA'S END

Resources from:

Vipulananda
A Biography
The man and his achievements
(Page -193)

By:
K.Kanapathipillai
B.A., F.R.G.S

About the Author:

Kailayapillai Kanapathipillai, born on 24th May 1909, in Karaithivu, is one of the most distinguished products of Batticaloa. Besides holding an Honours Degree, he is a fellow of the Royal Georgraphic Society (London) and also a holder of the diploma in Georgraphy (London). He was in the teaching profession from 1929 to 1969 and retired as Principal of Shivananda Vidyalaya, Kallady. Among other books published by him in English are “Son of Man”, “This Baffling Existence”, “Creativity”, “Our need is Humanity, Our need is Sublimity” and collection off essays. He has also published a book in Tamil entitled “Katpin Kolundu”.

Mr. Kanapthipillai was a member of the management Committee of the Ramakrishna Mission of SriLanka, a member of Advisory Committee of the Public Library, Batticaloa President of the Educational Development Society of Batticaloa and President of the Council of Religions, Batticaloa.

He continues to lead an active life and is one whose views on matters of public importance are much sought after and respected.

And now, what of Vipulanda’s end? Flowers all his way strewn like mad!! I have seen Vipulanda at the grand reception that was accorded him, in my native village, when he returned from India full of honors, having been ordained a monk of the Ramakrishna Mission. That was in the year 1925. Draped in his ochre robe, he was then in his prime of life, and at the peak of his fame: both as a Bachelor of Science of the University of London, England, and a Pundit of the Madurai Tamil Sangham. Now that the evening has come so soon, and a decline in his all too-vigorous and healthy life, the shadows lay lengthening though the sun stood at noon only a few degrees (five) to the west of the zenith and growing and merging into one another as if overtaken by a solar eclipse and a fit gloam was spreading over the entire landscape, fit to engulf an effulgence that had held its sway for well over half a century. It was a ‘form’ that—

That Sri Lanka ‘bore’, shaped made aware, Gave once, her flowers to love, her way to roam, Washed by the rivers, blest by suns of home. And think, this heart, all evil shed away,A pulse in eternal mind, no less Gives somewhere back the thoughts by (Sri Lanka) given; In hearts at peace, under a (Sri Lankan) heaven.
(With deep apologies to Rupert Brooke whose ‘England’ I have replaced by ‘Sri Lanka’) It was a form that contemplated deeply and meaningfully on man, the mind of man, matter, and the spirit of the Universe.

What of the end of the tether? Vipulananda’s last days came immediately after he had crossed the meridian. He was fifty-five when he closed the chapter of his life. (1974). His last days were all sun and shower ----- somber, sad pensive, alternating with bright and resplented moods. Like unto the six moods of Sri Skanda, his moods were constantly changing and going through the three

conventional ‘gunas’: ‘Satvic’, ‘rajasvic’ and ‘thamasic’. But yet, despite these human fraiities he had one dominant mood, and that was the peaceful and ‘satvic’. ‘A life without a purpose is a languid drifting thing. Every day we ought to renew our purpse, saying to ourselves; This day let us make a sound beginning, for what we have hitherto done is nought’—Marcus Aurelius. And Vipulanada, so long as he lived, did make a puuposeful time-slot of every one of his days. They helped create the man. And when he failed to make a firm resolve, there came his end. Vipulanada naver lost himself in the void. Though a poet, he had his foot on firm earth; and till he came to the end of his life, he lived breathing the air of the common rabble and served them till the end of his active life, till the day the Yai-Nool had its ‘arangetram’ (publication) at the Karanthai Tamil Sangam on 5.6.1947.

Though palsy had struck him so early in life and laid him low for howsoever small a period, during the last days that remained for him to live of life after the ‘YAL-NOOL’ publication, he was perfectly calm and collected, peaceful and chewrful. His remaining papers were accumulated in the boxes and drawers; but I don’t think he had meant them for publication. Like John Milton, he had his inherent and constant ability. He was a master craftsman at poetry-making. He didn’t merely compose poetry like Bharathi; he wrought at it, chipped and moulded it, he laboured it.

A master craftsman no less celebrated and skilled in his art than Bevenuto Cellini in his. He was dying; dying slowly, gently and imperceptibly from the time he had an attack of enteric fever, a few years before he was sticken with palsy; anis stricken in heart. He was slipping out of time like the evening glow of the setting sun overtaken by the dark wings of the night. But being processessed of an iron and irresitable will, a will of adamant, his journey towards the end was slow. A permanent smile, however, suffused his countenance; and his look was penetrating, but yet hey lay in a condition of unutterable suffering. This mundane existence was loosing grip of him.

There came a time when he could think no more; his powerful memory almost collapased and failed to bear on record any of his past impressions. He thought no more; he wrote no more; sand no more, spoke no more; that silver tounge wagged not.

That resounding voice **was stilled for** ever. A thought-mechanism that was so big and imposind has shrunk, the scratching and scrawling of his powerful pen came to an end. He would hear no more, speak no more, his voice so voluminous and so full was hushed. All that he had achieved by way of spiritual gains appeared to unroll before his mind’s eye like a cine film. He as satisfied he had not lived his life vain. And, at last those large bulging eyes closed; and the fire of life in him kept lit for fifty- five years has got extinguished (1947). Though he is no more, his actions will still be felt as long as the need for them to continues. He is a man, for all that. This line from Shakespear is pregnant with meaning: Here was a man; when will come such another. And this line from Bosseut comes in handy as a funeral strain- so profound, so solemn, so exhilarating: So beautiful in the morning and in the evening that.

The day his body was brought to Batticaloa is still fresh in my mind, as if it was only yesterday. It lay in state in the Anaipanthy Vivekananda Hall, which was the venue of many a discourse of his; and the silent crowd, men, woman and children, surged, wave upon wave, and wended its way in tears and in deep anguish. And in the evening when the coffin was borne on a special- built palanquin buried in heaps of flowers and flower garlands- there were cart-loads the streets were strewn from the twon end of Baillie Cross Road up to the Lady Manning Bridge with flowers forming a fit funeral carpet; and viewed westwards from the point of

Kalladi- Uppodai. Shivapuranam and many other hymns were chanted by large groups of choristers.

It was a sight worth seeing. At the spot Kalladi-Uppodai where the corpse was to be consigned to mother earth, under an umbrageous Banian tree, the grave was dug and it stood gaping as it were to entomb the pinch of priceless dust. Dirges were sung by the dozen; vedic hymns were chanted, and the evening air was vibrant with the chantings and the songs. And when the body was lowered into the grave, the choristers sang the dirges so loudly that the sound, though solemn, seemed to rent the night air. On the full moon nights, Vipulananda used to sit at this very spot on the swelling dune and listen to Kulandavel's chanting of 'Thirumari Songs'. They were evenings that still linger in our hearts; and that can never be forgotten. They are events unforgettable unforgotten.

The simple yet noble gem of a song: "வெள்ளை நிறமல்லிகையோ"Was heard sung by on and all. The chart went up and up, and was wafted by the night air into the infinite void. The sounds resolved, coalesced, and appeared to convey a meaning- the immensity of existence. Vipulananda has meged into the infinte: And here is a very simple philosophic notion. விபுலாநந்தன் காலம் ஆனான்- Vipulananda has become TIME. 'Movement was my life, and my steps knew no bound.'

"கடவுளிடம் நீங்கள் விரும்பியதையெல்லாம் கேட்கலாம் ஆனால் நீங்கள் கேட்பதைவிட அவர்கொடுப்பது சிறந்ததாக இருக்கக்கூடும்."

2003 கனடாவில் நடைபெற்ற நினைவுவிழா விபுலம் மலருக்கும்

1969ஆம் ஆண்டு காரைதீவுவிபுலாநந்தர் சிலைநிறுவனக் குழுவினரால் வெளியிடப்பட்ட அடிகளார் படிவ மலர்

முத்தமிழ்வித்தகருக்குப் படிவம்அவசியமா? (பக்கம்-15)வைத்தியகலாநிதிமா.பரசுராமன் அவர்களால் எழுதப்பட்டதும்

ஆசிரியர் குறிப்பு (பக்கம்-4) நுலாசிரியர் எம். சற்குணம் B.A.(Hons)Cey. அவர்களால் எழுதப்பட்டதும்

மூன்று கட்டுரைகளின் மீள்பிரசுரம்.

# மயில்வாகனனின் மண்ணிலிருந்து

**"அண்ணா மலைநகர் அமிழ்துகு கொண்டலே
பண்ணார் கரந்தைத் தமிழ்பொழிற் குயிலே-என்
காரேறு மூதூர்க் களிநடமயிலே"**

எந்த இனத்தவர்களாயினும் அவர்கள் மொழி கலாசாரங்களில் பின்னடைவு ஏற்படும் போது அவற்றை நிவர்த்தி செய்யும் பொருட்டும் புதிய சிந்தனைகளை அந்த இனமக்களிடம் புகுத்தும் நோக்கத்துடன் ஆண்டவன் காலத்திற்கு காலம் சிலரை மானிடராக அவதரிக்க வைத்து அந்தப் பணியினை திறம்பட அந்தச் சமுதாயத்திற்கு வழங்கச் செய்திருக்கின்றான். அந்தவழியில் தான் மேலத்தேயத்தவரின் ஆக்கிரமிப்புகளால் இலங்கை, இந்தியா உட்பட பல கீழத்தேய நாடுகளில் அங்கு வாழ்ந்த மக்களின் மொழியில் கலாசாரத்தில் சமய அனுட்டானங்களில் மாற்றங்கள் ஏற்றபட்ட காலகட்டத்தில் அதனை தடுத்து நம்மொழி கலை கலா சாரத்தையும் சைவசமயத்தினையும் காப்பாற்றும் மிகப் பாரிய பொறுப்பினை கொடுத்து ஆண்டவனால் ஈழவழ நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கும் கிழக்கிலங்கையில் அமைந்துள்ள நெய்தலும் மருதமும் சார்ந்த இயற்கைவளம் பொருந்திய காரேறுமூதூர் என்ற பழம்பெரும் கிராமத்திலே கண்ணம்மை யாரின் வயிற்றிலே உருவாக்கப்பட்டு 1892 மார்ச்மாதம் 27ந்திகதிபடைக்கப்பட்ட தவப்புதல்வனே மயில்வாகனனாவார்.

கல்விகற்கும் வயதையடைந்த மயில்வாகனனார் காரைதீவின் அயல்க்கிராமமான கல்முனை லீஸ் பாடசாலையில் ஆரம்பக் கல்வியினைத் தொடர்ந்து பின்னர் மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரியில் எட்டாம் வகுப்பில் ஆரம்பித்து அங்கிருந்து லண்டன் கேம்பிரிஜ் பரீட்சையில் தேறி கணித விஞ்ஞான பட்டதாரியானார். தம்வயதினர்கள் விளையாட்டில் ஆர்வமாயிருந்த போதிலும் தான்மட்டும் கல்வியிலே கண்ணாயிருந்தார். தான்கடவுளை பிரார்த்திக்கும் போதெல்லாம் தன்நாட்டு மக்களுக்காக சேவை யாற்ற தனக்கு அருளவேண்டும் என்று வேண்டிக்கொள்வார்.

கிறிஸ்தவ பாடசாலையிலும், ஆங்கிலமொழியிலும் கல்விபயின்ற மயில்வாகனனார் தன் மொழியில் கொண்ட காதலால் அக்காலத்தில் வாழ்ந்த தமிழ் அறிஞர்களான காரைதீவு பாலையடி வாலவிக்னேஸ்வரர் அர்ச்சகராகவிருந்த வைத்திலிங்க தேசிகர் வித்துவசிரோமணி ச.பொன்னம்பலம் போன்றோரை நாடி தமிழ்மொழியியனைப் பயின்று கொண்டார்.

அதன் பயனாக 1916ஆம் ஆண்டு மதுரைத்தமிழ் சங்கம் நடத்திய பண்டிதர் பரீட்சையில் சித்தியடைந்த முதல் ஈழத்தமிழன் என்ற பெருமையினைக் கொண்ட அடிகளார் தொடர்ந்து 1931ம் ஆண்டு இந்தியாவின் தமிழ்நாட்டில் அண்ணாமலைப் பல்கலைக்களகத்தில் முதல் முதலாக ஆரம்பிக்கப்பட்ட தமிழ்த்துறைக்கு நியமிக்கப்பட்ட முதல் தமிழ்ப் பேராசிரியருமாவார். தமிழியல் ஆய்வுகளில் முதலில் ஒப்பியல் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தவர் விபுலாநந்த அடிகளேயாவார். இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் மற்றய இனமக்களைவிடக் கல்வியில்காட்டும் ஈடுபாட்டினை குறிப்பிட்டு தமிழர்களுக்கென்று தனியான பல்கலைக்கழகமொன்று அமையவேண்டுமெனவும் அதுவும் அப்பல்கலைக் கழகமானது யாழ்ப்பாணத்திலேயே அமையவேண்டும் என்று ஆதாரத்துடன் கூடிய பலதகவல்கள் நிரம்பிய அறிக்கை ஒன்றினை அரசிற்கு சமற்பித்து ஆலோசனை கூறியவர் என்பதனை நாம் மறந்துவிடக் கூடாது.

1924இல் வடமொழிப்படி பிரபோத சைதன்னியர் என்னும் சுவாமிவிபுலாநந்தர் என்ற திருப்பெயரை சுவாமி சிவாநந்தரால் ஞானஉபதேசம் செய்யப்பட்டு ஏற்றுக் கொண்டார். நாடுதிரும்பிய சுவாமிகள் இராமகிருஷ்ண பரமகம்சர் வழியில் சேவைசெய்யத் தொடங்கினார். தான்பிறந்த மண்ணிலே பெரிய கல்விக்கூட மொன்றினைத் தனது குருவின் பெயரால் நிறுவ முயன்ற அடிகளாருக்கு தனது ஊரவரின் பூரணஒத்துழைப்புக் கிடைக்காத காரணத்தால் அதனை மட்டக்களப்பு கல்லடியில் நிறுவி கிழக்கிலங்கையில் அன்று தொடக்கம் இன்றுவரை கல்விவளர்ச்சிக்கு வித்திட்டவரார். மட்டக்களப்பில் மட்டுமன்றி திருக்கோணமலை யாழ்ப்பாணம் நாவலப்பிட்டி போன்ற இலங்கையின் பல பகுதிகளில் கல்வி வளர்ச்சியின் முன்னேற்றத்தில் முதலாக நின்று செயல்பட்டதுடன் யுகமாற்றத்திற்கு காரணமாயிருந்த சுவாமிகள் ஒருயுக சந்தியாகி உலகத்தமிழர் மனதில் ஆழப்பதிந்து விட்டார் என்பதில் ஆச்சரியமில்லை.

தான் பிறந்த ஊராம் கரைதீவிற்கு வரும் போதெல்லாம் அங்குள்ள கடற்கரைக்கு அதிகாலை வேளையில் சென்று வங்கக்கடலின் அலை ஆர்ப்பரித்து கரைமண்ணில் நுரையை கக்கி அகலப் பரந்து செல்லும் அழகிய காட்சியினை ரசித்த வண்ணம் நடந்து செல்லும் சுவாமிகள் சிறிது தூரம் நடந்தபின்னர் அடிவானத்தினை தீப்பிளம்பாக்கி கடலிலே மிதந்து வரும் அந்த ஆதவனின் ஒளியில் தன்கண்களை நனைத்தவண்ணம் அமர்ந்திருந்து தியானிப்பது வழக்கம்.

என்னுடன் ஒரேபாடசாலையில் படித்த சுவாமிகளின் அக்காவின் மகனுடன் விளையாடு வதற்காக நான் வாரவிடுமுறைகளில் அவர்வீடு செல்லும் வேளைகளில் சுவாமிகள் தனது அக்கா வீட்டிற்கு வருகை தந்திருப்பார். அப்போது எங்களுக்கு திருக்குறள் மகாபாரதக்கதைகளுடன் பாரதியாரின் பாடல்களையும் படித்துக்காட்டுவார். சுவாமிகளின் தோற்றமும் அவர் என்னோடு கதைக்கும் அமைதியான அன்பான சுபாவமும் என்னை அவர் மேல் அளவு கடந்த பக்தியுடன் கூடிய பாசத்தினை ஏற்படுத்தியது.

அவர்மேல் கொண்ட பக்தியால் அவருடன் தனிமையாக உரையாட வேண்டும் என்னுகின்ற ஆசையின் உந்தலினால் சுவாமிகள் கடற்கரைக்குச் செல்வதை அறிந்த நான் ஒருநாள் அதிகாலையில் எழுந்து கடற்கரையில் போய் சுவாமிகளுக்காக காத்திருந்தேன். களங்கமற்ற அந்த உதயசூரியனின் ஒளியை மிஞ்சிய ஞானஒளியொன்று நடந்து வருவதைப்போல காவியுடையணிந்து என் மண்ணின் மைந்தன் கம்பீரமாக நடந்து வந்து கொண்டிருந்தார். பயபக்தியுடன் கைகளைக் கட்டிக்கொண்டு அமைதியாக நின்ற என்னைக் கண்டதும்

“இந்தவேளையில் இங்குஎன்ன செய்துகொண்டி ருக்கின்றாய்” என என்னைப்பார்த்துக் கேட்டார்.
அவரின் இனிமையான குரலில் இருந்து வந்த கேள்வியால் கூனிக்குறுகி நான் உங்களோடு கதைப்பதற்காகத்தான் நிற்கின்றேன் என்றேன்.

நான் நின்ற இடத்திலிருந்து சற்றுத் தூரம் வரை நடந்த சுவாமிகள் திரும்பி என்னைப் பார்த்து “என்ன கதைக்கப் போகின்றாய்” எனக் கேட்டார்.

நீங்கள் இமயமலைக்கு போய் வந்ததாக எங்கள் வீட்டில் சொல்கிறார்கள் எப்படி அங்கு சென்றீர்கள் எனக்கேட்டேன். நான் சிறுவனாக இருந்தபோதும் தான் இமயமலைக்கு சென்றதை மிகவும் பக்குவமாகவும் இனிமையாகவும் அடிகளார் அன்று என்னிடம் சொன்ன வார்த்தைகள் எனது உதிரத்துடன் கலந்து இன்றும் பசுமையாக நிறைந்து நிற்கின்றது. தேனினும் இனிய மொழி தமிழ் என்பார்களே அந்த இனிமையை சுவாமிகளின் பேச்சிலிருந்தே நான் பலதடவைகள் அதனை உருசித்திருக்கின்றேன்.

சுவாமிகள் பிறந்த மண்ணிலே நானும் பிறந்து அவர் குடித்த மண்ணின் தண்ணீரை நானும் குடித்ததால் எனது ஊரில் அவர்பெயர் நிலைத்துநிற்கவும் அடிகளார் காரைதீவில் பிறந்த மாமனிதர் என்பதனை உறுதி செய்யவும் அவருக்கு முதலில் சிலைநிறுவியது முதல் பெரியதொரு மணிமண்டபத் தினை அமைத்ததுவரை என்னால் ஆனபங்களிப்பினை பலகருத்து வேறுபாடுகளுக்கும் எதிர்ப்புகளுக்கும் மத்தியில் செய்துமுடித்துள்ள மனநிம்மதியில் வாழ்கின்றேன். அத்தோடு நான் சுவாமிவிபுலாநந்த அடிகளாரின் நினைவாக எதுசெய்ய முடிவெடுத்தாலும் என்னோடு பக்கதுணையாக நின்ற மறைந்த திரு.ம.சற்குணம் அவர்களின் திறமையினைப் பாராட்டாமல் இருக்கமுடியாது.

சுவாமிகள் தமிழ்பேசும் நல்லுலகத்திற்கு செய்திட்ட அளப்பரிய சேவையினை நினைவு கூரும் வகையில் கிழக்கிலங்கையில் சுமார் இருநூற்றுக்கு மேற்பட்ட ஊர்களில் அவரின் சாந்தமான ஒளிவீசும் கண்களையுடைய உருவஅமைப்பினை சிலையில் வடித்த புல்லுமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட பேராசிரியர் நல்லரெத்தினம் அவர்களின் திறமையினையும் சேவையினையும் நாம் என்றும் மறக்க முடியாது.

இவற்றிக்கு மேலாக இன்று கனடாநாட்டிலே அடிகளாரின் 56வது சிரார்த்ததினத்தில் விழா வெடுக்கும் சுவாமிவிபுலாநந்தா மன்றத்தினை பெரிதும் பாராட்டுகின்றேன்.

சுவாமிகளின் பிறந்தமண்ணான காரைதீவிலே பிறந்த பல அறிஞர்களும் பிரமுகர்களும் சுவாமியின் பெயரைச் சொல்லி பெருமைப்பட்டுக் கொள்ளுபவராகவே இருக்கின்றார்கள். ஆனால் இவர்களையெல்லாம் விடமேலாக சுவாமியின் பாதங்களைப் பின்பற்றி மட்டக்களப்பிலிருந்து மற்றுமொரு தமிழ்ப்பேராசிரியர் கண்டி கொழும்பு யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளிலேயுள்ள பல்கலைக்கழகங்களில் விரிவுரை யாளராக கடமையாற்றி மட்டக்களப்பின் பாரம்பரிய நாட்டுக் கூத்து கலை கலாசாரங்களை யாழ்மண்ணிலும் செய்து காட்டிய எனது உறவினருமான கலாநிதி இளையதம்பி

பாலசுந்தரத்தின் தலைமையில் என் மருமகன் திரு. அஜந்தா ஞானமுத்து அவர்களின் செயலாற்றலில் இயங்கும் இம்மன்றத்தின் நிருவாகசபை உறுப்பினர்களுக்கும் அதன் அங்கத்தவர்கள் மற்றும் இவ்விழாவிற்கு உறுதுணையாகவும் ஒத்தாசையாகவுமிருந்து செயல்பட்ட அனைவருக்கும் எனது அன்பான பாராட்டுதலைத்தெரிவித்து, சுவாமிகளின் பணியினை பின்பற்றி அவர் வழியில் தொடர்ந்து செயல்பட எல்லாம் வல்ல இறைவன் உங்கள் அனைவருக்கும் அருள்பாலிக்க வேண்டுமென கேட்டு எனது இதயபூர்வமான வாழ்த்துக்களை மயில்வாகனனின் மண்ணிலிருந்து தெரிவித்துக் கொள்கின்றேன்.

வைத்திய கலாநிதி மா.பரசுராமன்
(முன்னாள் காரைதீவு கிராமசபைத்தலைவரும்
கண்ணகியம்மன் ஆலய பிரதம வண்ணக்கரும்
சுவாமிவிபுலாநந்தர் ஞாபகார்த்தப்பணிமன்ற ஸ்தாபகரும்)

"இந்தஉலகிற்கு நீஒரு தனிமனிதனாக இருக்கலாம். ஆனால் யாரோ ஒருவருக்கு நீயே உலகமாக இருக்கும்"

# ஆசிரியர்குறிப்பு

## அமரர் ம.சற்குணம்

"புண்ணிய பூமியாம் பாரதத்தின் மாதவமுனிவர் ஸ்ரீஇராம கிருஷ்ணதேவரின் புனிதபரம்பரையில் விளங்கிய ஈழந்தந்த முதற்றமிழர் சுவாமிவிபுலாநந்த அடிகளாவார். ஈழம் முதல் இமயம் வரை இன்றமிழின் இசைகண்ட தமிழ்முனிவர்,முத்தமிழும் கற்றுத் துறைபோய முதுபெரும் புலவர். ஊனையும், உயிரையும் உருக்கவல்ல பக்திரசத் தேனொழுகும் பாக்களையும் கற்பனை பொங்கும் கவிதைகளையும் வளமுறவடித்துத் தந்த வரகவி. மறைந்து கிடந்த தமிழிசையினையும் இம்மண்ணுலகுக்கு கொடுத்து இன்புறக்காட்டிய இன்னிசைப்புலவர். உள்ளத்தே பொங்கியெழும் உயர்ந்த கருத்துக்களையும், நீதி நெறிகளையும், தெய்வீக ஞானத்தையும் கேட்பார்ப் பிணிக்கவும் கேளார் வேட்பவும் வாரிவளங்கிய வள்ளலார். மடைகடந்த வெள்ளமெனச் சொற் பெருக்கினைப் பாய்ச்சி ஞாலம் விரைந்து தொழில் கேட்கச் செய்த, நாவலர். செந்தமிழ், சிங்களம், வடமொழி,வங்கம்,ஆங்கிலம்,இலத்தீன்,யவனம், அரபி முதலிய பன்மொழிகளையும் பரக்கக் கற்ற பண்டிதர். கணிதம் கற்ற கலைஞர். இம்மானிலத்தை இயக்கி நிற்கின்ற எழுத்தாளர்."

என்றெல்லாம் அறிஞர்களாற் போற்றப்படும் பெருமையைப் பெற்ற அடிகளாருக்கு அவர்பிறந்த மண்ணில் வதியும் நாங்கள் அவர்பெயரில் சில ஞாபகச்சின்னங்களை நிறுவி அவர்புகழைப் பறை சாற்றுதல் நம்தலையாய கடனன்றோ. யாழ்ப் பாணத்தில் வணணை வைத்தீஸ்வர வித்தியாலயமும், திருக்கோணமலை இந்துக்கல்லூரியும், மட்டக்களப்பில் சிவாநந்தா, சாரதா வித்தியாலயம் முதலிய பாடசாலைகளும் அவரை என்றும் நினைவு கூரும் தன்மைவாய்ந்தவை. அத்துடன் சுவாமிஜீ நிறுவிய புலவர்மன்றங்களும், தமிழ்கழகங்களும், அவரிடம் பாடங்கேட்டு பெரும்பதவிவகிக்கும் பெரும் அறிஞர்களும் சுவாமியை மறக்கச்செய்யா சின்னங்களாகும். மட்டக்களப்பிலே தமிழ்க்கலா மன்றத்தார் (14.1.63) சிலைநிறுவி கௌரவித்தார்கள். கல்லடி உப்போடையில் மணிமண்டபம் (6-9-63) கட்டித் தம்கடனை செலுத்தினார்கள். இவ்வாறே பலவேறு கிராமங்கள் தோறும் அடிகளார் பேரில் மன்றங்களையும், நூல்நிலையங்களையும் தொடங்கி

அவர்பிறந்த பதியிலும் சில ஞாபகச்சின்னங்களை அமைக்க முற்பட்ட பெரியார்கள் விபுலாநந்த பொதுநூல் நிலையத்தை தொடங்கினார்கள். (1958ல் தொடங்கப் பட்டபோதும் அதன் புதுக்கட்டிடம் 14.4.69ல் உள்ளூராட்சி அமைச்சர் கௌரவ ஆர்.பிரேமதாஸ அவர்களால் திறந்துவைக்கப்பட்டது) அதனைத் தொடர்ந்து அடிகளார் பேரில் பொதுவிளையாட்டுத் திடலும் திறந்து வைக்கப்பட்டது.

இவ்வாறு நாள்தோறும் அடிகளாரிரை நினைவு கூரும் வகையில் ஞாபகச்சின்னங்களைத் திறந்து வைக்க நேரிட்டபோதே அடிகளாரின் முழுஉருவச் சிலையினையும் திறந்து வைக்கும் நோக்கம் ஏற்பட்டு அதேசமயம் ஒருசிறப்பு மலரையும் வெளியிட வேண்டுமென்ற எண்ணமும் உதயமாயிற்று. பல்வேறு அறிஞர்கள் மத்தியில், பழுத்தஞானம் படைத்தவர் களிடையே மலர்க்குழுத்தலைவர், வைத்திய கலாநிதி மா. பரசுராமன் அவர்கள் என்னை மலர் ஆசிரியராகத் தேர்ந்தெடுத்துச் சில பொறுப்புக்களை என்னிடம் சமர்ப்பித்தார்கள். அடிகளோடு கூடவே இருந்து உறவாடியவர்களும் (உறவினர்களும்) சகமாணவர் களும், சீடர்களும் மிக்கவதியும் இம் மண்ணிலே அடிகளாருக்கு மலர் வெளியிடுவதில் என்னை ஆசிரியராக ஏற்றுக் கொண்டது எத்துணையும் பொருத்தமில்லை என்றே நினைத்தேன். எனினும் ஏற்றுக் கொண்ட கடமையைப் பெரிதாக மதித்து அடிகளாரின் உறவினர்களிடமும், அடிகளாரை நன்கு அறிந்தவர் களிடமும் உதவி நாடினேன். என்மதிப் பிற்குரிய ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள், சகநண்பர்கள் ஆகியோரிடம் கட்டுரைகள், கவிதைகள் கேட்டு எழுதினேன். எதிர்பார்த்த அளவிற்கு மேலாக ஆதரவுகிடைத்தன.

அடிகளார் இறந்து (1947-1969) ஏறக்குறைய 22 ஆண்டுகள் கடந்து விட்டபடியால் அடிகளார்பற்றிய கட்டுரைகளைத் தரம்பிரிக்கும் போது பல கஷ்டங்கள் ஏற்பட்டன. அடிகளார் சாமித்தம்பி விதானையாருக்கும், கண்ணம்மையாருக்கும் புத்திரனாக மட்டக்களப்பு காரைதீவிலே 1892-3-29ல் பிறந்தார். பண்டிதனார் லண்டன் B.Sc.,பட்டம் பெற்றார். போர் வீரரானார், பிரபோதசைதன்னியர் என்ற பேரைப்பெற்றார் என்ப தெல்லாம் யாவரும் அறிந்ததே. ஆகவே அவ்வகைகைக் கட்டுரைகளுக்கு முக்கிய இடம் கொடுக்கப்படவில்லை, அடிகளாரின் சமூகத்தொண்டு தேசியக்கல்வி முறை, ஒப்பியல் நோக்கு, தமிழ்த்துறை முதற்பேராசிரியர் போன்ற புதுமுறையான பார்வைகளுக்கு (New approach) முக்கியஇடம் கொடுத்தேன். மதங்க சூளாமணி, கங்கையில்விடுத்தஓலை போன்ற வற்றின் விமர்சனங்களுக்கும் சிறப்பிடம் அளித்தேன்.

இந்தமலருக்கு இன்னமொரு சிறப்புண்டு. என் வேண்டுகோளுக்கிணங்க அடிகளாரைப்பற்றிய கட்டுரை களை அனுப்பியதுடன், மேலும் சில பெரியார்கள் இலக்கிய பணியில் ஈடுபட்டு இலக்கிய சம்பந்தமான கட்டுரைகளையும் அனுப்பியிருந்தாகள். அக்கட்டுரை களும் இம்மலரில் இடம்பெறுவது மலருக்கு பெருமையளிக்கும் என்றே நம்புகின்றேன். பழந்தமிழ் செய்யுள் மரபு, சிந்தனைக்கோர் சிலம்பு. சுந்தரமூர்த்தி சுவாமிகளின் இறையன்பு, பாரதி செய்த புரட்சி, ஆசியஜோதி என்னும் கட்டுரைகளை நீங்கள் உள்ளே நுளையும் போது கண்டின்புறலாம். அதற்காக இலக்கிய பூங்கா என்ற சோலையை அமைத்து அதன் நிழலிலே பதிய வைத்திருக்கின்றேன். இம்மலரைப் பொறுத்தளவில் நன்றி சொல்வதானால், நான் கட்டுரை களைக்கேட்டு எழுதிய போது மனம் கோணாது நேரம், காலம், சிரமம் பாராது உடனுக்குடன் அனுப்பி வைத்தவர்களை முன்னதாகக் குறிப்பிடவேண்டும். கட்டுரைகளை அனுப்பி வைத்ததுடன் மட்டுமல்லாது, நிறைந்த ஆலோசனை களைக் கூறி வழிகாட்டி வைத்ததுடன் பல பெரியார்களின் தொடர்புகளையும் ஏற்படுத்தி வைத்தார்கள். இவ்வகையில் திரு.க. ஆறுமுகம் தலைமைஆசிரியர் அவர்கள், தேசிகமணி அருணா சலதேசிகர் அவர்கள், கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்கள், திரு.ச.தனஞ்சயராசசிங்கம் அவர்கள் சிறப்பாக குறிப்பிடத்தக்கவர்கள். மேலும் இம்மலருக்காக ஆசிச்செய்திகள் கேட்டு எழுதியபோது பெரியார்கள் மனமுவந்தளித்தார்கள். அன்னார்கட்கும் என் உளம் கனிந்த நன்றிகள். இம்மலரில் இடம்பெறும் அடியார்களின் நிழற்படங்களையும், அடிகளாரின் தங்கைமார், மருகர் போன்றோர் படங்களையெல்லாம் அடிகளாரின் உறவினர்களே கொடுத்துதவினார்கள். நான் என்நேரம் சென்று கேட்டாலும் எடுத்துச் செல்லும் உரிமை அளித்தவர் அடிகளாரின் மருகரும் என் ஆசிரியருமான திருவாளர். பூ.சுந்தரம்பிள்ளை ஆசிரியர் அவர்களே. “சிந்தையில் தெளிவுண்டானால் வாக்கினில் ஒளியுண்டாகும்.” ஏன்று பாரதி கூறியது போல ஆசிரியர் அவர்கள் என்னிடம் கூறிய கருத்துக்கள், மறைந்து கிடந்த விடயங்கள் யாவும் மறக்கப்பாலன. எனவே இந்தவகையில் அவருக்கு எனது மனமார்ந்த நன்றியினைச் செலுத்திக் கொள்கின்றேன். அடிகளாரின் மருமக்களில் மேலும் நன்றிகளைப் பெற்றுக் கொள்ளத்தக்கவர்கள் திருமதி. கோமேதகவல்லி செல்லத்துரை ஆசிரியை

அவர்களும் திருமதி. பத்மாவதி பொன்னம்பலம் அவர்களுமே. ஆடிகளாரைப்பற்றி வெளியிலே வெளிவராத தடயங்கள் பலவற்றை கையளித்ததுடன் அடிகள் கையெழுத்தில் அமைந்த தமிழ், ஆங்கிலக் கடிதங்களையும் ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் கையளித்தனர். போகபூமி, The House of God என்ற கட்டுரைகளை அடிகளார் கையெழுத்துப் பிரதிகளாகவே திரு.அ.மாணிக்கவாசகர் ஆசிரியர் அவர்கள் கொடுத்து உதவினார்கள். இடமின்மையால் இக்கட்டுரைகள் இரண்டும் இம்மலரில் இடம்பெறவில்லை. எனவே எனக்குத் தேவையானபோது பக்கபலமாக இருந்து இம்மலர் சிறப்பாகவெளிவர உதவிய மேற்குறிப்பிட்ட யாவருக்கும் என்நன்றிகள் உரித்து.

இம்மலரை உங்கள் கரங்களில் மலரவைப்பதில் ஏற்பட்ட தடைகள் பல. அவற்றிலொன்ற நிதிநிலமைத் தடை. அத்தடையினைத் தாண்டப் பலரிடம் உதவிகோரினோம். வர்த்தக ஸ்தாபனங்களில் விளம்ப ரங்கள் மூலம்சிறு உதவி பெற்றோம். மேலும் சில பெரியார்கள் அன்பளிப்பாகவும் உதவினார்கள். அவர்கள் யாபேருக்கும் என் நன்றிகள். விளம்பரம் சேகரிப்பதில் எனக்கு பக்கபலமாக உழைத்தவர்கள் யாபேரும் என்நண்பர்களே, அவர்கள் மெய்வருத்தம்பாராது கண் துஞ்சாது, பசிநோக்காது உழைத்தவர்கள். மட்டக்களப்பு, அக்கரைப்பற்று, கல்முனை, சாய்ந்தமருது, யாழ்ப்பாணம் கொழும்பு போன்ற இடங்களில் இருந்தெல்லாம் விளம்பரம் சேர்த்து அனுப்பிவைத்தார்கள். அவர்களுடன் என்னோடு இன்னொரு வகையில் உழைத்தவர்களும் உண்டு. பெரியார்கள், அறிஞர்கள் அவ்வப்போது கட்டுரைகளையும், கவிதைகளையும் அனுப்பி வைத்த போது முழுவதையும் காலாகாலத்தில் தட்டச்சுசெய்து கொள்ள என்னுடன் பக்கபலமாக உழைத்தவர்களும் என்நண்பர்களே. இவர்கள் யாபேருக்கும் என் உளங்கனிந்த நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றேன்.

இம்மலர் வளர்ச்சியில் கருத்தூன்றியிருந்த பெரியார்களை எண்ணும்போது மலர்க்குழுத் தலைவர், வைத்தியகலாநிதி மா.பரசுராமன் அவர்களுக்கு இணையாக பிறரைக் காண்பதரிது என்றுதான் கூற வேண்டும். அவர் இன்னும் பல்லாண்டுகள்வாழ்ந்து பணிபுரிய இன்னருள் கிட்டுவதாக. அடுத்தபடியாக நன்றிகூற இடம் பெறுபவர்கள் மலர்க்குழு உறுப் பினர்கள் திரு.க.ஆறுமுகம் தலைமை ஆசிரியர், திரு.சே.பொன்னம்பலம் தலைமை ஆசிரியர், திரு.சி. அருள்சிவம், திரு.இரா.கிருஷ்ணப்பிள்ளை ஆசிரியர், திரு.இ.வேல்நாயகம், திரு.பூ.சுந்தரம்பிள்ளை ஆசிரியர் அவர்களாவர். இவர்களே மலரைச்சிறப்பாக வெளியிட உறுதியும் உரனும் அளித்தவர்கள். அவ் வப்போது சிறந்த ஆலோசனைகளையும், அறிவுரை களையும் அளித்துஇம்மலர் வெளிவருவதில் சிறந்த பங்கெடுத்துக் கொண்டார்கள். எனவே மேற் குறிப்பிட்டுள்ள பெரியார்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றிகள். இப்பெரியார்கள் இதுபோன்ற தமிழ் பணிகளை மென்மேலும் புரியத் தமிழ்த்தாயின் இன்னருள் கிட்டுவதாக என வேண்டி அமைகின்றேன்.

இம்மலர் கூடியவிரைவில் வெளிவர அயராது உழைத்தவர் சுதந்திரன்அச்சகத்தின் அதிபர் திரு.க.உமாபதிசிவம் அவர்கள். கூடிய விரைவில் இவ்வளவு அழகாக மலர் வெளியிடுவதில் அவர்களுக்கு அவர்களே நிகர். நாங்கள் அவர்களை உதவி நாடிய போதும் இன்முகம் தந்து அடிகளாருக்கு தாமும் ஏதாவது பணிபுரிந்தே ஆகவேண்டும் என்ற எண்ணத்தால் இம்மலரை இவ்வளவு அழகாக முடித்துக் கொடுத்தார்கள். அச்சகத்தலைவரோடு, அவ்வச்சகத்தின் ஊழியர் யாபேருக்கும் நன்றிகள்.

நன்றி கூறுவதில் மறந்தவர்கள், விடுபட்டவர்கள் யாபேருக்கும் நன்றிகளை இறுதியாக வைக்கின்றேன். மனங் கோணாது ஏற்று “குணம் நாடி குற்றம் நாடி அவற்றுள் மிகை நாடி மிக்க கொளல்” ஆவார்களாக.

# முத்தமிழ்வித்தகருக்குப்படிவம் அவசியமா?

படித்தோர்மத்தியிலும் பாமரர் மத்தியிலும் இயல்பாய் எழுந்த கேள்வியிது. அடிகளார் "தோன்றிற் புகழுடன் தோன்றுக" என்ற வள்ளுவன் வாக்கிற்கு அமைவாகத் தோன்றி மறைந்த காரேறு மூதூரின் அணையா ஜோதி, ஈழக்கரிகாலன் இளங்கோவின் மறு அவதாரம். ஏழிசைக்கும் இலக்கணம் அமைத்த அழியாத அமரன். தமிழ்கூறும் நல்லுலகம் போற்றிப் புகழும் இமைய முத்திரை. இப்படியெல்லாம் புகழப்படுகின்ற இப் பெரியார்க்குப் படிவம்அவசியமா? ஆம். அவசியமே என்றபதிலைஅளித்து,விடயத்திற்கு வரவிரும்புகின்றேன்.

1892 கரவருடம் பங்குனித் திங்கள் இருபத்தேழாம்நாள் கிழக்கிலங்கையின் தென்னகத்தே 27மைல் தொலைவுக்கப்பால் காரேறுமூதூர்ப் (காரைதீவு) பழம்பதியிலே நெய்தலும் மருதமும் சான்ற இயற்கை வளம்பொருந்திய மண்ணிலே பத்தினித் தெய்வமாம் கண்ணகியைக் குலதெய்வ மாகவும் அவ்வம்மையின் பெயரைத் தாங்கிய வருமாகிய கண்ணகியம்மையின் வயிற்றிலே இருந் துதித்தமகவே இந்தவித்தகவிபுலாநந்த நாமம் கொண் டோனாகும். தந்தையார் இன்றும் கண்ணகியம்மன் ஆலயத்தை பரிபாலித்து வருகின்ற விஜயராஜன் குடியார் என்று சொல்லப்படுகின்ற வம்சத்தைச் சேர்ந்தவராகிய சாமித்தம்பி (பொலயானை-அக்கால பொலிஸ் தலைமைக்காரர்). இவர்சுவாமிக்கு இளமை யிலிட்ட பிள்ளைத்திருநாமம் மயில்வாகனனாகும். மயில்வாகனன் இளமையிலிருந்து ஓர்வித்தகனாக வரக்கூடிய ஆற்றல் மிக்கவனாக இருந்தார் இன்றும் சுவாமியுடன் அண்டிப்பழகிய, கூடிவிளையாடிய பெரியார்கள் கூறுகின்றார்கள். சுவாமிஜீயின் வாழ்க்கை வரலாறுகளைப்பற்றி அநேக பெரியார்கள் இப்படிவ மலரிலே கட்டுரைகள் தீட்டி யுள்ளதனால் நான் அவ்வாராய்ச்சிக்கு செல்வதை விட்டுவிடுகிறேன்.

அடிகளாரைப்பற்றியே தெரியாதவர்கள் அடிகளாரைப்பற்றிய ஆராய்ச்சிக்கட்டுரைகளும், நூல் களும் எழுதி அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள் என்ற புகழைத் தேடிக்கொள்ள விரும்புகின்றனர் இந்த நேரத்திலே இப்படியான முயற்சி. இப்படியான கீழ்தர எண்ணம் படைத்தவர்கட்கு ஓர் முற்றுப்புள்ளி வைக்கும் என்பதே எனது நம்பிக்கையாகும். அடிகள் தோன்றி எழுபத்தேழு ஆண்டுகள் பறந்துவிட்டன. மறைந்தும் இருபத்திரண்ட ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆயினும் இவ்வளவு காலத்துக்கு பின்னர் பிறந்த மண்ணிலே இவ்வித ஞாபகச்சின்னம் எழுப்பு வதையிட்ட வெளியார் தப்பவிப்பிராயம் கொள்ள நேரிடலாம். அதற்கு என் சிற்றறிவுக்கு எட்டியதைப் பகிரங்கமாக வெளியிட விரும்புகின்றேன்.

சுவாமிஜீயின் உருத்தவர்கள் இற்றைவரை சுவாமியை ஒருபொது மகனாகக் கருதாது தாங்களே சுவாமிகளின் ஆஸ்திகளைப் பரிபாலிக்க வேண்டும், மற்றவர்கள் பங்கு கொள்ளக் கூடாது என்ற மனப்பான்மையுடன் இருப்பதனால் சொந்த ஊரில் ஞாபகச்சின்னங்கள் நிறுவுவதில் தாமதம் உண்டாயிற்று. சுவாமிஜீ பிறந்த இல்லமெனப் போற்றப்படுகின்ற இடம் 1939ஆம் ஆண்டளவில் இராமகிருஷ்ண சங்கத்திற்குப் பொறுப்படைக்கப் பட்டிருப்பதாக ஈழத்துத் துறவியும், சுவாமிஜீயின் சீடரும் எமது காரைதீவிலே பிறந்து அண்மையில் மறைந்த இரண்டாவது இராமகிருஷ்ண சங்கத்துறவியான நடராஜானந்தாஜீயும் வேறுபல சுவாமியின் நெருங்கியதொடர்பு கொண்ட பெரியார்களும் என்னிடம் கூறியுள்ளனர். அத்துடன் அண்மையில் கூட சுவாமிஜீயின் மூத்த மருமகனாகிய தலைமையாசிரியர் திரு.பூ.சுந்தரம்பிள்ளையவர்களும் நூற்றுக்குநூறு உண்மையென்றே கூறியுள்ளார்கள். அப்படியிருந்தும் பொதுவுடமையான இச்சொத்தை ஏனோதங்களின் சொத் தாகப் பாவிக்கின்றனர் என்பதுவிளங்காத புதிராகவே இருக்கின்றது.

அண்மையில் (14.4.1969) உள்ளூராட்சி அமைச்சர் கௌரவ ஆர்.பிரேமதாசா அவர்களால் திறந்து வைக்கப்பட்ட மத்திய நூலகத்தை கூட இக்குறிப்பிடும் சுவாமிஜீயின் பிறப்புச் சூழலில் அமைக்கவும் அதன்முன்றலில் உருவச் சிலையை நிறுவவும் அடியேனும், எனது சகஊறுப்பினர்களும் சுவாமியின் மைத்துனரான திரு. விஸவலிங்கம் தோம்புதோர் அவர்களிடம் தூது சென்று கேட்டபோது இதனைப் பரிபாலிக்க நாங்களும் எங்களது ஆண்சந்ததியினரும் இருக்கின்றோம் நீங்கள் வேறு இடத்தில் உங்கள் பணியைச் செய்யுங்கள் என்று கூறியதை இன்றும் மறந்துவிடவில்லை. இருந்தும் எடுத்துக் கொண்ட முயற்சியை நிறைவேற்ற வேண்டுமென்ற ஆசைப் பாட்டினால் 1962ஆம் ஆண்டிலிருந்து எடுத்துக் கொண்ட அயராத முயற்சியின் பயனாய் இன்று எல்லா மக்களுக்கும் பொது இடமாகிய கிராமாட்சி மன்றத்தில் நிறுவியுள்ள சுவாமி விபுலாநந்தர் மத்திய நூலக

முன்றலில் சுவாமிஜீயின் படிவத்தை நிறுவுவதில் பெருமையும், அகமகிழ்வும் கொள்கின்றேன். ஆயினும் இப்பணியைப் போற்றுவார் போற்றட்டும் அல்லது தூற்றுவார் தூற்றட்டும் அதை யான் இம்மியளவும் எனதுசிந்தனைக்கு எடுக்கவில்லை.

இச்சிலையை வடித்து தந்த புல்லுமலைச் சிற்பி திரு.ப.நல்லரெத்தினம் ஆசிரியர் அவர்கள் கலையை விலைபேசியோ அன்றேல் தனது புகழ் ஓங்க வேண்டு மென்றோ எண்ணிச் செய்யாது, தானும் கிழக்கு மாகாணத்தில் பிறந்தவன், பிறந்த மண்ணுக்கு கடமைப்பட்டவன் என்ற பேரார்வ மிகுதியால் மெய்வருத்தம் பாராது, கண்துஞ்சாது இப்பணியை முடித்துத் தந்தமைக்காக நன்றி பகரக் கடமைப் பட்டவனாகின்றேன். அத்துடன் படிவம் திறக்கின்ற இந்நன்நாளிலே ஒருமலரையும் வெளியிட வேண்டுமென்ற பேரார்வம் என்மனதில் உதித்தது. இதனைச்செயற்படுத்த ஒருசெயற்குழுவை நியமித்தேன் அதன் தலைவராக அடியேனும், மலர் ஆசிரியராக திரு.ம.சற்குணம் பீ.ஏ(ஆர்னஸ்) அவர்களையும் நியமித்தேன். அவரது அயராத முயற்சியால் இற்றைவரை மக்கள்உணராத பலஉண்மை களையும், சுவாமிஜீயின் புகைப்படங்களையும், ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் அவரது சுற்றத்தார் களிடமிருந்தும் பல அறிஞர்களிடமிருந்தும், சுவாமியின் சீடர்களாகிய சைவப்புலவர் க.அருணாசல தேசிகர், தலைமை யாசிரியர் திரு.க.ஆறுமுகம் போன்ற பெரியார் களிடமிருந்தும் பெற்று இம்மலரில் பிரசுரிக்க முடிந்தது. இன்னும் சிலவருடகாலம் சென்றிருந்தால் இவை செல்லரித்தோ அல்லது சுவாமியை யார்என்று தெரியாத ஒருவரோ அல்லது பிறரோ இவற்றைப் பெற்று ஓர் ஆராய்ச்சி நூலாக அல்லது பாடசாலைப் புத்தகமாக பெளியிட்டுத் தங்கள் விலாசத்தை பிரபல்யம் அடையச் செய்திருப்பார்கள். இத்தோடு நாம் நின்றுவிடவில்லை சுவாமிஜீயின் அரும் பொக்கிஷங் களாகிய “யாழ்நூல்” “மதங்கசூளாமணி” போன்ற நூல்களை மறுபிரசுரம் செய்யநடவடிக்கை மேற்கொண்டு வருகின்றோம்.

மேலும் இப்படியான பணிகளில் ஈடுபடும் போது முக்கியமாகப்பணம்தான் வேண்டும், இதற்காக ஓர் இலவச சினிமா படக்காட்சியைச் சிலோன் தியேட்டர்ஸ்ஸ்தாபனம் கடந்த ஆண்டில் தந்துதவியது. பலவியா பார ஸ்தாபனங்கள் விளம்பரங்கள் மூலம் பண உதவி புரிந்தன. நல்லெண்ணம் படைத்த பல பெரியார்களும் இப்பணிக்கு உதவிபுரிந்தார்கள். இவர்கள் அனைவருக்கும் இம்மலர் மூலம் எனது உள்ளம் கனிந்த நன்றி என்ற மூன்றெழுத்தைதான் என்னால் கூறமுடீயுமே தவர வேறோன்றுமே செய்யமுடியாது. கிழக்கிலங்கையில் கல்லடி உப்போடையில் சிவாநந்தா வித்தியாலயமும், விபுலாநந்த மணிமண்டபமும், காரைதீவில் மத்திய நூலகமும் ஏனைய சுவாமிஜீயால் அமைக்கப்பட்ட இராமகிருஷ்ணசங்கப் பாடசாலைகளும் இருக்கும் வரை அடிகளார் மட்டக்களப்பான், அதிலும் காரேறு மூதூரில் பிறந்தவன் என்ற எண்ணத்தை, அழியா உண்மையை எவராலும் மறைக்க முடியாதென்று ஆணித்தரமாகக் கூறிவைக்க விரும்புகின்றேன். கடைசியாக இப்பணி சிறப்புற உதவிய சகலருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிக் கடனும், ஆண்டவன் ஆசியும் கிடைப்பதாக என்று வாழ்த்துகின்றேன்.

# விபுலாநந்தரின் வாரிசு ஸ்ரீமத்சுவாமி நடராஜானந்தஜீ அவர்கள்

க.ஆனந்தமகேஷ்வரன் (டென்மார்க்)
முன்னாள் விவசாய அதிகாரி

கிழக்கிலங்கை இலங்கையின் பொருளா தாரத்தின் முதுகெலும்பு என்று கூறப்பட்ட காலம் ஒன்று உண்டு. விவசாயம், மீன்பிடி, உல்லாசப் பயண த்துறை மற்றும் சிறு கைத்தொழில்கள் இங்கு சிறப்பாக நடைபெற்று மக்கள் தன்னிறைவு பெற்று வாழ்ந்து வந்துள்ளனர். ஆனால், அக்காலத்தில் கிழக்கில் கல்வி வளர்ச்சியானது மிகக் குன்றி யதாகவே இருந்து வந்துள்ளது. 1892இல் விபுலாநந்த சுவாமிகளின் அவதாரம் கிழக்கின் காரைதீவில் இடம் பெற்ற பின்னர் கல்வி வளர்ச்சியும் அங்கு சிறிதாக வளம் பெறத் தொடங்கியது.

சுவாமிகளின் சமய, சமரச, கலாசார பணிகளுடன் கல்விப் பணியானது தமிழ்பேசும் நல்லுலகமெங்கும் சிறப்புற எடுத்துச் செல்லப்பட்டன. சுவாமிகளின் கல்விப்பணியால் மட்டக்களப்பில் பல கல்விக்கூடங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அதன் காரணமாக பலஏழை எளியமக்கள் இலகுவில் கல்வியைப் பெறக்கூடிய வசதியினைப் பெற்றார்கள். இதன் காரணமாகத்தான் கிழக்கில் தமிழ் பண்டிதர்கள், புலவர்கள் உட்பட பலகல்விமான்கள் உருவானார்கள் என்றால் மிகையாகாது.

1947இல் இறைவனடியடைந்த சுவாமிகளின் பணிகள் தொடர்வதற்கு யாருமின்றி கிழக்குமக்கள் தவிர்த்துக் கொண்டிருந்த போது அவர்பிறந்த காரைதீவிலே 1903ஆம் ஆண்டு நவம்பர்மாதம் இருபத் தொன்பதாம் திகதியன்று கதிர்காமத்தம்பி விதானை யாருக்கும், மயிலம்மாவிற்கும் பிறந்தவர்தான் நடராஜாநந்தாஜீ அவர்கள். சிதம்பரப்பிள்ளை என்ற பிள் ளைத்திருநாமம் கொண்டிருந்தாலும் இவர் சீனிவாசகம் என்றே எல்லாராலும் அன்புடன் அழைக் கப்பட்டார். கதிர்காமத்தம்பி மயிலம்மா தம்பதி யினருக்கு அழகரெத்தினம் மூத்தமகன் (தபால்அதிபராக கடமையாற்றியவர்).இரண்டாவதுமகன் (தம்பிப்பிள்ளை) சீனிவாசகம் எனஅழைக்கப்பட்டவர்.மூன்றாவதும் நான்காவதும் அழகம்மா, தெய்வானைப்பிள்ளை என்னும் இரண்டு சகோதரிகளும் ஐந்தாவதும் கடைசிப்பிள்ளையுமான சிவசிதம்பரம் அவர்களும் ஆவர். சிவசிதம்பரம் அவர்கள் டாக்டராக பணிபுரிந்தவர் டாக்டர் மா.பரசுராமன் அவர்களின் மனைவியின் மூத்த சகோதரியான பரமேஸ்வரி அவர்களை மணமுடித்து வாழ்ந்தவர். நடராஜாநந்தஜீ சுவாமிகளின் சகோதரிகளில் ஒருவர் தனது இளவயதிலேயே காலமாகிவிட்டார்.

ஆரம்பக்கல்வியை விபுலாநந்தர் போலவே காரைதீவு, கல்முனை, மட்டக்களப்பில் அமைந்திருந்த பாடசாலைகளில் பயின்று பல்கலைக்கழகப் பட்டப்படிப்பிலும் சித்தியடைந்தார். கேம்பிறிஜ் சீனியர், லண்டன் மெட்றிக்குலேசன் பரீட்சைகளில் சித்தியடைந்ததுடன், பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியராகவும் கல்வியில்தன்சாதனைகளை நிலைநாட்டினார். தான் கற்ற கல்வி தனதுசமூகத்தை சென்றடைவதற்காக விபுலாநந்தரின் பாணியில் ஆசிரியராகத் தன்தொண்டினை ஆரம்பித்தார். திருமலைஇந்துக்கல்லூரி, யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரி, மட்டக்களப்பு சிவாநந்தாவித்தியாலயம் போன்ற வித்தியாலயங்களில் கல்விப்பணிகளில் சுவாமிகளின் சுவடுகளை பின்பற்றினார்.

கல்விப்பணியைத் தொடர்ந்து சமூகசேவை களிலும் குறிப்பாக ஆதரவற்ற குழந்தைகளில் அன்பும் பரிவும்காட்டிய சீனிவாசகம் தன்வாழ்வில் பெரும் பகுதியினை ஏழை எளிய மக்களுடன் பழகி அவர்கள் துன்பங்களை கழைவதிலேயே செலவிட்டார். வேளாள குலத்தில் பிறந்த சீனிவாசகம் கிழக்கின் செல்வச்செளிப்பிற்கு உந்துகோலாக விளங்கும் விவசாயத்திலும் தன்காலைப்பதித்தார். ஆசிரியதொழில் இருந்து விவசாய நீர்ப்பாசனப்பகுதியில் உதவிப் பொறியிய லாளராக பதவிபெற்றார்.

திருமண வாழ்வில் ஈடுபடவிரும்பாது தனது 35 வயதில் சீனிவாசகம் அவர்கள் விபுலாநந்தர் பால் அதிகம் கவரப்பட்டார். அதனால் அவருடன் இணைந்து செயல்படத் தொடங்கினார். சுவாமிகளின் அறிவுரை களைக் கேட்பதிலும் அவர் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதிலும் தன்வாழ்க்கை போக்கினை மாற்றத் தொடங்கினார். விபுலாநந்தசுவாமிகள் கொழும்பில் நோயுற்றிருந்த போது சுவாமிகளுக்கு அருகிலிருந்து அவரைப் பராமரித்த சேவகனாவார். மேலும் விபுலாநந்தர் றொசல்லவூட்ஸ் தோட்டத் தில்லிருந்த போது யாழ்நூல் ஆக்கத்திற்கு தன்னாலான ஒத்துழைப்புக்களை வழங்கினார். அதன் பிரதிபலிப்பாக 1935இல் தனது 37வது வயதில் தான் வகித்த அரசபதவிகளைத் துறந்து “நிர்வேத சைதன்யர்’ எனும் பிரமச்சரிய நாமத்தோடு துறவறம் பூண்டு இறைதொண்டுடன் மக்கள் தொண்டிலும் ஈடுபடலானார். அதனால் இந்தியாவிலிருந்த இராமகிருஷ்ணமிசன்களில் சேர்ந்து அங்கு சேவை யாற்றினார்.

இரண்டாம் உலகப்போர் காலப்பகுதிகளில் சுவாமிவிபுலாநந்தர் அவர்கள் இலங்கைக் கடலோரக் காவற்படையில் ஒருபோர்வீரராக கடமையாற்றியது போல நிர்வேத சைதன்யரும் போரால் பர்மாவில் பாதிக்கப்பட்ட இந்தியர்களை பாதுகாக்கும் பணியிலும் பாதிக்கப் பட்டவர்களுக்கான சேவைகளை வழங்குவதற்காகவும் சென்றார். பர்மாவில் தான் சேவை யாற்றியகாலங்களில் அங்குவாழ்ந்த இந்தியர்களால் தான்வழங்கிய சேவைக்காக மிகவும்பாசமுடன் பாராட்டப்பட்டார்.

மக்கள்சேவைகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்த நிர்வேத சைதன்யர் 1943ஆம் ஆண்டு கல்கத்தா இராமகிருஷ்ண சங்கத்தின் தலைமைப் பீடத்தில் அகண்டானந்த சவாமிகளைத் தனது குருவாகக் கொண்டு சந்நியாதீட்சை பெற்றார். இத்தீட்சையின் பயனாக நிர்வேத சைதன்யர் சுவாமி “நடராஜானந்தர்” என்னும் திருநாமத்தை பெற்றார். தொடர்ந்து இராமகிருஷ்ண மடாலயத்தாரின் வேண்டுகோளுக் கிணங்க சுவாமி நடராஜானந்தர் இந்தியாவிலே இராமகிருஷ்ண மிசன் பாடசாலைகளின் முகாமையாளராகச் சேவையாற்றினார்.

இந்தியாவிலிருந்து தாய்நாடு திரும்பி சுவாமி விபுலாநந்தருக்கு பின்பு மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிசனின் கீழ் நிருவகிக்கப்பட்டு வந்த 26 பாடசாலைகளின் முகாமைப் பொறுப்பினை ஏற்று திறம்பட நிர்வகித்தார். 1962ஆம் ஆண்டில் தனியார் பாடசாலைகள் அரசாங்கத்தால் பொறுப்பேற்கப் பட்டதால் மட்டக்களப்பு ஆனைப்பந்தி மகளிர்இல்லம், கல்லடி உப்போடை சிறுவர் இல்லம், காரைதீவு சிறுமியர்இல்லம் ஆகிய மூன்று இல்லங்களையும் தன்பராமரிப்பின் கீழ் கொண்டுவந்தார். அங்கே தன்பராமரிப்பிலிருந்த சிறுவர் சிறுமியர்களின் உடை, உணவு, சுகாதாரம், கல்வி, சமயம், கலை, பண்பாட்டு வளர்ச்சிக்கு தன் சொத்துக்களை செலவு செய்தது மட்டுமல்லாமல் விவசாயம் செய்யும் போடிமார்களின் வயலுக்குச் சென்று நெல் அரிசி தானம் பெற்றும் வீடு வீடாகச் சென்று பிச்சை எடுத்தும் சிறுவர்களின் நல்வாழ்விற்காக தன்னை தியாகம் செய்த ஒரு உத்தம துறவிதான் ஸ்ரீமத்சுவாமி நடராஜாநந்தாஜீ அவர்கள்.

தான் பிறந்த ஊரில் அமைந்துள்ள சாரதா சிறுமியர் இல்லத்திற்கு வரும்போது தனது உறவினரும் சமூகத் தொண்டருமான வைத்தியகலாநிதி மா.பரசுராமன் அவர்கள் வீட்டிற்கும் விஜயம் செய்வார் சுவாமி நடராஜானந்தஜீ. விபுலாநந்தரில் கொண்ட பக்தியும் அவரின் பணிகளை செவ்வனவே ஆற்றி வரும் மேன்மைதங்கிய துறவியான ஸ்ரீமத்சுவாமி நடராஜானந்தஜீ அவர்களிலும் நன்மதிப்பும் மரியாதையையும் கொண்டிருந்தவர் அமரர் மா. பரசுராமன்

அவர்கள். சுவாமிகளின் சிறுவர் பராமரிப்புக்கான தேவைகளை அறிந்து தன்னாலான உதவிகளை இல்லத்திற்கு மனமுவந்தளித்து வந்தவர் அவர் என்பதனை இவ்விடத்தில் சுட்டிக்காட்டுவது பொருத்தமாகும்.

முத்தமிழ்வித்தகர் தமது இளவயதில் அதாவது 55ஆவது வயதில் இறைபதம் அடைந்தார் அதுபோல ஸ்ரீமத் நடராஜாநந்த சுவாமிகளும் தனது 64ஆவது வயதில் 1967ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18ந் திகதி அதிகாலை 4.45மணியளவில் பகவான் ஸ்ரீராம கிருஷ்ணபரமஹம்சரின் திருவுருவப் படத்தினை தனது மார்புடன் அணைத்தபடி சிவபதம் அடைந்தார்.

காரைதீவு மண்தந்த தவப்புதல்வர்கள் வரிசையில் முத்தமிழ்விதகர் சுவாமிவிபுலாநந்த அடிகளாரைத் தொடர்ந்து ஸ்ரீமத்நடராஜாநந்த சுவாமிகளும் கிழக்கிலங்கை மக்களின் மனதில் அழியாப் புகழைப் பெற்றுள்ளார். அவர்களிருவரது நாமம் தமிழ்மக்கள் வாழும்காலம் வரை மறையாது நிலைத்திருக்க அவர்களது பணிகளில் நாமும் தொடர்வோமாக.

✳

"யாராவது உன்னை ஒருமுறை ஏமாற்றினால் அது அவரின் தப்பு ஆனால் அவர் உன்னை மறுபடியும் ஏமாற்றினால் அது உன்தப்பு"

# மரணச்சடங்கின்போது காரைதீவு ஊர்மக்களால் வெளியிடப்பட்ட அஞ்சலி பா.